விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 03 செவ்வாய்க்கிழமை (19.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 335

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## தமிழ்க் கூட்டமைப்பு இந்தியா செல்லும்!

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்து, இந்தியாவுக்கு தகவல்களை வழங்குவதற்காக, கூட்டமைப்

20-ம் பக்கம் பார்க்க

## வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு 70 கோடி செலவு



இலங்கையில் நடைபெற்ற 23-வது பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் 54 உறுப்பு நாடுகளில் 21 நாடுகள் மட்டுமே கலந்து கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாநாட்டுக்கு 14 பில்லியன் ரூபாவை (1400 கோடி ரூபா) அரசாங்கம் செலவு செய்துள்ளது.

21 நாடுகளே மாநாட்டில் கலந்து கொண்ட

20-ம் பக்கம் பார்க்க

## புலிகள்தான் தமிழரின் அரண்



உலகம் பலதைக் கூறினாலும் விடுதலைப் புலிகள் உரிமைப் போராட்ட வீரர்கள். அவர்கள் இருந்த நாட்களில் இன்றைய காலம் போல் தமிழர்கள் அழிக்கப்படவில்லை. அவர்கள் தமிழருக்கு அரண். எமது ஆட்சியில் ஈழத்தின்

20-ம் பக்கம் பார்க்க

# இலங்கை மனித உரிமை விவகாரம்

# அக்கறை செலுத்துகிறது சீனா!

## அதிர்ச்சியில் இலங்கை



மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் முயற்சிகளை எடுக்க வேண்டும் என்று இலங்கையிடம் சீனா கோரிக்கை விடுத்துள்ளது.

பீஜிங்கில் நேற்று செய்தியாளர் சந்திப்பில் பேசிய சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கயின் கங் இந்தக் கருத்தை வெளியிட்டு இலங்கை அரசுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளார்.

"வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு பொருளாதார, சமூக வேறுபாடுகளால், மனித உரிமைகள் பாதுகாப்பிலும் வேறுபாடுகள் இருக்கக் கூடும்.

எனவே குறிப்பிட்ட நாடு, மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் முக்கியமாக முயற்சிகளை எடுக்க வேண்டும்.

அதேவேளை, உலகின் ஏனைய நாடுகள், ஆக்கபூர்வமான உதவிகளை வழங்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் மனித உரிமை விவகாரங்களுக்கு பதிலளிக்கத் தவறினால், வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், அனைத்துலக விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என்று பிரித்தானியப் பிரதமர் விடுத்துள்ள எச்சரிக்கை தொடர்பாக, சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பிய போது,

"இது பொதுநலவாயத்துக்குள் உள்ள விவகாரம். அதேவேளை, இது மனித உரிமைகள் பற்றிய விவகாரம் என்று நான் நம்புகிறேன்.

நாடுகளுக்கிடையில் பேச்சுக்களும் தொடர்பாடலும் இருக்க வேண்டும்.

20-ம் பக்கம் பார்க்க

## சர்வதேச குற்றச்சாட்டுக்கு அரசாங்கத்தின் பதில் உண்டு



### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

சர்வதேச சமூகத்தினால் சுமத்தப்பட்டு வரும் சகல குற்றச்சாட்டுக்களுக்கும் கேள்விகளுக்கும் உண்மைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பதில் உண்டு என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

20-ம் பக்கம் பார்க்க

## படையினர் மூலம் சனல் 4-க்கு அச்சுறுத்தல் விடப்பட்டது

### அதன் செய்தியாசிரியர் தெரிவிப்பு

Channel 4 News

இலங்கையில் தமக்கு பாதுகாப்பு படையினர் மூலம் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதுடன் கண்காணிப்புக்கும் உட்படுத்தப்பட்டதாக சனல் 4 தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் பென் டி பியர் தெரிவித்தார்.

கொழும்பில் வார இறுதியில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு சென்றிருந்த சனல் 4 குழுவினர் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ள நிலையில் அவர் இதனைக் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை காலையில், கொழும்பில் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் எமது அறையின் கதவுக்கு அருகில் 6 பேர் கூடியிருந்தனர். அவர்கள் அறைக்குள் பிரவேசிக்க முயற்சித்தனர்.

இதனையடுத்து நாங்கள் இலங்கையில் இருந்து வெளியேற தீர்மானித்தோம். அவர்கள் தாம் குடிவரவு பொலிஸார் என்று தம்மை

20-ம் பக்கம் பார்க்க

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை புறக்கணிக்க கூட்டமைப்பு முடிவு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு இணைத் தலைவராக அறிவிக்கப்படாத காரணத்தால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அக்கூட்டத்தை முற்றாக புறக்கணிக்க தீர்மானித்துள்ளது என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கான இணைத்தலைமை வழங்கப்படாத காரணத்தினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அந்தக்கூட்டத்தை புறக்கணிக்க தீர்மானித்துள்ளது. அத்தோடு இந்தக்கூட்டத்தை ஒத்திவைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திர சிறியின் இணைத் தலைமையில் இதுவரை காலமும் இடம் பெற்று வந்த

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழகத்துக்குத் தலை; இலங்கைக்கு வால்!

## நழுவிக் கொண்டார் மன்மோகன்

(சென்னை)

கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டுக்கு வெளி விவகார அமைச்சரைப் பங்கேற்க அனுப்பி விட்டு, தமிழக அரசியல் கட்சிகளுக்குத் தலையையும், இலங்கை அரசாங்கத்துக்கு வாலையும் காட்டி இந்தியப் பிரதமர் நழுவியுள்ளதாக தினமணி குற்றம் சுமத்தியுள்ளது.

நழுவியது வாய்ப்பு எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள இப்பத்திரிகையின் நேற்றைய ஆசிரியர் தலையங்கத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தலைநகர் கொழும்பில் பொது நலவாய நாடுகளின் மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. கனடா, மொரீஷியஸ் ஆகிய நாடுகளின் பிரதமர்கள் கலந்துகொள்ளவில்லை.

இலங்கையில் நடந்த இனப்படுகொலையையும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்த போரின்போது அரங்கேற்றப்பட்ட மனித உரிமை மீறலையும் கண்டித்து, அதற்காக பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதாக வெளிப்படையாகவே அறிவித்தனர் கனடா, மொரீஷியஸ் பிரதமர்கள். இந்தியப் பிரதமர் அப்படி அறிக்கை எதுவுமே வெளியிடாமல், தனக்கு பதிலாக வெளியுறவுத் துறை அமைச்சரைப் பங்கேற்க அனுப்பி வைத்து, தமிழக அரசியல் கட்சிகளுக்குத் தலையையும், இலங்கை அரசுக்கு வாலையும் காட்டி நழுவி இருக்கிறார்.

ஒன்று, புறக்கணித்த ஏனைய இரண்டு பிரதமர்களையும்போல, துணிவுடன் இலங்கையில் நடந்த மனித உரிமை மீறலுக்குக் கண்டனம் தெரிவித்து, சர்வதேச விசாரணை கோரியிருக்க வேண்டும். அல்லது, உள்நாட்டு எதிர்ப்பையும் மீறி, இலங்கைக்குச் சென்றிருக்க வேண்டும். பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூனைப் போல, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை பகுதிகளுக்குச் சென்று, அங்கேயுள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, கொழும்பில் நடந்த பொதுநலவாய மாநாட்டிலும், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் நேரிலும் பிரச்சினைகளை எழுப்பி, அதை விவாதப் பொருளாக்கி இருக்க வேண்டும்.

தமிழக அரசியல் கட்சிகள் கூறுவதைப் போல, இந்தியா ஒட்டுமொத்தமாக இலங்கையைப் புறக்கணித்துவிட முடியாது. கூடாது. இந்தியாவின் பல்லாயிரம் கோடி ரூபாய் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக இலங்கை அரசிடம் தரப்பட்டிருக்கும் நிலையில், அந்தப் பணம் முறையாக நம்மவர்களுக்காகச் செலவிடப்படுகிறதா இல்லை தென் இலங்கையை வளப்படுத்த பயன்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டிய கடமை பிரதமருக்கு உண்டு. வடக்கு மாகாணத்தில் புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் விக்னேஸ்வரன் அரசின் முதல் விருந்தாளியாக பிரதமர் மன்மோகன் சிங் போயிருந்தால், அதில் தவறு காண எதுவும் இல்லை. ஆனால் இந்தியாவின் எதிர்ப்பை வலிமையாகப் பதிவு செய்திருக்க வேண்டும்.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு வட மாகாணத்துக்கு விஜயம் செய்த முதல் வெளிநாட்டுப் பிரதமர் என்கிற பெருமையைத் தட்டிக் கொண்டது, ஒரு புறம் இருக்கட்டும். அங்கிருந்த மக்களை சந்தித்தார். வடக்கு மாகாண முதல்வரையும் சந்தித்தார்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவையும் சந்தித்தார். உள்நாட்டுப் போரின்போது நடந்த மனித உரிமை மீறல்கள் மீது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கொழும்பில் பத்திரிகையாளர்களிடமும், ஜனாதிபதி ராஜபக்ஷவிடமும் வெளிப்படையாக வற்புறுத்திவிட்டு நாடு திரும்பி இருக்கிறார்.



நமது பிரதமர் வடக்கு மாகாணத்திற்குப் போயிருக்க வேண்டும். நமது செலவில் இலங்கையில் நடக்கும் வளர்ச்சிப் பணிகளை நேரில் பார்த்திருக்க வேண்டும். அது அந்த மக்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்திருக்கும். நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வது தான் புத்திசாலித்தனம். பிரதமர் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாததில் எனக்கும் வருத்தம்தான் என்று பேசியிருக்கிறார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்.

இலங்கையில் நடந்த இனப் படுகொலைக்காகவும், போரின்போது நடந்த மனித உரிமை மீறல்களுக்காகவும் சர்வதேச விசாரணை வேண்டும் என்கிற கோரிக்கையை இந்தியா ஏற்கிறதா இல்லையா என்கிற கேள்விக்கு இதுவரை தெளிவான பதில் தரப்படவில்லை.

ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு ஒரு ஆலோசனை- இலங்கைக்கு என்று தனியாக ஒரு வெளிவிவகார அமைச்சர் தேவையில்லை.

அந்தவேலையை சல்மான் குர்ஷித் திறம்படச் செய்கிறார் என இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## இலங்கை அமர்வுகளில் பங்கேற்றமை தவறில்லை

### மலேசியப் பிரதமர் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெற்று முடிந்த பொது நலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்றமையில் தவறு எதுவும் கிடையாது என மலேசிய பிரதமர் டாடுக் செரி நிஜாப் ரசாக் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்கு மதிப்பளித்தே அமர்வுகளில் பங்கேற்றதாகத் தெரிவித்துள்ளார். இலங்கை மனித உரிமை நிலைமைகளை கருத்திற் கொண்டு, இந்த அமர்வுகளில் பங்கேற்றிருக்கக் கூடாது என வலியுறுத்தப்பட்டிருந்தது.

பிரதமர் அமர்வுகளில் பங்கேற்றமைக்கு பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். பொதுநலவாய நாடுகள் அமர்வு குறித்தே கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், அது எங்கு நடைபெறுகின்றது என்பது பற்றி கவலைப்பட தேவையில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

## சர்வதேச உறவுகளுக்கு முக்கியம் அளிக்க வேண்டும்

### அமைச்சர் நாணயக்கார தெரிவிப்பு

சர்வதேச உறவுகளுக்கு இலங்கை முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாடு எவ்வளவு சுதந்திரமானது என்பதனை விடவும், சர்வதேச விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் காரைதீவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து இலங்கையை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5494)

## சனல் 4 ஊடகக்குழுவுக்கு விசா; பொது பல சேனா கண்டிக்க வேண்டும்

### ஐ.தே.கட்சி தெரிவிப்பு

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களுக்கு விசா வழங்கியமைக்கு எதிராக பொது பல சேனா ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்கு வந்ததை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய பொது பல சேனா, அவர்கள் இலங்கை வர அனுமதி வழங்கியதை கண்டித்து அலரி மாளிகைக்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் அசோக வனவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களுக்கு விசா கொடுத்ததை கண்டித்து பொது பல சேனா அலரி மாளிகைக்கு எதிரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினால் ஜனாதிபதி பிறந்த நாள் என்பதால் நல்ல உபசரிப்பை பெற்றிருக்கலாம். சிறிகொத்தவில் பிக்குமார் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக ஜாதிக ஹெல உறுமய குற்றம் சுமத்துகிறது.

எனினும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் பௌத்த பிக்குகள் நாட்டின் அதியுயர் பீடமான நாடாளுமன்றத்திற்குள் வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டனர். அந்த சம்பவத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக பிக்குகளின் மர்ம உறுப்புகளை பிடித்தும் துன்புறுத்தப்பட்டனர்.

இதனை மறந்து போன ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய தேசியக் கட்சியினர் பிக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சுமத்துவது வேடிக்கையானது என்றார். (எ-11)

பிள்ளையார் இன்

விசேட உணவுகள்
- மசாலா தோசை (உருளைக்கிழங்கு கறியுடன்) 120/- மட்டுமே
- தோசை / பூரி / சப்பாத்தி (உருளைக்கிழங்கு கறியுடன்) 80/- மட்டுமே

இன்றுமுதல் மாலை 6 மணி முதல் 10 மணிவரை விசேட உணவுகள்
- மரக்கறி புரியாணி / பிரைட் ரைஸ் - 200/-
- சிக்கன் புரியாணி - 300/-
- சிக்கன் பிரைட் ரைஸ் - 250 மட்டுமே

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுனர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ/அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

பிள்ளையார் இன்
தினமும் பு.: வே (Buffet) முறையில் இந்திய சமையற் கலை வல்லுனர்களால் தயாரிக்கப்பட்டு மதிய உணவு 11.30 மணி தொடக்கம் 3 மணிவரை நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

சைவ உணவு - 150 /- மட்டுமே. அசைவ (கோழி) உணவு - 180 /- மட்டுமே.

தொடர்புகளுக்கு - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-5508)

## தொழிற்சங்க போராட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தினரால் நாளை புதன்கிழமை மேற்கொள்ளப்படவிருந்த தொழிற்சங்க போராட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கப் பணிப்பாளர் நாயகத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பிரகாரம்தான் மேற்படி கோரிக்கைகள் தொடர்பான விசேட கவனம் செலுத்தி சாதகமான பதிலை பெற்றுத் தருவதாக உறுதியளித்ததினை அடுத்தே தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக பிற்போடுவதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் சிவகுருநாதர் குரு பீடம் வேதாந்த மடத்தின் 6 ஆவது குரு பீடாதிபதி ஸ்ரீமத் நமசிவாயம் சுவாமிகள் குருபூசை நிகழ்வு இன்று முற்பகல் 11 மணிக்கு வேதாந்த மடத்தில் நடைபெறவுள்ளது.

வேதாந்த மடத்தின் 8 ஆவது குருபீடாதிபதி ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகளின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சுவாமிகளின் சமாதிக்கு விசேட அபிஷேக ஆராதனை இடம்பெற்று திருமுறை பாராயணமும் நடைபெறவுள்ளது. (செ)

Hatton National Bank

அடகுப் பொருட்கள் ஏல விற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி ஆகிய கிளைகளில் 15.10.2012 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகைகள் 19.11.2013 தொடக்கம் 20.11.2013 (செவ்வாய்-புதன்) வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 7.00 வரை இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள எமது யாழ். கிளையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

ஏல விற்பனைத் திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி -

(C-5509)

## இன்று ஒரு தகவல்

# இருட்டு

"இருட்டைக் கண்டால் பயம் உண்டாகிறதே... அது ஏன்?" என்று ஓஷோவிடம் கேட்டார்கள்.

அதற்கு அவர் மனிதனுடைய ஆதிகால வாழ்க்கையில் தொற்றிக் கொண்ட பயம் இது. வேரூன்றி இருக்கிறது இன்னும் போகவில்லை.

மனிதனுடைய எல்லா பணத்தையும் சேர்த்து மொத்தமாக ஒரு மனம் உண்டு.. மனிதர்களின் நினைவு இந்த மொத்த மனதில் பதிந்திருக்கிறது. இந்த மொத்த மனத்தில் இருட்டு பற்றிய பயம் பதிந்து நீடிக்கிறது என்கிறார் அவர்.

இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வராத மனிதர்களும் இன்று அதிகம்பேர் உண்டு. ஒரு ஆள் ஆற்றுக்கு மீன்பிடிக்கப்போனான்.

இன்னும் விடியவில்லை. அதற்குள் வலையை எடுத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான். விடியும் வரை என்ன செய்வது? சும்மா கரையில் உட்கார்ந்து காலாட்டிக் கொண்டிருந்தான்.

காலில் ஏதோ ஒரு சின்னமூட்டை தட்டுப்பட்டது. இருட்டில் அது என்னவென்று சரியாகத் தெரியவில்லை. மூட்டைக்குள் சின்ன சின்ன கற்கள் நிறைந்திருந்தன.

சும்மா பொழுதுபோக வேண்டும் என்பதற்காக மூட்டைக்குள்ளிருந்து ஒவ்வொரு கல்லாக எடுத்து ஆற்றில் வீசிக்கொண்டிருந்தான்.

விடியும் வரைக்கும் வேலை இல்லை என்பதால் இப்படி செய்துகொண்டிருந்தான். கிழக்கே மெதுவாக வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது பொழுது விடியத் தொடங்கியது.

அதற்குள் அந்த மூட்டையில் இருந்த எல்லாக் கல்லையும் வீசியெறிந்துவிட்டான். கடைசியாக ஒரே ஒரு கல் மட்டும்தான் எஞ்சியிருந்தது. வெளிச்சம் வந்ததும் அந்தக் கல்லைப்பார்த்தான்.

அப்படியேதிகைத்துப்போய்விட்டான். அவன் கையில் இருந்தது வெறும் கல் இல்லை... விலையுயர்ந்த இரத்தினக்கல் அது! இருட்டில் என்னவென்று புரியாததால் மூட்டையில் இருந்த எல்லா இரத்தினக் கற்களையும் ஆற்றில் வீசியெறிந்திருக்கிறான்.

இப்பொழுது அவனுக்கு அழுகையே வந்துவிடும் போல் இருந்தது. வாழ்க்கையை வசதியாக்கிக் கொள்ளும் வாய்ப்பு இருந்தும் இருட்டில் அதை இழந்துவிட்டான்.

ஒரு வகையில் அவனுக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்திருக்கிறது. அதனால்தான் அந்தக் கடைசிக் கல்லை எறிவதற்கு முன் வெளிச்சம் வந்து விட்டது!

பலபேருக்கு இந்த அளவுக்குக் கூட அதிர்ஷ்டம் இருப்பதில்லை! வாழ்க்கை என்பது ஒரு பெரிய புதையல். அதைப் புரிந்து கொள்ளாமலே மனிதன் அதை வீசியெறிந்து கொண்டிருக்கிறான் என்கிறார் ஓஷோ.

சில பேருக்கு புரிந்துகொள்ளும் நேரம் வருவதற்கு முன்பே வாழ்நாளெல்லாம் ஓடிப்போய்விடும்.

ஒருவன் சிறிய பையுடன் வந்து கொண்டிருந்தான். அதற்குள் ஏகப்பட்ட நகைகள், இரத்தினக் கற்கள் எல்லாம் இருந்தன.

வந்து கொண்டிருந்தவன் திடீரென அந்தப்பையை அப்படியே ஒரு குளத்தில் வீசியெறிந்துவிட்டான். மகான்கள் தான் இப்படி பற்றில்லாமல் இருப்பார்கள்.

"ஏன் அந்த விலைமதிப்புள்ள பையை வீசியெறிந்து விட்டீர்கள்?" என்று கேட்டார் அவனோடு வந்தவர்.

அவன் மெதுவாக "ஒரு பொலிஸ்காரர் பின்னாடி வந்துகொண்டிருக்கிறார்... அவர் போனபின் இதை எடுப்பேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கில் கண்ணிவெடிகளை அகற்ற பிரிட்டன் 21.28 கோடி ரூபா நிதி உதவி

(கொழும்பு)

இலங்கையில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்ற சுமார் ரூ.21.28 கோடி ரூபா (21 இலட்சம் பவுண்ட்) நிதியுதவி அளிக்க முடிவு செய்துள்ளோம் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன், தனது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதற்கு முன்பாக செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில், இலங்கையில் போரால பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீள் நிர்மாணப் பணிகளுக்கு பிரிட்டன் ஆதரவு அளித்து வருகிறது.

இந்நிலையில் அதன் ஒரு பகுதியாக, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்ற, கூடுதலாக 21 இலட்சம் பவுண்ட் நிதியுதவி அளிக்க முடிவு செய்துள்ளோம் என்று தெரிவித்தார்.

இரண்டு ஆண்டுகளில் வழங்கப்படும் இந்த நிதியுதவியைக் கொண்டு ஆண்டுக்கு 20 இலட்சம் சதுர மீற்றர் பரப்பளவில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்படக்கூடும் எனத் தெரிகிறது.

ஆபத்து நிறைந்த கண்ணிவெடிகளை அகற்றி விட்டு அந்த நிலங்களை உள்ளூர் மக்களிடம் ஒப்படைக்கப்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கண்ணிவெடிகளை அகற்ற இந்த நிதி பயன்படுத்தப்படும்.

கண்ணிவெடி அகற்றப்பட்ட நிலங்களை பொது மக்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்கு பயன்படுத்தலாம். இறுதிக்கட்ட போருக்கு பின்னர் பிரிந்து இருப்போமத்தியில் நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சிகளுக்கும் ஆதரவாகவும் இந்த நிதி வழங்கப்படுகிறது.

இறுதிக்கட்ட போரின் போது இந்த பகுதிகளில் கண்ணிவெடிகளை புதைத்துள்ளனர். இவற்றை அகற்றுவது சிக்கல் நிறைந்த பணி.

உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த சுமார் 70 ஆயிரம் பேரை மீள்குடியமர்த்த ஏற்கனவே லண்டன் அரசு அறக்கட்டளை மூலம் 30 இலட்சம் பவுண் நிதி உதவி செய்துள்ளது.

இறுதிக்கட்ட போரின் போது நடந்ததாக சனல் - 4 வெளியிட்ட வீடியோ ஆவணப்படம் காட்டும் இதயத்தை உறைய வைக்கும் கொடூர போர்க்குற்றம், மனித உரிமை மீறல் சம்பவங்கள் இந்த பகுதியில் நடந்துள்ளன என அவர் கூறினார். (அ-2)

# வியட்நாம் வர்த்தகக்குழு இலங்கைக்கு வருகைதரும்

(கொழும்பு)

வியட்நாம் வர்த்தக குழுவொன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளது.

இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம், இலங்கைக்கான வியட்நாம் தூதரகம் மற்றும் வியட்நாம் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெறும் இச்சந்திப்பில் கலந்து கொள்ள வியட்நாமில் இருந்து 15 பேரைக் கொண்ட குழு ஒன்று இலங்கை வரவுள்ளது.

கொழும்பு - டி.ஆர்.விஜேவர்த்தன மாவத்தையிலுள்ளவர்த்தக சம்மேளன கேட்போர் கூடத்தில் நடைபெறும் வர்த்தகர்களுக்கான சந்திப்பில் கலந்துகொள்ளவே இக்குழு இங்கு வரவுள்ளது.

விவசாயம், தொழிற்சாலை, டீசல் என்ஜின், பற்றிகள், நீண்டகால பாவனைக்குரிய பற்றிகள், ஜெனரேட்டர்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், கைவினைப்பொருட்கள், மருந்துப் பொருட்கள், பாற்பொருட் தயாரிப்புகள், வெதுப்பக பாவனைப் பொருட்கள், உடனடி நூடில்ஸ் வகைகள், எண்ணெய், வாயு, பெற்றொலியப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் உட்பட பல்வேறு உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை இக்குழுவினர் சந்திக்கவுள்ளனர். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 120 |
| தக்காளி | 60 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 25 | 20 | 60 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 25 | 30 | 50 |
| புடோல் | 30 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 240 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 220 | 140 | 220 |
| பாகற்காய் | 60 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 60 |
| பயற்றங்காய் | 40 | 50 | 80 |
| லீக்ஸ் | 60 | 50 | 100 |
| பீற்றூட் | 15 | 20 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 60 |
| போஞ்சி | - | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 25 |
| தேசிக்காய் | 150 | 170 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 35 - 45 |

## இராசி பலன்

*19.11.2013*
*(கார்த்திகை 03, செவ்வாய்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*துதியை முன்னிரவு 11.30 மணிவரை*
*ரோகினி பிற்பகல் 3.54 மணிவரை*
*இராகுகாலம் 3.09-4.39 மணிவரை*
*சுபநேரம் 10.39-12.09 மணிவரை*
*அமிர்த சித்தம்*

**மேடம்**

யோகமான நாள், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும், சுப செய்திகள் வந்து சேரும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்**

பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பல நாட்களாக பார்க்காமலிருந்த உறவினர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில்நலன் கருதிய பயணம் ஏற்படலாம்.

**மிதுனம்**

அம்பிகை வழிபாட்டால் ஆர்வம் காட்டுவீர்கள், பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, புதிய நட்பால் பொருள் விரயங்கள் ஏற்படலாம்.

**கடகம்**

அதிர்ஷ்டகரமான நாள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள்.

**சிங்கம்**

புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி**

சாமர்த்தியமான நடவடிக்கைகளால் சாதனை படைக்கும் நாள், நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வு நீங்கும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**துலாம்**

விட்டுக் கொடுத்துச் செல்வதால் அமைதி கிடைக்கும், அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, செலவுகள் அதிகமாகும், பிரயாண பயமுண்டு.

**விருச்சிகம்**

அபூர்வ சந்திப்புண்டு, இரவு, பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, கௌரவமான நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**தனுசு**

இனத்தார் பகைமாற எடுத்த முயற்சிகள் வெற்றிதரும், உடல் நலனில் புத்துணர்வு ஏற்படும், காரிய அனுகூலமுண்டு, வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**மகரம்**

மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வியாபார விருத்தியுண்டு.

**கும்பம்**

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், பயணங்கள் தித்திக்க வைக்கும், தொழில் வளர்ச்சிக்கு அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்**

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், இழுபறியாக இருந்த பிணக்குகளில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

வளவன்

# வலிகண்டி கிராமத்தில் குடிநீர் தாங்கி அமைப்பு

(பொற்பதி)

பருத்தித்துறை பிரதேசசபையினரால் 1.6 மில்லியன் ரூபா செலவில் குடிநீர் தாங்கியொன்று குடத்தனை வலிகண்டி கிராமத்தில் அமைக்கப்பட்டு நேற்றைய தினம் மக்களின் பாவனைக்கு நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.


இந்நீர்த் தாங்கியின் திறப்பு விழா நேற்றைய தினம் குடத்தனை காளி வயல் வீரகத்தி ஆலய முன்றலில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் இடம் பெற்றது.

நீர் விநியோகத்தினை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன், வடமாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

குடத்தனை வலிகண்டி கிராமத்திலுள்ள தெற்குப் பகுதி உவர் நீராக காணப்படுவதனால் நன்னீருக்காக மக்கள் நீண்ட தூரம் சென்று குடிநீர் பெற்றனர்.

இவ் அவல நிலையை போக்கும் முகமாக குடத்தனை வலிகண்டி கிராமத்தில் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு குழாய்கள் ஊடாக குடத்தனை தெற்குப் பகுதி மக்களுக்கு நன்னீர் விநியோகம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக 90க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்னீரைப் பெறக் கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-64)




# நீலக்கால் நண்டு பிடிப்பதற்கான புதிய நடைமுறை விரைவில் அறிமுகம்

(கும்பளை)

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கடற்பிரதேசங்களிலும் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நீலக்கால் நண்டு பிடிப்பதற்கான புதிய நடைமுறைகள் தீவிரமாக செயற்படுத்தப்படவுள்ளன. "நீலக்கால் நண்டின் அபிவிருத்தியும் பாதுகாப்பும்" எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கு கடந்த 16 , 17 ஆம் திகதிகளில் வவுனியா நெல்லி ஹோட்டலில் இடம்பெற்ற போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கடற்றொழில் தொடர்பான மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்பிரதேசங்களில் 4 1/2 அங்குலத்திற்கு குறைவான நண்டு வலைகள் பயன்படுத்துதல், தங்கூசி வலைகள் பயன்படுத்தல், களங்கட்டிகளில் 20 அடிக்கு மேலான கம்புகள் பயன்படுத்துதல், சிறுநண்டு வலைகள், இறால் கூடுகள் என்பன பயன்படுத்தப்படுவதை நிறுத்துதல் வேண்டும்.

இவற்றைமீறி வலைகள், வள்ளங்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்படும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்தோடு ரோலர் இழுவைப் படகுகளைப் பயன்படுத்துவதையும் தடை செய்ய வேண்டுமென்றும் இந்திய இழுவைப் படகுகளின் தொல்லை தொடர்பில் கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனா ரட்ணவின் கவனத்துக்குக் கொண்டு வந்து பேச்சு நடத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட தொழில் உபகரணங்களுக்குப் பதிலாக மீனவர்களுக்கு மாற்று மீன்பிடி உபகரணங்கள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் நா. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து நாட்டின் அனுசரணையுடன் எஸ்.ஈ.ஏ.எஸ்.எல் நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் வடமாகாணத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9-19)

# கவனிப்பார்களா?



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் தேநீர்கடைத் தொகுதிக்கு முன்பாகவுள்ள தொலைத்தொடர்பு கம்பம் முறிந்து விழும் அபாயநிலையில் காணப்படுகிறது.

சன நடமாட்டம் அதிகமாகவுள்ள குறித்த பகுதியில் இவ்வாறு அபாய நிலையிலுள்ள இத் தொலைத் தொடர்பு கம்பத்தால் அவ்விடத்தினூடாக பயணிப்போர் மத்தியில் பெரும் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

குறித்த தொலைத்தொடர்பு கம்பத்தின் அடிப்பகுதி மிகவும் நலிந்த நிலையில் எவ்வேளையிலும் முறிந்து விழக்கூடிய அபாயநிலையில் உள்ளது.

எனவே இதனால் ஏற்படவிருக்கும் விபரீதத்தை தடுப்பதற்கு உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் மற்றும் அப்பகுதி வர்த்தகர்கள் கோரிக்கை ஒன்றை விடுக்கின்றனர். (அ-5)

# நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச் சேவை நேரம் அறிவிப்பு

நெடுந்தீவு – குறிகாட்டுவான் படகுச் சேவைகளின் நேர அட்டவணை நெடுந்தீவு பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் குமுதினிப் படகு சேவையில் ஈடுபடவுள்ளது. அதன்படி நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு காலை 6.30 க்கும் பிற்பகல் 2.30 க்கும் குமுதினி படகுச் சேவை நடைபெறும். பின்னர் குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கு காலை 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் இச் சேவை நடைபெறும்.

செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் தனியார் படகும் குமுதினியும் சேவையில் ஈடுபடவுள்ளன.

இந்நிலையில் செவ்வாய்க்கிழமை தனியார் படகின் சேவை நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கு காலை 6.30 க்கு சென்று பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் நெடுந்தீவுக்கு திரும்பவுள்ளது.

அதே நாளில் குமுதினிப் படகு காலை 7.30 க்கும் பிற்பகல் 2.30 க்கும் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானை சென்றடையவுள்ளது. பின்னர் குறிகாட்டுவானிலிருந்து காலை 9 மணிக்கும் பிற்பகல் 4 மணிக்கும் புறப்பட்டு நெடுந்தீவுக்கான சேவையில் ஈடுபடும். அத்தோடு வியாழக்கிழமை தனியார் படகு மட்டும் சேவையில் ஈடுபடவுள்ள நிலையில் காலை 6.30க் கும் பிற்பகல் 2.30 க்கும் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் செல்லும். பின்னர் குறிகாட்டுவானிலிருந்து காலை 9 க்கும் பிற்பகல் 4 மணிக்கும் புறப்பட்டு நெடுந்தீவை சென்றடையும். (அ-9)

# காசோலை மோசடி நபருக்கு பிடியாணை

(கரணவாய்)

நெல்லியடிப் பிரதேசத்தில் காசோலை மோசடி செய்த ஒருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நெல்லியடி நகரப் பகுதியில் கைத்தொலைப் பேசி கடை வைத்திருந்த உரிமையாளர் இலத்திரனியல் பொருட்களை நபரொருவரிடம் பெற்றுவிட்டு காசோலையை வழங்கியுள்ளார்.

குறித்த நபர் வங்கியில் காசோலையை சமர்ப்பித்த போது அக் காசோலைக்கான பணம் வங்கி இருப்பில் இல்லையென வங்கியாளர்களினால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து கடை உரிமையாளருக்கு எதிராக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் காசோலை மோசடியில் ஈடுபட்ட நபர் தலைமறைவாகியுள்ளனர்.

நெல்லியடிப் பொலிஸார் காசோலை மோசடி செய்த நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில், காசோலை மோசடி செய்த நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் பருத்தித்துறை நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. (அ-9-60)




# தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் இன்று

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள மீசாலை பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 1.30 க்கு மீசாலை பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் விருந்தினர்களாக மன்ற உறுப்பினர்கள் அ. பாலமயூரன், பொ. செல்வரட்ணம், ப.ஶ்ரீகரன் ஆகியோருடன் மன்ற செயலாளர் கா.சண்முக தாஷன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.கிருபாகரன், ஓய்வு பெற்ற நூலகர் திருமதி க.கணேசானந்தம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-9-29)





சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையின் நுழைவாயில் திறப்பு விழாவின் போது தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் மங்கல விளக்கேற்றுவதையும் தந்தையாரின் நினைவாக நுழைவாயிலை அமைத்துக் கொடுத்த டாக்டர் எஸ்.அம்பிகைபாகன் நுழைவாயிலை திறந்து வைப்பதையும் நுழைவாயிலையும் படங்களில் காணலாம்.

# எம்மைப் பேசு பொருளாக்காது எமது விடுதலையை துரிதப்படுத்துங்கள்

## தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

பல்வேறு அரசியல் காரணங்களினால் பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுவிக்க கோரியும் தமது விடுதலைக்காக உரிய அதிகாரிகளிடம் கலந்துரையாடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பூசா சிறைச்சாலையில் இருந்து எழுதும் மடல்,

முதலில் நடந்துமுடிந்த தேர்தலில் வெற்றி பெற்ற முதலமைச்சராகிய உங்களுக்கும் மற்றும் வெற்றிபெற்ற அனைவருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் சார்பாக வாழ்த்தினை தெரிவிக்கின்றோம்.

இந்த வெற்றியானது பல வடுக்களைக் சுமந்துள்ள எம்மைப் போன்றவர்களுக்கும் எமது உறவுகளுக்கும் புத்துணர்வைத் தருகின்றது . இருப்பினும் , பலவற்றை நம்பியும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் எமக்கு இறுதியில் ஏமாற்றம் மட்டுமே மீதமாகவுள்ளது .

போராட்டத்தால் பாதிப்புற்ற உறவுகள் பலர் வாழவழியின்றி இருக்கிறார்கள் . வருடக்கணக்கில் , மாதக்கணக்கில் தடுப்பில் இருக்கும் எம்மைப்போன்ற அரசியல் கைதிகளின் நிலை என்ன?

கூட்டமைப்பினரிடம் இருந்து ஆரம்பம் முதலே பல உறுதிப்பாடுகளும் வாக்குறுதிகளும் வழங்கப்பட்டன . ஆனால் இன்று வரை எதுவுமே நடைபெறவில்லை . எமது குடும்பங்கள் சாவின் விளிம்பில் உள்ளன. எமக்காக வாதாட சட்டத்தரணிகள் இல்லாத நிலையில் விடுதலையும் கேள்விக்குறியாகவே உள்ளது.

சாதாரண சவர்க்காரம் ஒன்று வாங்குவதற்கும் கூட பணமின்றி நாம் இங்கிருக்கின்றோம். ஆனால் நீங்களோ அமைச்சுப் பதவிகளுக்கு சண்டை போடுகின்றீர்கள். அது எமக்கு மிகுந்த மன வருத்தத்தை தருகின்றது .

தயவுசெய்து எம்மைக் காட்சிப் பொருட்களாகவும் மேடைப்பேச்சுக்களுக்கும் பேசுபொருளாகவே மட்டும் பயன்படுத்தாமல் எமது விடுதலைக்கும் உதவிசெய்யுங்கள்.

எமது விடுதலைக்குரிய செயற்பாடுகளை விரைவில் தாங்கள் முன்னெடுக்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# சனல் 4 ஊடகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

## உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனீஸ்

(கொழும்பு)

சில நாடுகளின் தலைவர்கள் புலம்பெயர் தமிழர்களை பிழையாக வழிநடத்தி வருவதாக பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் டாக்டர் கிறிஸ் நோனீஸ் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில நாடுகளின் தலைவர்கள் இலங்கைக்கு எதிராக கடுமையான கருத்துக்களை வெளியிடுவதன் பின்னணியில் புலம்பெயர் தமிழர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

ஒரு சில புலம்பெயர் தமிழர்கள் இவ்வாறு யுத்த நிறைவிற்கு அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.எனினும், அதிகளவான புலம்பெயர் தமிழர்கள் நல்லவர்கள்.

மிகக் குறைந்தளவிலான புலம்பெயர் தமிழர்கள் பயங்கரவாதத்தை போஷித்து வந்தனர். யுத்தத்திற்காக பணத்தை செலவிட்ட சில புலம்பெயர் தமிழர்கள் தற்போது வேறு பிரசார நோக்கங்களுக்காக பணத்தை செலவிட்டு வருகின்றனர்.

சில வெளிநாட்டுத் தலைவர்கள் இலங்கை தொடர்பில் வெளியிட்ட கருத்துக்களை பொருட்படுத்த வேண்டியதில்லை தமது, உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தத் தலைவர்கள் கருத்து வெளியிடுகையில், அவர்களிடம் எப்போது அவரது நாட்டின் தேர்தல் நடைபெறவுள்ளது என்பதைப் பற்றி விசாரித்தால் அவர்களது நோக்கம் அம்பலமாகிவிடும். பிரித்தானியாவின் சனல்4 ஊடக நிறுவனத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வது குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

சனல் 4 ஊடகத்தின் தகவல்களைப் பெரும்பாலானவர்கள் கண்டு கொள்வதில்லை.

இவ்வூடகம் பிரித்தானியாவில் பிரபல்யமானதல்ல என அவர் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# நிதிக் குழு தெரிவு

(தும்பளை)

நெல்லியடியில் அமைந்துள்ள ஐங்கரன் பொழுது போக்குக் கழகத்தின் சமூக பணிக்கும் கல்வி வளர்ச்சிக்குமான நிதிக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் குழுவின் தலைவராக த.ஜெயரூபன், செயலாளர் ஐ.விக்கினேஸ்வரன்,பொருளாளர் ஆர்.சுரேறஞ்சன், உப தலைவர் எஸ்.சுரேந்திரா, உப செயலாளர் அ.அருளானந்தசோதி, உறுப்பினர்களாக மு.வேதாபரணம், வி.கமலநாதன், ம.மயூரன், வை.பற்றிக், கி.வரதராஜன், தி.மணிக்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக் கழகத்தின் நிதியிலிருந்து 10 வீதமான பகுதி சமூக பணிகளுக்கும் கல்வி வளர்ச்சிக்காகவும் செலவிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-9-19)

# நீரில் மூழ்கிய சிறுவன் மாயம்

(கொழும்பு)

நீராடச் சென்ற சிறுவன் ஒருவன் மோதரை - காக்கைத்தீவு கடற்பரப்பில் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த சிறுவனே காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவனைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருவதோடு மோதரை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா : 35.5 செவ் 7 ல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: BS.c, MSc, PG Dip in Management / Development Assistant<br>தொ.இ: B/2559 | பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா : 30 செவ் 4 ல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: A/L / வியாபாரம்<br>தொ.இ: B/2562 |
| பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 3<br>கி.பா : 0.16 உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BA / பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: B/2565 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா : 49.5 உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: A/L / லண்டன் (Student Visa)<br>தொ.இ: B/2568 |
| பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா : 37 சூரி செவ் 9 ல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி / கணக்கீட்டு உதவியாளர்<br>தொ.இ: B/2560 | பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா : 38 செவ் 7 ல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: O/L / கமம்<br>தொ.இ: B/2564 |
| பிறப்பு: 1984 இந்து (Kuru)<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா : 57 உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்: BBA / பட்டதாரி பயிலுநர்<br>தொ.இ: B/2566 | பிறப்பு: 1985 இந்து (Mukkukan)<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா : 34 செவ் 4 ல்<br>உயரம்: 5’10"<br>தகைமை/தொழில்: O/L / மலேசியா<br>தொ.இ: B/2570 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி





குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை
Northern Central Hospitals
நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்
வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:
கண் சத்திர சிகிச்சை

விசேட நிபுணத்துவம் வாய்ந்த கண் சத்திர சிகிச்சை நிபுணரால் சகல கண்சத்திர சிகிச்சைகளும் குறைந்த செலவில் மேற்கொள் ளப்படுகின்றன. நாளாந்த கண் கிளினிக்குகளும் நடைபெறுகின்றன.
காது மூக்கு தொண்டை சத்திர சிகிச்சை
விசேட வைத்திய நிபுணரால் உடனுக்குடன் நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் மேற்கொள்ளப் படுகின்றது.

(சி/5239)
Dentel Surgery (Orthodontic) சகல விதமான பற்சிகிச்சைகள்

பற் சிகிச்சை நிலையத்தில் பல் கட்டுதல் பல்முடி போடுதல் பாலமிடுதல் என்பவற்றுடன் சகல பற்சிகிச்சைகளும் orthodontic சிகிச்சையும் தினமும் மேற்கொள்ளப்படுகின்றன.
342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com




# சீர்மையின் செயல்வடிவம் ஸ்ரீஸ்கந்தநாதம்

வளம் கொழிக்கும் யாழ். மாண்ணில் சைவமக்கள் மத்தியிலே புகழோடும் பெருமையோடும் வாழ்ந்த திரு. திருமதி ஆறுமுகம் தம்பதிகளின் மூத்த புதல்வனாய் அவதரித்து கல்விப் பணியோடு சமூகப் பணியையும் சுமார் 35 வருடங்கள் மிகவும் சிறப்புடனும் விருப்புடனும் ஆசிரியராக, ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் ஆசானாக, ஆசிரிய கலாசாலையின் ஆற்றல் மிக்க அதிபராக, நேர் சிந்தை கொண்ட தென்மராட்சி வலயத்தின் நிர்வாக கல்விப் பணிப்பாளராக, பல்பரிமாண வடிவங்களை தனதாக்கி சீரிய முறையில் சேவையாற்றி நிறைமனிதன் என்ற தகைமையை பெற்று அண்மையில் மணிவிழா நாயகனாக வலம் வந்த ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பற்றிய ஆற்றல்மிக்க அனுபவ பிரசவிப்பு ஒன்றே ஸ்ரீஸ்கந்த நாதம் எனும் மணிவிழா மலராகும். இம்மலர் பற்றி பகிர்ந்து கொள்வதே இப்பந்தியின் நோக்காகும்.

மணிவிழா நாயகனின் புன்முறுவல் பூத்த புகைப்படத்தை அட்டைப்படமாக தாங்கி சுமார் 155 பக்கங்களை தனதாக்கி பிரசவித்த இம்மலரை நல்லை திருஞானசம்பந்த ஆதீன குரு முதல்வர், யாழ். மறைமாவட்ட குரு முதல்வர், கவிச்சக்கரவர்த்தி கம்பவாரிதி ஆகியோரது ஆசிச் செய்தி மலரை மிளிரச் செய்கின்றது.

வெறுமனவே வாழ்த்துரைக்கும் ஆசிச் செய்திக்கும் இடம்கொடுப்பதை நோக்காக கொள்ளாது எமது எதிர்கால சமூகம் தமது ஆளுமை வளர்ச்சிக்காகவும் அறிவியல் வளர்ச்சிக்காகவும் கருத்தூன்றிக் கற்றறிய வேண்டிய பல்தகைமை கொண்ட புலமையாளர்களின் வெளிப்பாடுகளை உள்ளடக்கிய இருபது கட்டுரைகள் மலரினுள் இடம்பிடித்தி ருப்பது மேற்குறித்த மலரின் பெறுமதியை உணரச் செய்கின்றது.

அந்த வகையில் யாழ்/ புத்தூர் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் இ.கோகுலராகவனின் பணியும் பயனும் எனும் கட்டுரை மணிவிழா நாயகனின் மாண்பை பவ்வியமாய் பறைசாற்றி நிற்பது பாராட்டுத்தற்குரி யது.

அதேபோன்று ஆசிரியகாலங்களின் ஆரம்ப காலம் என்பது ஆத்ம திருப்தியும் அடையாளத்தின் திறவுகோல் என்பதற்கேற்ப விழா நாயகனின் உள்ளத்தின் உணர்வின் வரிகளாக எனது பளை மகா வித்தியாலய வாழ்வுக் காலம் எனும் கட்டுரை பளை மத்திய கல்லூரியினதும் பச்சிலைப் பள்ளிப் பிரதேசத்தினதும் அக்குடிமக்களினதும் மகோன்னதமான சிறப்பினையும் உயர்வையும் திறம்பட வெளிப் படுத்தி நிற்கின்றது.

அத்துடன் ஆசிரியத்துவம் எனும் இவரது கட்டுரை ஒவ்வொரு ஆசிரியனும் தன்னை யும் தனது பணியையும் சுயமதிப்பீட்டிற்குட் படுத்தி உலகியல் அறிவோடும் உயர்குணப் பண்போடும் செயற்பட வேண்டியதன் அவசி யத்தை அன்புரிமையோடு மீள வலியுறுத்தி உள்ளது.

மேலும் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதனின் விளைதிறன் மிகக் கூட்டு முகாமைத்துவம் எனும் கட்டுரை அனைத்து வகையான நிர்வாகிகள், அரசியல்வாதிகள் ஆகியோர் கற்றறிந்து பார்த்து பின்பற்ற கூடியதாகும்.

அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சசிகலா குகமூர்த்தியின் கல்வியின் பண்பு தரவிருத்தி பற்றிய பன்முக நோக்கு எனும் படைப்பானது சமகால கல்விச் செயற்பாடுகளின் பின்னடைவு பற்றியும் எதிர்கால விருத்திக்கு ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்ட விரிவாக்கம் மீள் வடிவில் மீளமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து சிறப்பாக வெளிக் கொணரப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டத்தில் தலைமைத்துவ திறன்களை வளர்த்தல் தொடர்பான பேராசிரியர் க.தேவராஜா அவர்களது கட்டுரை சமகாலத்தில் மாணவர்கள் அறிவை வளர்த்துக் கொள்ள முற்படுகின்ற வேகத்திற்கேற்ப தலைமைத்துவ திறன் விருத்திக்கான நிலை பற்றாக்குறையில் இருப்பதையும் தலைமைத்துவத்தின் வகைகள் பற்றியும் நிறுவனம் ஒன்றின் வளர்ச்சியானது திறன் மிகு தலைமைத்துவத்திலேயே தங்கியுள்ளது என்பது பற்றியதாக அமைகின்றது.

மேலும் மூதறிஞர் சொக்கன் நினைவுப் பேருரை தொடர்பாக விழா நாயகனின் யாழ்ப்பாண கல்விப் பாரம்பரியங்கள் தொடர்பான வரலாற்றுப் பார்வை அனைவரையும் முன்னோக்கிய 83 வருட கால வரலாற்றின் பரிமாணத்தை உணரச் செய்யும் வகையில் அமைந்துள்ளது.

இவ்வாறே கணித பாட அபிவிருத்தியில் அதிபரின் பங்கு எனும் தலைப்பிலான ஊரெழு கணேசா வித்தியாலய அதிபர் சி. திரிகரன் என்பவரது கட்டுரை பலாலி கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் இ.மருதலிங்கத்தின் யாழ். பாடசாலை மட்டத்தில் தமிழ் மொழிப் பாடப் போதனை அவதானிப்பு எனும் ஆய்வுப் படைப்பு கல்வி தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்தும் புதிய தொழில்நுட்பத்துறை பாடப் பிரவேசம் பற்றியதான சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கைலாசப்பிள்ளையின் கட்டுரை என்பன வெவ்வேறுபட்ட கோணங்களில் அதாவது மாணவர்களை மையமாகவும் பரீட்சை சித்தியடையும் நிலையினை மையமாகவும் பெற்றோரை இவ்விடய அறிவினுள் உள்வாங்கும் தேடலாகவும் அமைந்துள்ளன.

இவற்றுடன் பலாலி ஆசிரிய கலாசாலையின் ஓய்வுநிலை அதிபர் ஆர்.எஸ்.நடராசா அவர்களது வாசிப்பீர் வளம் பெறுவீர் எனும் கட்டுரை, பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களின் ஆக்கமாகிய உளவியலில் புதிய வளர்ச்சி மற்றும் சூழலியல் உளவியல் பற்றிய கட்டுரை இறையுணர்வின் விஞ்ஞான அடிப்படை எனும் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசா ஆகியோரின் ஆக்கம் என்பன மணிவிழா மலரை மேலும் மெருகூட்டச் செய்துள்ளது.

அதேபோன்று இலத்திரனியல் பொறியியலாளரான வி.ஸ்ரீவித்தகனின் மருத்துவ விஞ்ஞானமும் பொறியியலும் எனும் அறிவியல் சார்ந்த கட்டுரை ஆழமான கருத்தியல் வெளிப்பாட்டை அழகாக சுட்டி நிற்கின்றது.

சிறுவர் பாதுகாப்பு உள சமூக உத்தியோகத்தர் த.இரவிமோகனின் சிறுவர் உலகை வளம்படுத்துவோம் எனும் கட்டுரை காலத்தின் தேவையறிந்து சிறுவர் துஷ்பிரயோகம், அவற்றைப் பாதுகாத்துக்கொள்ளும் செயல் ஒழுங்கு, சட்டப் பாதுகாப்பு விடயங்களை நுணுகி ஆராய்ந்து வெளிவந்திருப்பது வரவேற்கக் கூடியதொன்றாகின்றது.

கல்வியியற்றுறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களின் அபிவிருத்தியும் கல்விச் செலவும் பற்றிய விழிப்புணர்வுக் கட்டுரை கல்வியியலாளர்களை ஒருகணம் சிந்திக்க வைப்பதுடன் கட்டுரையின் நோக்கங்களின் உப தலைப்புக்களூடாக மிகவும் தெளிவாக தரவுகளின் அடிப்படையில் சான்றாதாரங்களுடன் கருத்துக்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளமையும் ஒரு சிறப்பம்சமாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் சட்டத்து றைத் தலைவர் கலாநிதி க.கலாமணி அவர்களின் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயனுள்ள குறிப்புக்கள் எனும் கல்வித்தரிசன வெளிப்படுத்துகை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம் அவர்களது வகுப்பறை முகாமைத்துவத்தின் ஆசிரியர் எனும் பங்குதாரர் எனும் கட்டுரை ஆகியன கல்வி உலகில் சேவையாற்றும் அனைவரும் நிச்சயமாக வாசித்தறிந்து மனதில் நிலைநிறுத்திக்கொள்ள வேண்டியதாகவும் காணப்படுகின்றது.

அநேகமாக மணிவிழாக்காணும் நாயகர்களுக்காக சம்பிரதாயபூர்வமாக வெளியீடு செய்யப்படும் மணிவிழா மலர்கள் அவ்விழா நாயகனின் புகழ்பாடும் வரிவடிவங்களை உள்ளடக்கி வெளிவருகின்ற நிலையில் இருந்து மாறுபட்டு மேற்குறித்த ஸ்ரீஸ்கந்தநாதம் அறிவுடை பெருந்தகைகளின் சிந்தனை சிதறல்களை தாங்கிய வண்ணம் சமூகத்தின் நிலைபேற்றுக்கான கல்வி, வரலாறு, மொழி, விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், உளவியல், அறிவியல், தலைமைத்துவம். பணித்துறையாட்சி, சிறுவர் உரிமை, வகுப்பறை முகாமைத்துவம் போன்ற பன்முக ஆளுகையாளர்களின் விடயங்களையும் தாங்கி புகைப்படங்களுடனும் முழுமைபெற்று பிரசவித்துள்ளமை பல பத்து அறிஞர்களின் வாழ்த்து ரைகளோடும் ஏற்றம் கண்டு நிறைவுற்றதையும் நினைவு கூறியே ஆகவேண்டும்.

சிந்தனை விருத்தியில் சிறந்து விளங்க வேண்டும் என சிந்திக்கும் நம் சமூகம் ஸ்ரீஸ்கந்தநாதம் எனும் நடமாடும் அறிவு நூலகப் பெட்டகத்தை உள்வாங்கித் தமது ஆற்றலையும் ஆளுமையையும் வளர்த்துக் கொள்ள முயற்சி க்க வேண்டும் என்பது இன்றியமையாததாகின்றது.

**தி.அபராஜிதன் (ஆசிரியர்)**
**யா/கச்சாய்**
**அ.த.க.பாடசாலை**

# மன்மோகன் வராமை கவலை தருகின்றது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இலங்கையின் பொதுநலவாய அமர்வில் பங்கேற்காமை குறித்து தாம் கவலையடையவதாக இலங் கையின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவி த்துள்ளார்.

இந்திய செய்தித்தாள் ஒன்றுக்கு கருத்துரைத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மன்மோகன்சிங் கொழும்பு பொதுநலவாய மாநாட்டில் பங்கேற் றிருந்தால் இந்தியாவின் காத்திர த்தை, மாநாட்டில் நிலை நாட்டியி ருக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மன்மோகன்சிங் இலங்கை வராமை துரதிர்ஷ்டவசமானது என்று குறிப்பிட் டுள்ளார்.

மன்மோகன்சிங் இலங்கை யின் நெருங்கிய நண்பர். எனவே, அவர் இலங்கை மாநாட்டில் பங்கே ற்றிருக்க வேண்டும் என்று பசில் ராஜபக்ஷ குறிப்பட்டுள்ளார். (அ-2)

# வங்கப் பிரதமரை சந்தித்தார் அமைச்சர் பவித்ரா

(கொழும்பு)


பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹானாவுக்கும் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சிக்குமிடையில் நட்புறவான பேச்சுவார்த்தையொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கும் பங்களாதேஷிற்கும் இடையில் மின்சக்தி எரிசக்தி துறைகளிலான முன்னேற்றம் தொடர்பாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய பிரமுகர்கள் மண்டபத்தில் இச்சந்திப்பு நடை பெற்றது.

இதன்போது எதிர்காலத்தில் பிராந்திய நாடுகளில் ஏற்படக்கூடிய மின்சக்தி நெருக்கடிகளைச் சமாளிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இரு தலைவர்களும் ஆராய்ந்தனர்.

இம்மாநாடு பங்களாதேஷ், இலங்கை யிடையிலான உறவுகள் மேலும் வளர துணை புரிந்ததாக பங்களாதேஷ் பிரதமர் தெரிவித்தார். (அ-2)





சென்.சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 14 ஆம் திகதி இடம் பெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட் டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் பாடசாலை அதிபர் இ. கிறிஸ்ரபெல் உரையாற்றுவதையும் அருட்தந்தை ரவி மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# குடிமக்களுக்கு ஜனநாயக சூழலை ஏற்படுத்துவோம்

## பொதுநலவாய தலைவர்கள் உறுதி

**(கொழும்பு)**

**கொழும்பில் நடந்து முடிந்துள்ள பொதுநலவாய அரசு தலைவர்களின் 23 ஆவது உச்சிமாநாட்டில் சர்வதேச தலைவர்கள் தமது இலக்குகளால் சில இணக்கப்பாடுகளை வெளியிட்டிருக்கின்றனர்.**

தமது அனைத்து குடிமக்களும் ஜனநாயக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உரிய சூழலை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து பொதுநலவாய தலைவர்களும் உறுதியெடுத்துக் கொண்டுள்ளனர்.

ஜனநாயக கலாசார பண்பாடுகளை பேணுவதும் மேம்படுத்துவதும் அரசாங்கங்களின் வேலை மட்டுமன்றி அதில் அரசியல் கட்சிகளுக்கும் சிவில் சமூகத்துக்கும் பங்கு இருக்கவேண்டும் என்றும் அரசு தலைவர்கள் உடன்பட்டுளளார்கள்.

பொதுநலவாய நாடுகளின் குடிமக்களை பாதுகாப்பதற்கு சட்டத்தின் மேலான ஆட்சியே இன்றியமையாத விடயம் (Rule of law) என்றும் நீதித்துறையை நேர்மையாகவும் சுதந்திரமாகவும் பக்கச் சார்பற்ற வகையிலும் பேணுவதற்கும் தலைவர்கள் மீண்டும் உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள்.

இலங்கையில் ஊடகச் சுதந்திரமும் மதச் சுதந்திரமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அண்மைக் காலங்களில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன

எல்லோரும் அபிவிருத்தி அடைவதற்கான உரிமை உட்பட சிவில், சமூக, அரசியல், கலாசார உரிமைகளை பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் தமக்குள்ள பொறுப்பை அதன்படியே நிலைநாட்டு வதற்குமாக இம்முறை இம்மாநாட்டின் தலைவர்கள் உறுதியெடுத்துள்ளனர்.


பொதுநலவாய நாடுகளின் ஊடக சுதந்திரத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கும் இலங்கையில் நடந்துமுடிந்துள்ள உச்சிமாநாடு இணக்கம் கண்டிருக்கிறது.

ஆயுத மோதல்களின்போது கோழைத் தனமாக புரியப்படும் பாலியல் வன்முறைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு உடன்பட்டுள்ள தலைவர்கள், அவ்வாறான பாலியல் கொடூரங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடல் மற்றும் உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்துவது மட்டுமன்றி சமூகத்திலும் மோசமான விளைவுகளை கொண்டு வரும் என்பதையும் அவர்களுக்கு தெளிவுபடுத்தினர்.

சிவில் சமூக அமைப்புகளை ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் தலைவர்கள் உடன்பட்டுள்ளார்கள்.

பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக அயராது உழைப்பதையும் அவர்கள் தமது இலக்காக அறிவித்துள்ளார்கள்.

வறுமையை ஒழிப்பது தான் உலகம் இன்று எதிர்நோக்குகின்ற மிகப்பெரிய சவால் என்று உணர்ந்திருக்கின்ற பொதுநலவாய தலைவர்கள், அதற்காக நீடித்து நிலைத்திருக்கக்கூடிய, அனைத்து தரப்பையும் உள்வாங்கிக்கொண்ட சமத்துவமான அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கான கொழும்பு பிரகடனத்திலும் நேற்றுமுன்தினம் கைச்சாத்திட்டிருக்கிறார்கள். (அ-2)



புற்றளை மகாவித்தியாலய அதிபர் ஆ.சிவநாதனிடம் மாணவர்களுக்கு வழங்குவதற்கென சுவாமி விவேகானந்தரின் உரையின் பிரதிகளை சுவாமி சித்ரூபானந்தா வழங்குவதை படத்தில் காணலாம்.

## இலங்கையின் சயுர கப்பலை பார்வையிட்டார் ஆஸி.பிரதமர்

(கொழும்பு)

அவுஸ்திரேலிய பிரதமர் டோனி அபோர்ட் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான 'சயுர' என்ற பாரிய கப்பலை நேற்றுமுன்தினம் பார்வையிட்டார்.

அவுஸ்திரேலியாவின் அரச தலைவர் ஒருவர் கடற்படையின் கப்பலுக்கு வருகை தந்து பார்வையிட்டமை இதுவே முதற்தடவையாகும்.

சட்டவிரோத கடத்தலை தடுக்க இலங்கை அரசாங்கமும் கடற்படையினரும் சிறந்த முறையில் முனனெடுத்துவரும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் நன்றி தெரிவிக்கும் வகையிலேயே அவுஸ்திரேலிய பிரதமரின் இலங்கை வருகை இடம்பெற்றிருந்தது.

கடற்படைக்குச் சொந்தமான பாரிய போர் கப்பலான சயுரவுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அவுஸ்திரேலிய பிரதமர், கப்பலை முழுமையாகப் பார்வையிட்டதுன் அதில் பொருத்தப்பட்டிருந்த ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பிலும் கேட்டு அறிந்துக் கொண்டார்.

அதன்பின்னர் அமைச்சர்கள், பாதுகாப்பு செயலாளர் தலைமையிலான உயர் அதிகாரிகளுக்கும் அவுஸ்திரேலிய பிரதமருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றது. (அ)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



வலாய் அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி பார்த்தீபன் கவிநாயகி அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியல் சிறப்புக்கலை பட்டதாரியான இவர் கோப்பாய் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பட்டதாரி பயிலுநராக கடமையாற்றி வருகிறார்.

* * *



நாவலர் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுவாமிநாதன் சர்வானந்தன் அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு யாழ்.மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியல் சிறப்புக்கலை பட்டதாரியும் சமாதான நீதவான்களின் மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினருமாவார். (அ)

## ஹெரோயினுடன் இருவர் கைது

கொழும்பு)

முச்சக்கர வண்டியில் 40 பைக்கெற் ஹெரோயின் கடத்திய இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - அவிசாவளை பிரதான வீதியில் வைத்து முச்சக்கர வண்டி ஒன்றை பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரிடமிருந்து 2 கிராம் 945 மில்லிகிராம் நிறையுடைய தலா 15, 25 பைக்கற் ஹெரோயின்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அவிசாவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பாக கொஸ்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## சமூக அபி.மன்ற வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மன்றத்தலைவர் திருமதி ருக்மணி ஆனந்தவேல் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண தவிசாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் மன்றத்தின் முன்னாள் தலைவரும் முன்னாள் இணைப்பதிகாரியுமான திருமதி நவநீதம் ஜெகதீசன் கௌரவிக்கப்படவுள்ளார். (அ-5)

## முஸ்லிம் மக்களுக்கு இந்தியாவின் பங்களிப்பு போதுமானதாகவில்லை

### குர்ஷித்திடம் றிசாத் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள முஸ்லிம் மக்களுக்கு இந்தியாவின் பங்களிப்பு போதுமான வகையில் இல்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சருக்கு இலங்கை முஸ்லிம் அமைச்சர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் இந்திய அரசின் உயர் மட்டத்துக்கு சரியாக எடுத்துரைக்கப்படவில்லை என்பது சல்மான் குர்ஷித்துடனான சந்திப்பின் போது விளங்கக் கூடியதாக இருந்தது என்று அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித்தை இலங்கை வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையிலான குழுவினர் சந்தித்து உள்ளூர் முஸ்லிம் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் குறித்து விவாதித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நீண்டகாலமாக இருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும்போது, முஸ்லிம் மக்களின் கருத்துகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்று எமது தரப்பிலிருந்து இந்திய வெளியுறவு அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டது.

முஸ்லிம் மக்களுடன் எந்தவிதமான கலந்துரையாடலும் இல்லாத நிலையில்தான் அரசியல் சாசனத்தின் 13 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டது என்பதையும் நாங்கள் சல்மான குர்ஷித்திடம் எடுத்துக் கூறினோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில், இலங்கை முஸ்லிம் மக்கள் மற்றும் தலைவர்களின் எதிர்பார்ப்புகளை விரைவில் எழுத்து மூலமாக தங்களுக்கு அளிக்கும்படி இந்திய வெளியுறவு அமைச்சர் கோரியுள்ளார். இன்னும் இரண்டுவார காலத்துக்குள் அதை அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன எனவும் றிசாத் பதியுதீன் தெரிவித்தார். (அ-2)




# சிறுவர் அரங்கம்

641

## சிறந்த ஓவியம்

கபாலிபுரம் என்ற மாநகரில் கபிலன் என்ற ஓவியன் இருந்தான். ஓவியம் வரைவதில் மிகுந்த திறமை உடையவன். யாரைப் பார்த்தாலும் அவர்களை அப்படியே ஓவியம் வரைந்து விடுவான். ஓவியத்திற்கும் அந்த ஆளுக்கும் சிறு வேறுபாடு கண்டுபிடிக்க முடியாது. அவ வளவு பொருத்தமாக ஓவியம் வரைவான்.

பணக்காரர்களை ஓவியமாக வரைந்து கொடுப்பான். அந்த ஓவியத்தை நல்ல விலை கொடுத்து வாங்குவர். அதைத் தங்கள் வீட்டில் அழகாக மாட்டி வைப்பர்.

அந்த ஊரில் ராஜன் என்ற செல்வன் இருந்தான். யாருக்கும் எதையும் தராத கருமி அவன். அவனுடைய பிறந்த நாள் விழா வந்தது. நிறைய உறவினர்கள் விழாவிற்கு வந்திருந்தனர்.


ராஜனின் இயல்பை அறியாத கபிலன் அந்த விழாவிற்குச் சென்றான். ராஜனை வணங்கிய அவன், ""ஐயா! நான் சிறந்த ஓவியன். உங்களை அப்படியே ஓவியமாக வரைந்து தருகிறேன். உங்களையே நேரில் பார்ப்பது போல இருக்கும். அதை வரவேற்பு அறையில் அழகாக மாட்டி வைக்கலாம். அந்த ஓவியத்திற்கு எவ வளவு பணம் தருவீர்கள்?"" என்று கேடடான்.

"உறவினர்கள் தன்னைப் பெருமையாக நினைக்க வேண்டும். பிறகு பணம் தராமல் இவனை ஏமாற்றலாம்" என்று நினைத்தான் ராஜன்.

""நீ வரையும் ஓவியம் என்னைப் போலவே இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஆயிரம் பணம் தருகிறேன். இல்லாவிட்டால் பணம் எதுவும் தரமாட்டேன்,"" என்றான்.

""உங்களைப் போலவே ஓவியம் வரைந்து ஒரு வாரத்தில் தருகிறேன். குறை ஏதும் இருந்தால் பணம் தர வேண்டாம்,"" என்றான் ஓவியன்.

ராஜனைப் போலவே ஓவியம் வரைந்து எடுத்து வந்தான். அந்த ஓவியத்தை மேலும் கீழும் பார்த்தான் ராஜன்.



""இந்த ஓவியம் என்னைப் போலவா இருக்கிறது? நீயே பார். இவ்வளவு நரையா என் தலையில் உள்ளது? என்னைக் கிழவனாக்கிவிட்டாயே... நான் இருப்பதுபோல இளமையாக ஓவியத்தை வரைந்து கொண்டுவா,"" என்றான்.

அந்த ஓவியத்தை எடுதது சென்றான் கபிலன். அதில் சில மாற்றங்கள் செய்தான். அந்த ஓவியத்தை மீண்டும் ராஜனிடம் கொண்டு வந்தான்.

""என்னைத் தானே ஓவியம் வரையச் சொனனேன். நீ எவனோ ஓர் இளைஞனை வரைந்து உள்ளாயே... இளமையும் முதுமையும் கலந்தது போல உன்னால் வரைய முடியாதா?"" என்று கேட்டான்.

அந்த ஓவியத்தில் மேலும் சில மாற்றங்களைச் செய்தான் கபிலன்.

""இந்த ஓவிய மும் என்னைப் போல இல்லை. வேறு ஓவியம் வரைந்து கொண்டு வா,"" என்றான் ராஜன்.

"எப்படி வரைந்தாலும் இவன் ஓவியத்தை வாங்கப் போவது இல்லை. ஏதேனும் குறை சொல்லித் திருப்பி அனுப்பப் போகிறான். என்ன செய்வது?" என்று சிந்தித்தான் கபிலன்.

பீர்பாலிடம் வந்து நடந்ததை சொனனான், ""அந்தச் செல்வன் ஓவியம் வாங்காமல் என்னை ஏமாற்றுகிறான். என் உழைப்பிற்கு நீங்கள்தான் ஊதியம் வாங்கித் தர வேண்டும்,"" என்று வேணடினான்.

ராஜனை வரவழைத்தார் பீர்பால்.

""ஏன் இந்த ஓவியனை ஏமாற்ற நினைககிறீர். பலமுறை திருத்தம் செய்தும் ஓவியத்தை வாங்க மறுக்கிறீராமே?"" என்று கேட்டார்.

(தொடரும்)




- 1493-கொலம்பஸ் முதல் நாள் தான் கண்ட தீவின் கரையை அடைந்து அதற்கு சான் ஜுவான் பட்டீஸ்டா எனப் பெயர் சூட்டினார்.
- 1794-அமெரிக்கப் புரட்சிப்போரின் பின்னர் எழுந்த சில பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவுக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1816-வார்சா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1881-உக்ரேனில் ஒடீசா நகரில் விண்கல் ஒன்று வீழ்ந்தது.
- 1941-இரண்டாம் உலகப்போர்: மேற்கு ஆஸ்திரேலியாவில் ஏச்.எம்.ஏ.எஸ் மற்றும் ஏச்.எஸ்.கே கோர்மொரன் என்ற போர்க்கப்பல்களுக்கிடையில் நிகழ்ந்த மோதலில் இரண்டும் மூழ்கின. இதில் 645 அவுஸ்திரேலியக் கடற்படையினரும் 77 நாசி ஜேர்மனியக் கடற்படையினரும் கொல்லப்பட்டனர்.
- 1942-இரண்டாம் உலகப்போர்: ஸ்டாலின் கிராட் சண்டை-சோவியத் படையினர் ஸ்டாலின் கிராட் நகர் மீது மீள் தாக்குதலை ஆரம்பித்தனர். இது பின்னர் அவர்களுக்கு வெற்றியை அளித்தது.
- 1946- ஆப்கானிஸ்தான், ஐஸ்லாந்து, சுவீடன் ஆகியன ஐ.நா.வில் இணைந்தன.
- 1969-அப்போலோ 12 விண்கலத்தில் சென்ற சார்ள்ஸ் கொன்ராட், அலன் பீன் ஆகியோர் சந்திரனில் இறங்கி நடந்த மூன்றாவது நான்காவது மனிதர்கள் என்ற பெயரினைப் பெற்றனர்.
- 1969-பிரேசில் உதைப்பந்தாட்ட வீரர் பெலே தனது ஆயிரமாவது கோலைப் பெற்றார்.
- 1977-எகிப்திய அதிபர் அன்வர் சதாத் அமைதிப் பேச்சுக்களுக்காக இஸ்ரேல் சென்றடைந்தார். இஸ்ரேல் சென்ற முதல் அரபுத் தலைவர் இவரே.
- 1984-இலங்கை இராணுவத்தின் வட மாகாணத் தளபதி பிரிகேடியர் ஆரியப் பெரும யாழ்ப்பாணம், கட்டுவன என்ற இடத்தில் கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- 1984-மெக்சிக்கோ நகரில் எண்ணெய்க் குதங்களில் ஏற்பட்ட பெரும் வெடிப்புக்களினால் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 500 பேர் வரை கொல்லப்பட்டனர்.
- 1985-பனிப்போர்:அமெரிக்க அதிபர் றொனால்ட் ரேகன், சோவியத் அதிபர் மிக்கைல் கொர்பச்சோவ் இருவரும் ஜெனீவாவில் முதன் முறையாகச் சந்தித்தனர்.
- 1999- மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது சென்ஷோ விண்கலத்தை ஏவியது.
- 2005-மகிந்த ராஜபக்ச இலங்கையின் 5 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

### பிறப்புக்கள்

- 1831-ஜேம்ஸ் கார்ஃபீல்ட், ஐக்கிய அமெரிக்காவின் 20 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1881)
- 1835-ராணி லட்சுமிபாய், இந்திய இராணி (இ.1858)
- 1909-பீட்டர் டிரக்கர் ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர் (இ.2005)
- 1917- இந்திரா காந்தி, இந்தியப் பிரதமர் (இ.1984)

### இறப்புக்கள்

- 1998-டெட்சுயா ஃபுஜித்தா, யப்பானிய வானிலை அறிஞர் (பி.1920)
- 2008-எம்.என்.நம்பியார், நடிகர் (பி.1919)

### ஜான்சி இராணி லட்சுமிபாய்



மணிகர்ணிகா எனும் இயற்பெயருடன் 1835 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி பிறந்தார். இவர் 1857 இல் இந்தியக் கிளர்ச்சியில் பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்தவர்களில் முன்னோடியாகக் கணிக்கப்படுகின்றார்.

1842 இல் ஜான்சி மகாராஜா கங்காதர ராவ் நிவல்கரைத் திருமணம் செய்தார். 1853 நவம் பர் 21 இல் ராஜா மறைந்ததன் பின் இவரே ஜான்சியை ஆட்சி செய்தார். பல தடவைகள் ஆங்கிலேயர்கள் ஜான்சியை முற்றுகையிட்டபோதும் அவர்களால் ஜான்சியைக் கைப்பற்ற முடியவில்லை. எனினும் 1858 ஏப்ரல் 4 ஆம் திகதி கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ஆங்கிலேயர் ஜான்சிக் கோட்டையைக் கைப்பற்றினார். இதன்போது மகனுடன் கோட்டை மதிலிலிருந்து பாய்ந்து தப்பித்த ராணி குவாலியரின் கோட்டை ஒன்றை கைப்பற்றிக் கொண்டார்.

1858 ஆம் ஆண்டு ஜுன் 17 ஆம் திகதி வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட ஜான்சி ராணி வீர மரணமடைந்தார். இவர் அனைத்துப் புரட்சித் தலைவர்களிலும் மிகவும் ஆபத்தானவர் எனவும் வீரம், விவேகம், விடா முயற்சி என்பவற்றுக்கு குறிப்பிடத்தக்கவர் எனவும் ஆங்கிலேயர்களால் புகழப்பட்டார்.

# வாழ்வின் அழகிய தருணங்கள்!



**ஆன்மீகம் 42**

**வா**ழ்க்கையில் ஏற்படும் பெரிய விடயங்களைப் பெரிதுபடுத்தாது, இதுவும் சிறிய விடயம்தான் என யார் நினைக்கிறாரோ, அப்போது அவரது உள்ளத்தில் ஆன்மீகம் தலையெடுத்துவிட்டதாக பொருள். தெளிந்த அறிவுடன் தேர்வு செய்யும் செயலையே செய்ய வேண்டும். நீங்கள் வாழ்க்கை அனுபவங்கள் அனைத்தையும் பாடமாக எடுத்துக் கொள்பவராக இருந்தால் விழிப் புணர்வுடன் இருக்கிறீர்கள் என்று பொருள். கல்வியறிவின்படி வாழ்ந் தால் அதிக தொலைவிலும், இயல் புப்படி வாழ்ந்தால் ஆன்மிகம் அரு கில் இருப்பதுடன் பெரும்பாலான மக்களுக்கு தானாகவே பக்தியும் ஏற் படுகிறது.

வாழ்க்கையில் அனைத்து வேலை களையும் முடித்த பின்பே, ஆன்மீகத் தில் நுழைய வேண்டும் என்று நினைக்கிறீர்கள். குழந்தைகளுக்கு எழுதப்படிக்க மட்டும் கற்றுக் கொடுக்காது அவர்களுக்கு தங்கள் மூளையை எப்படிப் பயன்படுத்து வது என்பதையும் கற்றுக்கொடுக்க வேண்டும். ஆன்மீகம் என்பது செயல்களைக் குறிக்காது. முட்டாள் த்னமான செய்கைகளை நிறுத்தும் போதுதான் அது ஆன்மீகமாகிறது.

இறைவனுடன் நெருங்கியிருப்ப வர் உண்டியலில் காசு போட்டுவிட் டான் என்பதற்காக கடவுள் ஒருவ னைக் காப்பாற்றவும் மாட்டார். போடாததற்காக தண்டிக்கவும் மாட் டார். எல்லாவற்றையும் கடவுள் செய் வார் என்று எதிர்பார்க்கும் குணம் கூடாது. நம் கடமையை நாமே செய்வது குறித்தும், எந்த சூழலில் வாழ்கிறோம் என்பது குறித்தும் அறியும் அறிவை இறைவன் நமக்கு தந்துள்ளதை மறக்கக்கூடாது. அமைதி யாக இருப்பவர் இறைவனுக்கு நெருக்கமானவர்.

வீண் விவாதம், தேவையற்ற வாக்குவாதங்களில் அவர் ஈடுபடமாட் டார். அன்பு, ஆனந்தத்தை பிறருக்கு கொடுக்கும் வாய்ப்பு ஒவ்வொரு விநாடியும் வருகிறது. அதைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். சில விடயங்களில் நம் மனதில் எதிர்பார்ப்பு ஏற்படுகிறது. எதிர்பார்ப்பு உண்டாகும் போது வாழ்வில் விருப்பு, வெறுப்பு தவிர்க்க முடியாததாகிவிடும்.

சாப்பாட்டின் முன் அமரும் போது பரிமாறப்பட்டதை மகிழ்ச்சியோடும், நன்றியோடும் அன்போடும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

**வாழ்க்கை ஆனந்தமானது**

வெளித்தோற்றத்தில் அப்பழுக்கில் லாது, தூய்மையாகக் காட்சி தரும் வாழ்க்கையையே மக்கள் நாடுகிறார் கள். ஆனால், வாழ்க்கையின் தராதரம் என்பது ஒருவரின் மனத்தூய்மையால்



தான் நிர்ணயிக் கப்படுகிறது.

ஆன்மீகம் என் பது விழிப்புணர் வுடன் கூடிய அறி வாற்றலுடன் வாழ் வதே! உடலையோ, மனதையோ, ஆற் றல் மிக்க சக்தி களையோ, அமை தியாக வைத்திருக் கத் தெரியாதவரு க்கு உலக அமைதி என்பது வெறும் கேலிப்பேச்சாகவே இருக்கும். அறி வியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய வற்றால் நமக்கு நாமே ஆபத்தையும் அழிவையும் தேடிக் கொண்டு வாழ்கிறோம். உண்மையில் சமுதாய த்தில் உள்ள ஒவ்வொருவரும் ஆன் மீகத்தில் ஈடுபட்டால் மட்டுமே உலகம் உய்வடையும்.

அடிப்ப்டையில் வாழ்க்கை ஆனந்த மயமானது. நீங்கள் ஆனந்தத்துடன் தொடர்பு கொள்வீர்களானால் உங் களைச் சார்ந்த அனைத்துமே ஆனந்த மாகிவிடும். நாம் ஒவ்வொருவரும் தத்தமது சிறப்பு இயல்புகளை வெளிப் படுத்திக்கொள்ள முயல்வதே மனித குலத்தின் அடிப்படைத் தேவையாகும். ஒரு மரத்தைப்போல, சாதாரண இயல் புடன் இருந்தாலேபோதும். வாழ்வின் உயர்ந்த பரிமாணம் நமக்குப் புலப் படத்தொடங்கும்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# சுயநலவாதிகளின் கூட்டிணைப்பில் மயான நாட்டில் ஒரு மாநாடு!



**பொ**துநலவாய மக்கள் பேரவை ஹிக்கடுவவில் கடந்த 12ஆம் திகதி ஒரு நாள் மாநாட்டை நடத்தியது. இதில் உரை யாற்றியவர்களில் முக்கியமானவர் பிரித் தானிய வெளிவிவகார இராஜாங்க அமைச் சர் கிகோ சுவையர்.

இலங்கை அரசின் போர்க்குற்றங்களை மையப்படுத்தி இங்கு இவர் நிகழ்த்திய உரை, இலங்கையின் ஆட்சிப் பீடத்தை அதிரவைத்துவிட்டது.

நிகழ்ச்சி நிரலில் இடம்பெறாத இவர் எவ்வாறு உரையாற்றினார் என விசா ரணை நடத்துகிறார்கள்.

இந்தக் கூட்டத்தில் கனடிய அரசின் பிரதிநிதி தீபக் ஒபராய் பங்குபற்றினால் இதனையே செய்வாரென்றே அவரை மெது வாக நீக்கிவிட்டனர்.

ஆனால் வடக்கே சென்ற கனடியப் பிரதி நிதி யாழ். ஆயரை யும் வடக்கின் முதல மைச்சரையும் சந்தி த்து வேண்டிய தகவல் களை நேரடியாகப் பெற்றபின் கொழும்பு திரும்பினார்.

அவ்வாறு திரும் பும் வழியில் போரில் இறந்த பொதுமக்களு க்கு ஆனையிறவில் மலர்வளையம்வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மூன்று மாதங்களு க்கு முன்னர் நவநீதம்பிள்ளை அம்மையார் முள்ளிவாய்க்காலில் செய்ய முடியாது போன மலர் அஞ்சலி வணக்கத்தை, கனடியப் பிரதி நிதி தீபக் ஒபராய் எவருக்கும் முற்கூட்டி அறிவிக்காது ஆனையிறவில் அமைதியாக நிறைவேற்றியுள்ளார்.

இதனால், இலங்கை அரசு முக்கியமாக ராஜபக்ச சகோதரர்கள் கொதித்துப்போயுள்ள னர். கனடிய அரசை விடுதலைப் புலிகளு டன் இணைத்துச் சொல்லும் செய்திகளும் ஆங்காங்கே வெளிவரத்தொடங்கியுள்ளன.

நவம்பர் 12ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் பொது நலவாய நாடுகளின் வணிக அரங்கத்தை தொடக்கி வைத்த ராஜபக்ச அரசு அங்கிருந்து புறப்படுகையில் ஒரு வெளிநாட்டு ஊடக வியலாளர் அவரருகே சென்று, போர்க்குற் றங்கள் குறித்து பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார்.

அவர்'சனல்-4' செய்தியாளர் ஜெனாத்தன் மில்லர் என்ற தெரியவந்தபோது சலனம டைந்த மகிந்த ஒருவாறு தம்மை சுதாகரித் துக்கொண்டு, "தேனீர் விருந்துக்கு வாருங் கள். பேசலாம்" என்று கூறிவிட்டு மெதுவாக நழுவிவிட்டார்.

'மகிந்தவை சனல்-4 செய்தியாளர் நெரு ங்கியது எவ்வாறு' என்றும் உயர்மட்ட விசா ரணை நடைபெறுகின்றது.

இதன் தொடர் நிகழ்ச்சியாக'சனல்-4 ஊடகவியலாளர்கள் ஆறு பேர் கிளிநொச்சி நோக்கி ரயிலில் சென்றபோது அனுராத புரத்துக்கு அண்மையில் ஒரு மறியல் நடத்தப்பட்டது.

இராணுவப் புலனாய்வாளர்களே பேரு ந்துகளில் ஆட்களைக் கொண்டுசென்று இறக்கி இதனை நடத்தியுள்ளனர்.

இதனால்'சனல்-4' செய்தியாளர்கள் வடக்கே செல்ல முடியாது கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கொழும்பில் இதே நாட்களில் காணாமற் போனவர்களின் உறவினர்களின் பேர ணியில் பங்குபற்ற வடக்கிலிருந்து வாக னங்களில் சென்றவர்கள் இடைவழியில் மறித்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

சர்வதேச செய்தியாளர்கள் வடக்கே செல்வதைத் தடுப்பதற்காக 18ஆம் திகதி வரை குடாநாட்டுக்கான சகல விமான சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மாணவர்கள் மாநாட்டு க்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தலாம் என்ற அச்சத்தில் சகல பல்கலைக்கழகங் களும் 18ஆம் திகதி வரை மூடப்பட்டுள் ளன.

ஆனால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழ கம் மட்டும் டிசம்பர் முதலாம் திகதி வரை இழுத்து மூடப்பட்டுள்ளது. இந்த மாதம் 27ஆம் திகதி இங்கு மாவீரர் நாள் நிகழ்வு இடம்பெறலாம் என்ற அச்சமே இதற்குக் காரணம்.

மாநாட்டுக் காலத்தில் கொழும்பில் எந்த ஊர்வலத்துக்கும் தடையில்லை என்று காவற்றுறை அறிவித்தது. ஆனால், நீதி மன்றம் இதற்குத் தடை விதித்துள்ளது.

பொதுநலவாய மாநாடு என்ற பேரில் சுயநலவாத நோக்குக் கொண்ட நாடுகள் இவை எதுவுமே தமக்குத் தெரியாது என்பது போல காட்டிக்கொண்டு, மயான நாட்டில் ஒரு மாநாட்டை நடத்துகின்றன.

வெளிப்பார்வையில் ஆடம்பரமாக களி யாட்ட வைபவம் போன்று பிறந்தநாள் கொண்டாட்டங்களோடு நடைபெறும் இந்த மாநாடு, மகிந்த ராஜபக்சவுக்கு முடிசூடும் விழாவாக முடிவடைந்துள்ளது.

ஆனால், அதற்குப் பின்னர், சர்வதேச அரங்கில் இலங்கையின் குடும்ப ஆட்சி பற்றி என்னென்ன வெளிவரப் போகின்றன என்பதை முற்கூட்டியே அறியக்கூடியதாக, சர்வதேச ஊடகங்கள் காரியங்களை அரங்கேற்றுவது தெரிகின்றது.

-பனங்காட்டான்- (முற்றும்)

## போலி நாணயத்தாள் அச்சிட்ட மாணவர்கள் இருவர் பொலிஸாரால் கைது

போலி நாணயத்தாள் அச்சிட்ட மாணவர் உள்ளிட்ட இருவர் பதுளை பசறை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம் பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

பசறை பிரதேசத்தில் போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் இருப்பதாக வெளியான தகவல் களை அடுத்து பொலிஸார் விசா ரணை நடத்தியுள்ளனர்.

குறித்த விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஒன்பது ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் மற்றும் கணனி உள் ளிட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இம்மாணவர் பசறை பாடசாலை யொன்றில் தரம் 13இல் கல்வி கற்று வருகின்றார். பிரதான சந்தேக நபரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம் பரத்தில் மாணிக்கவாசகருக்கான மடாலய கும்பாபிஷேகம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.18 மணிக்கு நடை பெறவுள்ளது. (அ)

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணவேண்டும்

## தென்ஆபிரிக்கா கோரிக்கை

(கொழும்பு)

**இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வரும் இனப் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு எட்டப்பட்ட வேண்டும் என தென்ஆபிரிக்கா கோரியுள்ளது. போருக்கு பின்னரான காலப் பகுதியில் இலங்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைத் தணிய வைக்கவும் பிரச்சினைக ளுக்கு தீர்வு காண்பதில் தமது அனுபவங்ளை பகிர்ந்து கொள்ளவும் தென்ஆபிரிக்கா தயாராகவுள்ளது என்று அந்நாட்டின் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா தெரிவித்துள்ளார்.**

தமது நாடு மிகவும் ஆழமான மற்றும் சிக்கலான மோதல்களை சந்தித்துள்ளது என்றும், பேச்சு வார்த்தைகள் மூலம் ஒரு வழி முறையை கையாண்டு பிரச்சினை களை தீரத்துள்ளதாகவும் இலங்கை ஜனாதிபதியுடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் கூட்டத்தில் தென் ஆபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா சுட்டிக்காட்டியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இருநாடுகளுக்கும் இடையே தற்போது உயர்ந்த மட்டத் தில் பேச்சுகள் நடைபெற்று வருவ தாகவும் ஜூமா தெரிவித்தார்.



எனினும் தனது நாட்டில் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண சிறிது காலமாகும் என்றும், அதற்கான அவகாசம் தேவை எனவும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதன்போது தெரி வித்துள்ளார்.

இலங்கையில் அதற்கான வழி முறைகள் தொடங்கியுள்ளன என் றும், நாட்டின் அரசியல் சாசனத் துக்கு அமையவே நடவடிக்கை களை முன்னெடுக்க முடியும் என வும் அவர் மேலும் கூறினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்று ஆரம்பித்து நாளை முடிந்து விடக் கூடிய விடயம் அல்ல என வும் மஹிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட் டியுள்ளார்.

இதனிடையே, தென் ஆபிரிக்க ஜனாதிபதியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் சந்தித்து பேசியுள்ளனர்.

இலங்கையில் இனப்பிரச் சினைக்கான தீர்வு குறித்து தென் ஆபிரிக்கா காட்டும் ஆர்வம் தமது தரப்பில் கவனத்தில் எடுக்கப்பட்டு எதிர்வரும் நாட்களில் பரிசீலிக் கப்படும் எனவும், நீண்ட காலமாக இந்த விடயம் தொடர்பில் ஈடுபட்டு வரும் இந்தியாவுடனும் மற்றைய நாடுகளுடனும் இந்த முன்னெ டுப்பு ஆலோசிக்கப்படும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஒரு செய்திக் குறிப்பு கூறுகிறது. (அ-2)



லயன் மாவட்ட ஆளுநரின் சுன்னாகம் லயன்ஸ் கழகத்திற்கான விஜயமும் கலை நிகழ்வுகளும் அண்மையில் சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரி மண்டபத்தில் லயன் ஹரிகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மாவட்ட ஆளுநர் லயன் றஞ்சித் பெர்ணான்டோ, லயன் சீமாட்டி டில்ஹானி ஆகியோர் பரிசில்களை வழங்குவதை படத்தில் காணலாம். (படம்: மானிப்பாய் செய்தியாளர்)

# ஆசியாவின் ஆச்சரியம் என்பது ஆசியாவின் நரகமாக மாறிவருகிறது

## சரத்பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மொத்த சனத் தொகையில் 95 வீதமானவர்கள் மூன்றுவேளையும் உணவு உட் கொள்ள முடியாத வறுமையில் வாடு கின்றனர்.

ராகம பிரதேசத்தில் நடை பெற்ற கூட்டமொன்றில் பங்கேற்ற போதே அவர்மேற்கண்டவாறு குறிப் பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை ஆசியாவின் ஆச்சரி யம் என கூறப்பட்ட போதிலும் அது தற்போது ஆசியாவின் நரகமாக மாறி வருகின்றது.

நாட்டில் அதிவேக வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. 90 வீத மான மக்களினால் இந்த பாதைக ளில் பிரவேசிக்கவே முடியாது.

நாட்டில் ஊழல் மோசடிகளில்



ஈடுபடும் தலைவரின் சகோதரர், கட்டுநாயக்க அதிவேக பாதையின் குறைபாடுகள் என்ன என கேள்வி எழுப்புகின்றார்.

ஒரு பிரச்சினையும் இல்லை. எனினும், ஒரு கிலோ மீற்றருக்கு ஆயிரத்து 400 மில்லியன் ரூபா வேறு எங்கும் செலவிடப்படவில்லை.

அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பிற்காக 300 தொடக்கம் 400 பேர் மட்டுமே கடமையில் ஈடு படுகின்றனர். எனினும் போர் முடி வுக்குக் கொண்டு வரப்பட்ட இலங்கை கயில் ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணி க்கை மூவாயிரமாகும்.

ஏனெனில் இவர் மக்களின் மத்தியில் செல்ல அஞ்சுகின்றார். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி யடைந்துள்ளது,

ஒரு வருடத்தில் 500 கைத் தொழிற்சாலைகளும் 200 ஆடைக் கைத்தொழிற்சாலைகளும் மூடப் பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளுக்காக அரசாங்கம் சூதாட்ட மையங் களை ஆரம்பிக்க திட்டமிட்டுள் ளது.

சில அமைச்சர்கள் பாலியல் தொழிலை சட்ட ரீதியாக்குமாறும், கசிப்பு வியாபாரத்தை சட்ட ரீதி யாக்குமாறும் கோருகின்றனர் என அவர்மேலும் தெரிவித்தார்.(அ-2)

# 50 வீதமான பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன

## ஜனாதிபதியின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் ஆராயப் பட்டு வருவதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரி வித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் நிறைவின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக் குழு வின் இறுதி அறிக்கைப் பரிந் துரைகளில் 50 வீதமானவை முன்னதாகவே அமுல்படுத்தப்பட் டுள்ளன. ஏனைய பரிந்துரைகள் தொடர்பில் ஆய்வு நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆய்வுப் பணிகளில் அரை வாசிப் பணிகள் பூர்த்தியாகியுள் ளன. இந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்த நீண்ட கால அவ காசம் தேவை.

காணிப் பிரச்சினைக்கு விரை வில் தீர்வுகாண முடியாது. போரின் பின்னர் காணிகளுக்கு உரிமை கோரும் பலரிடம் உரிய ஆவணங் கள் எதுவும் கிடையாது. எனவே, இவர்களுக்கு துரித கதியில் தீர்வு களை வழங்க முடியாது.

இலங்கை ஓர் சுதந்திரமான நாடாகும்.

எவரும் நாட்டுக்குள் பிரவே சித்து காணொளிகளை தயாரிக்க முடியும். இலங்கையின் மெய் யான நிலைமைகளை பார்வை யிட முடியும்.

பிரிட்டன் பிரதமர் யாழ்ப்பா ணம் செல்ல வேண்டுமென கோரிய போது யாரும் அவரை தடுக்கவில்லை என அவர் குறிப் பிட்டுள்ளார். (அ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்ப தேவஸ்தான மகரஜோதி மண்டல விரத மஹோற்சவ பெருவிழா எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

மஹோற்சவ பெருவிழாவின் தேர்த்திருவிழா எதிர்வரும் டிசெம் பர் மாதம் 5 ஆம் திகதி வியாழக்கி ழமையும் மறுநாள் வெள்ளிக் கிழமைதீர்த்தத்திருவிழாவும்நடைபெ றவுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மகர ஜோதி பூஜையும் 15 ஆம் திகதி மாலை கழற்றுதல் நிகழ்வும் இடம்பெற வுள்ளன. (அ-5)

# இலங்கை தமிழர்கள் பீதியுடன் வாழ்கின்றனர்

## கனடா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் பீதியுடன் வாழும் நிலையுள்ளதாக கனடா தெரிவித் துள்ளது

கனடாவின் சார்பில் கொழும் பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பங்கேற்ற அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சின் நாடாளுமன்ற செயலாளர் தீபக் ஒபராய் இதனை தெரிவித்துள் ளார்.

இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் மீறப்படுகின் றன.

இதனை கருத்திற் கொண்டே பிரதமர் ஸ்டீவன் ஹாப்பர் கொழும்பு மாநாட்டை புறக்கணித் தார்.

அதற்கு பதிலாக இலங்கை சென்ற தாம் மத்திய அரசாங்கத் தால் மனித உரிமைகள் மீறப்படு வதை கண்காணித்ததாக குறிப்பிட் டார்.

அத்துடன் போரினால் இறந்துப் போன வடக்கின் பொதுமக்க ளுக்காக ஆனையிறவில் மலரஞ் சலி செலுத்தியதாகவும் தீபக் குறிப் பிட்டுள்ளார். (அ-2)

# குளிர்காலத்தில் வரும் சைனஸ் பிரச்சினைகள்

மழையோ மழை என வந்து நம்மை வாட்டியெடுத்த பின்பு வருவது குளிர்காலம். நமது மார்கழி மாதக் குளிரை குளிர் என்பதே ஒரு நகைப்புக்குரிய விடயம். மிதமான இதமான வெப்பநிலை (அட, அது தான் சார், Warm and Pleasant) என்று நமது மார்கழி மாதத்தை வெள்ளைக்காரர்கள் வர்ணிப்பர்.

குளிர்காலம் மார்கழி மற்றும் தை வரைதான். குளிருக்குப் பயந்து போர்வைக்குள் முடங்குபவர்கள் சிலர். வீராவேசமாக அதிகாலை 4 மணிக்கு எழுந்து குளித்து விட்டு வெற்றுடம்பில் துண்டைக் கட்டியபடி திருப்பாவை, திருவெம்பாவை படித்து விட்டு கோயிலுகளுக்குச் செல்பவர்கள் சிலர். இவர்கள் அனைவருக்கும் ஏற்படும் பொதுவான ஒரு பாதிப்பு மூக்கடைப்பு மற்றும் தும்மல்.

ஜில்லுன்னு ஏதாவது சாப்பிட்டால் உடனே மூக்கு அடைச்சிக்குது அப்புறம் தும்மல் தான் என்பார்கள் பலர். மார்கழி மாதம் விடியற்காலையில் எழுந்து கோலம் போட முடியாத பல பெண்கள் முதல் நாளே இரவு வெகு நேரம் பனியில் நின்று கோலம் போடுவது நம் நகரங்களில் சகஜம். அவர்களுக்கு சைனஸ் ட்ரபிள் எனப்படும் தலைவலி நோய் அதிகம் ஏற்படும்.

இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்த விடயங்களே. இருந்தாலும் மீண்டும் ஒருமுறை பார்ப்போமே. நம் மூக்கின் உள்ளுறைத் திசுவில் ஒரு சீதப்படலம் உள்ளது. அதன் விளிம்புகளில் மெலிதான ரோமங்கள் உள்ளன. இவை வெளிப்புறம் நோக்கி அசைந்து தூசு தும்புகளை அகற்றும். அது மட்டுமின்றி அதன் மறுபுற விளிம்பை ஒட்டியுள்ள நரம்பு முனைகள் மூளையின் முன்பக்கத்திலிருந்து வருபவை. அவைதான் நாசியின் நுகரும் திறனுக்கு அடிப்படை ஆதாரங்கள். இந் நரம்புகள் நுகரும் நரம்புகள் (Olfactory nerves) என்றே அழைக்கப்படுகின்றன. மிக மெல்லிய இழைகளாலான இவை தலையில் அடிபட்டவுடன் இற்றுப் போய் விடக்கூடியவை. இற்றுப் போன நரம்பிழைகள் மீண்டும் வளர வாய்ப்புக் குறைவு. நறுமணம் அறியும் தன்மையற்ற நாசி. சுவாசிக்க மட்டுமே பயன்படும் துவாரமாகி விடுகிறது. மீண்டும் மீண்டும் குளிர் காற்றும் , குளிர் பானங்கள் உட்கொள்வதும் நீடித்தால் நாசியின் உட்புற சீதப்படலம் தடித்து மூக்கடைப்பும் தும்மலும் ஏற்படும். நாசித் துவாரங்களின் உட்புறத்தில் மூன்று பள்ளங்கள் உள்ளன. இவற்றை மேல் (Superior) நடு (Middle) மற்றும் கீழ்ப் பள்ளம் (Inferior Meatus) என்கிறார்கள். இவற்றில் ஒவ்வொன்றிலும் உள்ளே சைனஸ் (Sinus) எனப்படும் எலும்புக் குகையின் திறப்பு அமைந்துள்ளது.

இந்த சைன்ஸ் எனப்படும் எலும்புக் குகை ஒவ்வொருவர் முகத்திலும் வெவ்வேறு வடிவத்தில் இருக்கும். இவற்றில் நெற்றியில் கண்களுக்கு மேல் பக்கத்திலுள்ளவை முன் மண்டைக் குகைகள் (Frontal Slnuses) என்றும் நாசியின் இருபுறமும் உள்ளவை மேல்தாடைக் குகைகள் (Maxil Lary Sinuses) என்றும் அழைக்கப்படுகின்றன.

பொதுவாக நம் உடலில் உள்ள சீதப் படலத்திசுக்கள் அனைத்துமே நீர் சுரக்கும் தன்மை கொண்டவை. ஏதேனும் ஒரு வெளிப்புறத் தூண்டல் ஏற்பட்டால் அவை உடனே




சுரக்க ஆரம்பிக்கின்றன. அந்த நீர் சுரந்து உள்ளே எரிச்சல் அல்லது தூண்டல் ஏற்படுத்திய அயற் பொருளைக் கரைத்து அகற்ற முற்படுகின்றது.

உதாரணமாக நம் கண்ணில் தூசி விழுந்து விட்டால் உடனடியாக அதை எடுக்க முற்படுகிறோம். ஆனால் இவ்வசதிகளை எதிர்பார்க்காத இயற்கை நீரைச் சுரக்க வைக்கிறது. கண்கள் தூசியை அகற்ற முயற்சிப்பதுதான் தாரை தாரையாகக் கண்ணிலிருந்து நீர். இதேபோல்



தான் மூக்கில் நெடி அல்லது தூசி உட் சென்றால் அதை வெளியேற்ற முயல்வதுதான் தும்மலாக வருகிறது. நம் மண்டையோட்டின் எலும்புக் குகைகளில் உள்ள சீதப்படலம் ஐஸ்கிரீம் உண்ணும் போதும் பனிக்காற்றில் வேகமாக வாகனத்தில் போகும் போதும் தூண்டப்படுகின்றது. அதன் விளைவாகச் சுரக்கும் நீர் குகையினுள் நிரம்புவதால் தலை பாரமாகத் தோன்றும்.

இதையே நாம் எல்லோரும் சைனஸ் ட்ரபிள் (Sinus Trouble) என்கிறோம். இதனால் தலைப்பாரம், நாசி அடைப்பு, நுகரும் தன்மை இழப்பு ஆகியன ஏற்படக் கூடும்.

இதனை ஓரளவு தவிர்க்கலாம். அதாவது எதைச் செய்தால் அது தூண்டப் பெறுகிறதோ அதைத் தவிர்க்கலாம். ஆனால் சிலருக்கு இத்தகைய எலும்புக் குகைகளின் வடிகுழாய் கீழ் முனையில் இல்லாமல் சற்றுத் தள்ளி மேலே அமைந்திருக்கும். அதனால் குகையிலுள்ள நீர் முற்றிலும் வடியாது. தலை அசையும் போது உள்ளே சிறிய பாத்திரத்தில் நீர் ஆடுவதுபோல் அசைவதை உணர முடியும்.

இதற்கான சிகிச்சைகள் ஆங்கில முறையில் உள்ளன. தவிர்க்க முடிந்த அளவு தூண்டும் காரணங்களைத் (Provocative Agents) தவிர்க்கலாம். நுண்ணுயிர்க்கொல்லிகள், வலி நீக்கிகள் ஆகியன உட்கொள்வதால் வலி மற்றும் நுண் கிருமித் தொற்று ஓரளவு தற்காலிகமாக நீங்கலாம். எலும்புக் குகையில் வடிகால் சரியாக அமையாத பட்சத்தில் அறுவை சிகிச்சை மூல மாக அதற்கு ஒரு வடிகால் அமைக்கலாம்.

முன்பெல்லாம். (எலும்புக் குகையில் துளையிடும் முறை (Serius Puncture) பயன்படுத்தப்பட்டது. இதில் நாசியின் உட்படலம் மரத்துப் போக மருந்தைப் பஞ்சில் வைத்து திணித்து விடுவார்கள். பின்னர் அந்தந்த பள்ளத்தின் வழியே தடித்த ஊசி மூலம் தூயநீரில் உப்புக் கரைசலைச் சேர்த்து கழுவி விடுவார்கள். இது மிகவும் சிரமப்படுத்தும் செயல் முறையாகும்.

இதில் சிறிதளவு நீர் உள்ளே தங்கிப் போனால் கூட மீண்டும் மீண்டும் துளையிட நேரும். சமீப காலத்தில் இதற்கு உள்ளோக்கிக் கருவி மூலம் Fess (Fibro Endoscopic Sinus Surgery) சிகிச்சை அளிக்கிறார்கள். அறுவை அரங்கத்தில் மயக்கம் வரவழைத்து வலியின்றி எலும்புக் குகையைச் சுத்தம் செய்து வடிகாலும் ஏற்படுத்தி விடுகிறார்கள். காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள் மட்டுமே செய்யும் இம்முறை மிகுந்த பயனளிப்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது.

**முக்கிய தகவல்:**

குளிர் காலத்தில் காதுகளை மூடிக் கொள்வது அவசியம். காதின் வழியே வரும் முக இயக்க நரம்பு (Facial Nerve) குளிரில் தாக்கப்பட்டுச் செயலிழக்கும். வாகனத்தில் செல்லும் இளைஞர்கள் பலர் பாதிக்கப்படுகிறார்கள். இதனால் முகம் ஒருபுறம் கோணலாகும். முற்றிலும் குணமாகக் கூடிய இதனைத் தவிர்ப்பதும் சுலபம்.




இனிய இதயங்கள் அமைப்பு லயன்ஸ் கழகங்களுடன் இணைந்து இவ்வமைப்பின் தலைவர் சி.விக்னராசாவின் தலைமையில் கடந்த இரண்டாம் திகதி தீபாவளித்தினத்தை கைதடியில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தில் கொண்டாடிய போது...

# அரசாங்கம் இதுவரை சமாதானத்தை வென்றெடுக்கவில்லை-சஜித் பிரேமதாச

(கொழும்பு)

அரசாங்கத்தினால் சமாதானத்தை வென்றெடுக்க முடியவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இங்கிரிய பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

போர் வென்றெடுக்கப்பட்டமை பாராட்டப்பட வேண்டியதாகும், ஐக்கிய தேசியக் கட்சி இதனை ஏற்றுக்கொள்ள தயங்கப்போவதில்லை. எனினும், அரசாங்கம் இதுவரையில் சமாதானத்தை வென்றெடுக்கவில்லை.

கட்சிகள் என்ற ரீதியில் பிளவடைந்து செயற்பட்டாலும், தாய் நாடு என்ற விவகாரத்தில் நாம் ஒன்றிணைந்தே செயற்பட வேண்டும்.

இலங்கை என்பது ஒரே நாடாகும். இங்கு எவருக்கும் தனியான பூர்வீக பூமிகள் கிடையாது. வடக்கு என்பது தனியான நாடல்ல.

கோடிக்கணக்கான பணம் செலவிட்டு பொதுநலவாய நாடுகள் அரச தலைவர்கள் மாநாடு கொழும்பில் நடத்தப்பட்ட நேரத்தில், வடக்கு மக்கள் தங்களது குறைகளைக் கூறி பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் காலடியில் விழுந்துள்ளனர். இந்த நிலைமை வெட்கக் கேடானது.

எமது நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு பிரிட்டன் பிரதமரினால் தீர்வு வழங்க முடியுமா? இந்த அரசாங்கம் ஏன் மக்களை



இவ்வாறான ஓர் சூழ்நிலைக்கு தள்ளியது.

அரசாங்கம் வடக்கு, கிழக்கு மக்களை கவனிப்பதில்லை என்ற செய்தி உலகம் முழுவதிலும் பரவியுள்ளது.

மக்கள் தங்களது பிரச்சினைகளை இந்த நாட்டு ஜனாதிபதியிடமே சொல்ல வேண்டும்.

நேர்மையாக நாட்டையும் மக்களையும் நேசிக்கும் ஓர் அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும்.

எமது பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்ளக் கூடிய ஓர் தலைவரையே நாம் நியமிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# யுத்த நிறுத்தத்திற்கு உடன்படாதது ஏன்?

## கோத்தா விளக்கம்

ஐக்கிய நாடுகளின் அதிகாரி விஜய் நம்பியாரை முல்லைத் தீவுக்கு அனுமதித்திருந்தால் பிரபாகரன் தப்பியிருப்பார் என்று இலங்கை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

இலங்கையின் ஆங்கில செய்தித்தாளுக்கு கருத்துரைக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து கூறுகையில்,

பிரபாகரன்,போர் நிறுத்தம் ஒன்றுக்கு தயாரானபோதிலும் ஆயுதங்களை கீழே வைக்க உடன்படவில்லை. இந் நிலையில் ஐக்கிய நாடுகளின் அதிகாரி விஜய் நம்பியார் போர் நிறுத்தம் ஒன்றின் நிமிர்த்தம் இலங்கைக்கு வந்தார்.

எனினும் பிரபாகரனுக்கு போர் நிறுத்த வாய்ப்பை கொடுத்தால் அவர் மீண்டும் ஒரு போருக்கு தயாராவார் என்ற அடிப்படையில் அதற்கு இடம்தரப்படவில்லை.

எனவேதான் விஜய் நம்பியார் முல்லைத்தீவுக்கு அனுமதிக்கப்பட



வில்லை என்று கோத்தபாய குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சர்ச்சையைக் கிளப்பியுள்ள ஆனையிறவு மலர்வளையம்!



மனிதஉரிமை மீறல்களுக்கு இலங்கை அரசாங்கம் பதிலளிக்கத் தவறிவிட்டதாக குற்றம்சாட்டி, கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிக்க கனேடிய பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் எடுத்த முடிவினால் கடுப்பாகியிருந்த இலங்கை அரசாங்கத்துக்கு, கனடாவின் இன்னொரு நடவடிக்கை கடுமையான எரிச்சலை ஏற்படுத்தியிருந்தது.

கனடாவின் பிரதிநிதியாக கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க வந்திருந்த, வெளிவிவகார மற்றும் சர்வதேச மனித உரிமைகள் விவகாரங்களுக்கான நாடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய, கடந்த செவ்வாய்க் கிழமை ஆனையிறவில் மலர்வளையம் வைத்த விவகாரம்தான் அது.

இணையமைச்சர் பதவிக்கு இணையான நாடாளுமன்றச் செயலரான, தீபக் ஒப்ராயை, கொமன்வெல்த் மாநாட்டுக்கான தமது தலைமைப் பிரதிநிதியாக கொழும்புக்கு அனுப்பியிருந்தது கனடா. இவர் தன்சானியாவில் பிறந்த, ஒரு இந்திய வம்சாவளி கனேடியர். அவர், கடந்தவாரம் யாழ்ப்பாணம் சென்று, கத்தோலிககத் திருச்சபையின் யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரைச் சந்தித்துவிட்டு, சென்றிருந்தார். தீபக் ஒப்ராயுடனான சந்திப்பின்போது, இறந்தவர்களுக்கு நினைவு கூரும் உரிமை கூட இல்லாதவர்களாக தமிழ்மககள் இருப்பது குறித்து யாழ். ஆயர் கவலை வெளியிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாண பயணத்தை முடிதது கொண்டு, தரைவழியாகத திரும்பிய கனேடிய நாடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய், ஆனையிறவில் அமைந்துள்ள படையினரின் போர் வெற்றிச் சின்னத்துக்கு 1 கி.மீ தொலைவில், கடல்நீரேரி ஓரமாகச் சென்று மலர் வளையம் ஒன்றை வைத்து, அஞ்சலி செலுத்தியிருந்தார்.

தீபக் ஒப்ராயும், கனேடியத் தூதுவர் ஷெல்லி வைற்னிங்கும் போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, தாம் எடுத்து வந்த மலர் வளையத்தையும் கூடவே எடுத்துச் சென்று விட்டனர். முன்னதாக, அந்த இடத்தில் மலர் வளையம் வைப்பதற்கு, அவர்களுடன் சென்ற இலங்கை அரச அதிகாரி ஒருவர், எதிர்ப்புத் தெரிவித்ததாகவும், ஆனால் அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை என்றும் தகவல்கள் கூறுகின்றன.

கனடாவின் உயர்மட்டப் பிரதிநிதி ஒருவர், ஆனையிறவில் மலர் வளையம் வைத்த படத்துடன் செய்தி வெளியானதும், பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவுக்கு கடும் சீற்றம் ஏற்பட்டது.

அதன் விளைவு - மறுநாள் ஐலன்ட் நாளிதழ், "கனேடியப் பிரதமரின் பிரதிநிதி, உயிரிழந்த விடுதலைப் புலிகளுக்கு ஆனையிறவில் உள்ள நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்" என்ற தலைப்புச் செய்தியுடன் வெளியானது.

ஏரிக்கரை ஊடகங்கள் அரச கட்டுப்பாட்டில் இருந்தாலும், ஐலன்ட் நாளிதழையே, பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச தமது பிரசாரத் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வது வழக்கம். பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துகளை அவர் ஐலன்ட் மூலமாகவே, வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வெளிப்படுத்துவதுண்டு.

குறிப்பாக, மேற்குலகிற்கு எதிரான கருத்துகள், போர்க்குற்றங்களுக்கு எதிரான மறுப்புகள், வடக்கு, கிழககு இணைப்புக்கு எதிரான கருத்துகள், மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள். வழங்குவதற்கு எதிரான கருத்துகள், இந்தியாவை சீண்டும் கருத்துகள், ஐ.நாவை விமர்சிக்கும் கருத்துகளை அவர், இந்த நாளிதழ் மூலமே அடிக்கடி வெளியிடுவது வழக்கம்.

அரசாங்கத்துக்கு சாதகமாக எவ்வாறு செயறபடுவது என்பதை ஐலன்ட் நாளிதழை பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களிடம் அவர் கூறியதான தகவல்களும் ஏற்கனவே வெளியானதுதான்.

சில சந்தர்ப்பங்களில், சர்ச்சைக்குரிய கருத்துகளை, அல்லது தகவல்களை அவர், வெளியிடும்போது தனது பெயரைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. தனியே மூத்த அரசாங்க பாதுகாப்பு உயரதிகாரி என்று மட்டும் அடையாளப்படுத்தப்படுவார். இது பல சந்தர்ப்பங்களில் தேவையற்ற சர்ச்சைகளை தவிர்ப்பதற்காக, அரசாங்க அமைச்சர்களும், அதிகாரிகளும் கையாளும் வழக்கமான வழிமுறைதான்.

கனேடியப் பிரதிநிதி தீபக் ஒப்ராய், கனடாவில் தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியதாகவும், கனடாவில் உள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்களைத் திருப்திப்படுத்தவே அவர் இவ்வாறு நடந்து கொண்டதாகவும் மூத்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகவே, ஐலன்ட்டில் வெளியான செய்தி அமைந்திருந்தது. அந்தச் செய்தி உள்நோக்கம் நிறைந்தது என்பதை, எவராலும் புரிந்துகொள்ள முடியும்.

ஏனென்றால், தீபக் ஒப்ராய், வைத்த மலர் வளையத்தில், வன்முறைகளில் உயிரிழந்த அனைத்து அப்பாவி மக்களுக்கும் என்று மூன்று மொழிகளிலும், எழுதப்பட்ட வெள்ளை நிறப்பட்டியொன்றும் வைக்கப்பட்டிருந்தது.

அது ஒன்றே, அது போரில் இறந்த படையினரையோ விடுதலைப் புலிகளையோ உள்ளடக்கிய அஞ்சலி நிகழ்வு அதுவல்ல என்பதற்கான அடையாளமாக இருந்தது.

அடுத்து, ஆனையிறவில் விடுதலைப் புலிகளின் எந்த நினைவிடமும் இல்லை.

அங்கிருந்த விடுதலைப் புலிகளின் நினைவுச் சின்னங்கள் எல்லாமே அழிக்கப்பட்டுவிட்டதென்பது, அந்தக் கருத்தை வெளியிட்ட, மூத்த பாதுகாப்பு அதிகாரிக்கும், செய்தியை எழுதிய ஊடகவியலாளருக்கும் நன்றாகவே தெரியும்.

படையினரின் போர் வெற்றிச் சின்னம் மட்டும்தான் ஆனையிறவில், இப்போதுள்ளது.

ஆனால், 30 ஆண்டுகாலப் போரில், ஆனையிறவு ஒரு வலிமிக்க அடையாளமாக இருந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஆனையிறவைக் கைப்பற்றுவதற்காகவும், அதைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவும், ஆயிரக்கணக்கான படையினரும், விடுதலைப் புலிகளும் உயிரைக் கொடுத்தனர்.

முள்ளிவாய்க்காலுக்கு அடுத்து, போரின் அதிக வடுவை சந்தித்த இடமாக ஆனையிறவு உள்ளது. அந்த வகையில், கனேடியப் பிரதிநிதி ஆனையிறவில் மலர் வளையம் வைத்தது புலிகளுக்காகவே என்றால்கூட, அதைப் படையினருக்கான அஞ்சலியாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், கடந்த வெள்ளிக் கிழமை, ஐலன்ட் நாளிதழில், கொமன்வெல்த் மாநாட்டுக்கு வரும் வெளிநாட்டுத் பிரதிநிதிகள் பிரிவினை வாதத்துக்கு துணைபோகக் கூடாது என்று பாதுகாப்பு செயலர் வெளிப்படையாக கருத்து வெளியிட்டிருந்தார். அதில், கனேடியப் பிரதிநிதி ஆனையிறவு தவிர்ந்த வேறொரு இடத்தில் மலர் வளையம் வைத்திருந்தால் அது சர்ச்சைக்குரியதலல என்றும் குறிப்பிட்டிருந்தார.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அண்மையில், இலங்கைக்கு வந்திருந்தபோது, போரில் இறந்த அனைவரினதும் நினைவாக முள்ளிவாய்க்காலில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்த திட்டமிட்டிருந்தார். ஆனால், அதற்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டதால், அந்த திட்டத்தை அவர் கைவிட்டார்.

நவநீதம்பிள்ளை, தான் செல்லுமிடங்களில் போரில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவிடங்களில் அஞ்சலி செலுத்தும் வழக்கத்தை கொண்டவர். இலங்கைப் பயணத்தின் பின்னர், ஜேர்மனிக்குச் சென்றபோது, நாசிப் படைகளின் வதை முகாமில் இறந்தவர்கள் நினைவாக, முன்னர் வதைமுகாமாக இருந்த இடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முள்ளிவாய்க்காலில் அனைவருக்காகவும் அஞ்சலி செலுத்த முயன்ற நவநீதம்பிள்ளையை, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அவர் நந்திக்கடலில் அஞ்சலி செலுத்த முயன்றதாக கதையைத் திரித்துவிட்டது அரசாங்கம். அது பலத்த சர்ச்சையையும் ஏற்படுத்தியது. நவநீதம்பிள்ளை, முள்ளிவாய்க்காலில் அஞ்சலி செலுத்த முற்பட்டது தவறு என்றும் பொதுவான இடத்தில் அஞ்சலி செலுத்தியிருக்கலாம் என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறியிருந்தார். அதுபோலத்தான், ஆனையிறவில் அஞ்சலி செலுத்தியதை, பாதுகாப்புச் செயலர் தவறெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் கூறும் பொதுவான இடம், நிச்சயமாக வடக்கு - கிழக்குக்கு வெளியேதான் இருக்கும். ஆனால், போர் நடந்ததும், போரால் பெருமளவு மக்கள் கொல்லப்பட்டதும் வடக்கு, கிழக்கில்தான். அப்படியிருக்கும்போது, அதற்கு வெளியே அஞ்சலி செலுத்துவது எப்படி முறையாகும் என்ற கேள்வி எழும்.

ஆனையிறவிலும், முள்ளிவாய்க்காலிலும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அஞ்சலி செலுத்துவதை தவறெனச் சுட்டிக்காட்டும் அரசாங்கமே, அந்த இடங்களில், தமது போர் வெற்றிச்சின்னங்களை நிறுவியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தம்மையும் மீறி எவரும் விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்தி விடக்கூடாது என்பூதில் உறுதியாக உள்ளது. அதனால்தான், வரும் 27 ஆம் திகதி மாவீரர்நாள் அனுசரிக்கப்படுவதால், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தைக் கூட அரசாங்கம் மூடியுள்ளது.

கடந்த ஆண்டு மாவீரர் நாளில, பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் தீபமேற்றியபோது படையினரும் பொலிசாரும் நடத்திய தாக்குதல், கடும் கண்டனங்களை ஏற்படுத்தியிருந்தது. அதுபோன்று இம்முறை நடப்பதை தடுக்கவே, பல்கலைக்ழகத்தை இழுத்து மூடியுள்ளது அரசாங்கம்.

எவ்வாறாயினும், நவநீதம்பிள்ளையை அஞ்சலி செலுத்த அனுமதித்திருந்தாலோ, கனேடியப் பிரதிநிதியின் அஞ்சலியை சர்ச்சைக்குரியதாக்காமல் விட்டிருந்தாலோ, இறந்தவர்களை நினைவு கூரும் உரிமையை பறிக்கும் அரசாங்கத்தின் செயல் இந்தளவுக்கு வெளிப்பட்டிருக்காது.

அரசாங்கத்தின் இறுக்கமான போக்குத்தான், வடக்கிலுள்ள மக்களுக்கு, இறந்துபோனவர்களை நினைவுகூரும் உரிமையைக்கூட அரசாங்கம் கொடுக்கவில்லை என்ற உண்மையை, உலகிற்கு வெளிப்படுத்தியுள்ளது.

-சுபத்ரா-

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

# 17.11.2013–15.12.2013



## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்**

**பேசிய சில நிமிடங்களிலேயே மனதில் இடம்பிடிக்கும் தனுசு இராசி நேயர்களே!**

**சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்குவரும்**

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் குரு வக்ரம் பெற்றுவிட்டார். எனவே, ஆரோக்கியத்தில் குறைபாடுகள் அடிக்கடி வந்துகொண்டே இருக்கலாம். பயணங்களும் அதிகரிக்கும். ஆனால், அதே நேரம் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் ஆவதும் ஒரு வகைக்கு நன்மைதான். எனவே, செயற்பாடுகளில் வெற்றி, தொழில் வளர்ச்சி பண வரவில் திருப்தியான சூழ்நிலை அனைத்தும் உருவாகும்.

தனாதிபதி சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. அதுமட்டுமல்ல, இராகுவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிகிறது. எனவே, கடந்த சில மாதங்களாகவே ஏற்றமும் இறக்கமும், இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கும். இனி அந்த நிலை மாறும். முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

குருவின் வக்ர காலத்தில் உங்களுக்கு வளர்ச்சி கூடும் என்றே சொல்லலாம். வருமானம் கூடுலாகவே கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெ முத்திட்டு மகிழும் வாய்ப்புக் கிட்டும். செவ்வாய்–சூரியன் பரிவர்த்தனை பெற்றிருப்பதால் பூர்வீக சொத்துக்களை விற்கலாமா? அல்லது வைத்துக் கொள்ளலாமா என்று இதுவரை சிந்தித்தவர்கள் இப்பொழுது ஒரு நல்ல முடிவிற்கு வருவீர்கள்.

## நீங்கள் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்!

விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர்.

கேது பலத்தால் பிள்ளைகளின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படப் போகிறது. குழந்தைகளின் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். பழைய கடன்களை பைசல் செய்து சந்தோஷத்தைத் தக்கவைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேல் அதிகாரிகளின் ஆதரவு கிட்டும். வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் குதூகலத்தை வரவழைத்துக்கொள்ள இயலும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். 7,10க்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். தொழிலில் எதிர்பாராத விரயங்களும் ஏற்படலாம். நிச்சயிக்கப் பெற்ற திருமணத்தை மாற்றியமைக்கும் சூழ்நிலை உருவாக லாம். பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுவிடாமல் அன்றாடம் அவர்கள் செய்யும் பணிகளைக் கூர்ந்து கவனிப்பதன் மூலமே வரும் பிரச்சினைகள் அல்லது விரயங்களிலிருந்து விடுபட இயலும்.

**கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கும் நேரம்!**

நவம்பர் 30 திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். இக்காலம் உங்களுக்கு ஓர் அளவு இனிய பலன்களே வந்து சேரும். புத்திர ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக் கும் பொழுது பிள்ளைகள் வழியில் உதிரிவருமானங்கள் வந்து சேரும். பல நாட்களாக நேர்முகத் தேர்விற்குச் சென்றும் தேர்ச்சி பெறாதவர்கள் இப்பொழுது திடீர் என தேர்ந்தெடுக்கப்பெற்று உத்தியோகத்திற்கு அழைக்கப்படலாம். விரயாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் அறிமுகமில்லாத நபர்களை நம்பிச் செய்யும் தொழில்களால் சில இழப்புக்களையும் சந்திக்க நேரிடும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 6,11 க்கு அதிபதியான சுக்ரன் டிசம்பர் 3 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் ஸ்தானத்திற்கு அதிபதி வாக்கு, தனம், குடும்பம் எனப்படும் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கொள்கைப் பிடிப்புடன் செயற்படவும் இயலாது. தனக்குத்தானே எதிரி என்ற சூழ்நிலை அமையலாம். எனவே, எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செயற்பட வேண்டிய நேரமிது.

இம்மாதம் அஷ்டமி அன்று காலபைரவர் வழிபாட்டை மேற் கொள்ளுங்கள். சனிப்பிரதோஷம் அன்று இயன்ற வரை அன்னதானம் செய்யுங்கள். நந்தியெம்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சந்தான விருத்தி முதல் சகல விருத்தியும் ஏற்ப டும்.

# சிவல்புரி சிங்காரம்



## மகரம்

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**யோசித்துச் செயற்படும் மகர இராசிநேயர்களே!**

**கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்!**

கார்த்திகை மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சனி உச்சம் பெற்றிருப்பது யோகம்தான். அதே நேரத்தில், அஷ்டமத்தில் அல்லவா செவ்வாய் சஞ்சரிக்கிறார். எனவே, உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும். உற்சாகம் குன்றாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

பொதுவாக, 4,11 க்கு அதிபதி 8 இல் இருக்கும் பொழுது குடும்பப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. அவசரப்பட்டு எந்த முடிவும் எடுத்துவிட வேண்டாம். அருகிலிருக்கும் ஆன்றோர்கள், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.

## பயணங்கள் அதிகரிக்கும் பணத்தேவைகள் பூர்த்தியாகும்

நவம்பர் 30 வரை செவ்வாய் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் தடைக் கற்களை படிக்கற்களாக மாற்றிக் கொள்ள முருகப்பெருமான் வழிபாட்டை நீங்கள் முறையாக மேற்கொள்வது நல்லது. 6 ஆம் இடத்தில் வியாழன் வக்ரம் பெறுவது நல்லதுதான். 12க்கு அதிபதி வக்ரம் பெறும் பொழுது விரயங்கள் குறையும். வீட்டுச் செலவுகள் கூடினாலும் அதற்கேற்ற விதத்தில் பண வரவுகள் வந்துகொண்டே இருக்கும். பயணங்கள் அதிகரிக்கும்.

சுக்ர பலம் குறைவாக இருப்பதால் குழந்தைகள் நலனில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். கூடுதல் லாபம் கிடைக்கும் என்று நம்பி விற்ற சொத்துக்களில் பிரச்சினைகள் உருவாகிப் பாதியிலேயே நின்று போகலாம். என்ன இருந்தாலும், இம்மாதம் கொஞ்சம் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பிரதோஷ காலங்களில் நந்தி வழிபாட்டை மேற்கொண்டால் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். இந்த மாதத்தில் இரண்டு சனிப்பிரதோஷங்கள் வருகின்றன. அந்த நாட்களில் அருகிலிருக்கும் சிவாலயத்திற்குச் சென்று வழிபட்டால் நன்மையை வரவழைத்துக் கொள்ள இயலும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக புத- ஆதித்ய யோகம் உருவாகப் போகிறது. எனவே, இழப்புக்களை ஈடு செய்யும் விதத்தில் ஏதேனும் ஒரு தொகை வந்து சேரலாம். உழைப்பிற்கேற்ப பலன் கிடைக்காவிட்டாலும் உதிரி வருமானங்கள் வந்துகொண்டேயிருக்கும். வாகனப் பழுதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும்.

**கன்னிச்செவ்வாயின் சஞ்சாரம்!**

நவம்பர் 30 ஆம் திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக எண்ணிய காரியங்கள் எல்லாம் படிப்படியாக நிறைவேறும். புண்ணிய ஸ்தலத்திற்குச்சென்று வழிபட்டு வருவீர்கள். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருப்பதால் புதிய பொறுப்புக்களும் பதவிகளும் உங்களுக்கு வந்து சேரலாம். பூர்வீக சொத்துத் தகராறுகள் அகலும். உடன்பிறப்புக்கள் உங்களோடு இணைந்து செயற்பட மறுப்பர். கடன்சுமையிலிருந்து விடுபட அஷ்டமியன்று பைரவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**மகரச் சுக்ரனின் சஞ்சாரம்!**

மகர இராசியில் டிசம்பர் 3 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக நல்ல பலன்கள் உங்கள் இல்லம் தேடி வரப்போகிறது. புத்திர ஸ்தானாதிபதி இராசியில் சஞ்சரிக்கும் பொழுது புத்திர விருத்திக்கு காத்திருப்பவர்களுக்கு அந்த பாக்கியம் கிடைக்கும். பூமி யோகம் முதல் பொன், பொருள் வாங்கும் யோகம் வரை வந்து சேரும் நேரமிது. தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கூட்டாளிகள் விலகினாலும் தனித்து இயங்க முன்வருவீர்கள். கூடுதல் லாபம் தொழிலில் கிடைக்கும். இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும்.

இம்மாதம் முருகப்பெருமான் வழிபாட்டையும் முறையாகச் செய்வதோடு அருகில் இருக்கும் படைவீடுகளில் ஒன்றிற்குச் சென்று வந்தால் தடைகள் அகலும். தன வரவு திருப்தியாக இருக்கும். அதோடு அஷ்டமியன்று காலபைரவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

(தொடரும்)

# காணாமற்போனோரை கண்டுபிடிக்கும் செயற்பாட்டை த.தே.கூ. முன்னெடுக்கும்

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

(பூந்தோட்டம்)

இலங்கையில் கடந்த காலங்களில் காணாமற் போனோர் தொடர்பில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு அக்கறை செலுத்தும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எமது நிலத்தையும் காணியையும் கடலையும் பெறும் வாழ்வுரிமைக்கான போராட்டங்களை எவ்வாறு தமிழ் தேசியக்கூட்டமைப்பு முன்னெடுத்து செல்கின்றதோ அதே அளவிற்கு காணாமற் போனோரைக் கண்டுபிடிக்கும் செயற்பாட்டிலும் கூட்டமைப்பு ஈடுபடும்.

தொலைந்த தனது மனைவி, தனது கணவன், தனது பிள்ளை, சகோதரம் போன்றோர் இருக்கிறார்களா? இல்லையா? என ஏக்கத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் எமது காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு, விடிவையும் காணாமற் போனோர் தொடர்பில் அவர்களை கண்டுபிடிக்கும் பொறுப்பும் கடமையும் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மேல் சுமத்தப்பட்டுள்ளது. எனவே நாம் அதற்காக முன்னுரிமை அடிப்படையில் போராடுவோம்.

அதேபோல் இன்று சிறையில் வாழும் எமது அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தேர்தல் காலத்தில் நாம் பேசியது போன்று அவர்களை மீட்கும் செயற்பாடு தமிழ் தேசியக்கூட்டமைப்பினால் நிச்சயமாக நடைபெறும். இவ்வாறான செயற்பாடுகள் வெறுமனே பேச்சளவில் இருத்தல் கூடாது என பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என தெரிவித்தார். (ம-266-250)

# வடக்கையும் கிழக்கையும் பிரிக்க அரசு புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்குகிறது

## வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு தலைவர் தெரிவிப்பு

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு அரசு புதிய மாவட்டம் ஒன்றினை உருவாக்கி வருகின்றது என வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் கே. தேவராசா தெரிவித்தார்.


காணாமற்போனோர் தொடர்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

வட மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் ஒன்றாக்கி வைத்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நாயாறு போன்ற பிரதேசங்களையும் வவுனியா வடக்கு பிரதேசத்தின் தனிக்கல்லு, பட்டிக்குடியிருப்பு, வெடிவைத்த கல், ஊஞ்சல்கட்டி பிரதேசங்களையும் திருகோணமலையில் உள்ள திரியாய், புல்மோட்டை போன்ற பிரதேசங்களையும் பதவியாவில் உள்ள ஒருசில கிராம சேவகர் பிரிவுகளையும் ஒன்றுதிரட்டி வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு ஏதுவாக வெலிஓயா எனும் மாவட்டத்தை உருவாக்குவதற்கு அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது.

வெலிஓயா அங்கீகரிக்கப்படாத மாவட்டமாக தற்போதும் இருந்து வருகின்றது. குறிப்பாக பட்டிக்குடியிருப்பு பிரதேசத்தில் 3000 இற்கும் அதிகமான சிங்கள வாக்காளர்கள் இருக்கின்றார்கள். ஆனால் பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் அவ்வாறு உள்ளமை தனக்கு தெரியாது என்கின்றார். உண்மையில் அவர்கள் கிராம அலுவலரிடம் பதிவு செய்யப்படாமலேயே இவர்கள் வாக்காளர்களாக உள்ளனர்.

இவ்வாறு பலவிதமான நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகின்றது. ஆகவே நில ஆக்கிரமிப்பில் இருந்து எம்மை பாதுகாத்துக்கொள்வும் காணாமற் போனோரை கண்டு பிடித்து தருமாறும், சிறையில் வாடிக்கொண்டிருப்பவர்களை விடுதலை செய்யுமாறும் இவ்வாறான பிரச்சனைகளுக்கு இறுதியானதும் முடிவானதுமான தீர்வைக்காண்பதற்கும் நாம் ஒற்றுமையாக திரண்டு போராட்டங்களை நடத்த வேண்டும். அவ்வாறான போராட்டங்கள் மூலமே நாம் அழுத்தங்களை பிரயோகித்து எமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியவர்களாகியுள்ளோம் என தெரிவித்தார். (ம-266-250)

# பருவமழை இன்மையால் விவசாயிகள் திண்டாட்டம்



(கண்டாவளை)

கிளி.மாவட்டத்தில் பல பிரதேசங்களில் மழை நீரை நம்பிய காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் பருவ மழை பெய்யாமையினால் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக அதிக விலை கொடுத்து செய்கை மேற்கொண்ட 1 1/2 மாதங்களைக் கடந்த நிலையில் நீரின்மையால் பெரும் வரட்சி காணப்படுகின்றது.

இதனால் கிருமி நாசினி தெளிக்காமை, உரம் இடாமை என்பவற்றால் பயிர்கள் வளர்ச்சி குன்றியும், புற்கள் நிறைந்த தன்மையுடனும் காணப்படுகின்றன.

இனிவரும் காலங்களில் மழை பெய்யும் சந்தர்ப்பங்களிலும்கூட தாம் எதிர்பார்த்த விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியாதென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-263)

# நகர அபிவிருத்தி தொடர்பில் மக்களிடம் குறைகேள் நிகழ்வு

வவுனியா நகர அபிவிருத்திகளின் தேவைப்பாடுகள் குறித்து குறைகேள் மற்றும் அபிவிருத்தியின் தேவை குறித்தான ஆராயும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா நகரசபையின் செயலாளர் கே. சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா நகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கிராம சேவகர்கள் கலந்து கொண்டு தமது பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது வீதி அபிவிருத்திகள், வடிகால் அமைப்புகள் மேற்கொள்ளல், சனசமூக நிலையங்கள் அமைத்தல், நகரசபைக்கு சொந்தமான காணிகளை பராமரித்தல், மைதானங்களின் புனரமைப்புகள், மயானங்களின் பராமரிப்பு, வீதி மின்குமிழ் பொருத்துதல் போன்ற அபிவிருத்தி பணிகள் என்பன பொதுமக்கள் சார்பில் முன்வைக்கப்பட்டன.

இவை தொடர்பில் கவனம் செலுத்திய நகரசபையின் செயலாளர் திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி நகரசபையின் நிதி வளத்திற்கு ஏற்ப அபிவிருத்திகளை மேற்கொள்வதாக பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தெரிவித்திருந்தார். (செ-5-266)




# இரு நூலகங்களுக்கு சிறந்த நூலக விருதுகள்

(பூநகரி)

2012ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் சிறந்த நூலகங்களாக கரைச்சி பிரதேச சபையின் கிளிநொச்சி பொது நூலகமும் வட்டக்கச்சி பொது நூலகமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையினரால் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட நூலகங்களின் நூலகர்களான ம.பிரபாகரனும் திருமதி.இ.சசிகலாவும் இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கல்விச் சேவைகள் அமைச்சரிடம் தமது நூலகங்களுக்குரிய விருதுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர். (ம-84)

# இலங்கை அரசு பேச்சுவார்த்தை எனக்கூறி எம்மை ஏமாற்றுவதிலேயே காலம் கடத்துகிறது

## ஜ ம.முன்னணியின் பேச்சாளர் சி.பாஸ்கரா

எம்மை அடக்கி ஒடுக்கியமையினாலேயே அகிம்சை போராட்டங்களும் ஆயுத போராட்டங்களும் தோன்றி இன்றி விரும்பியோ விரும்பாமலோ இழக்கப்பட்ட நிலையில் முள்ளிவாய்க்கால் இழப்புகளை சர்வதேசம் திரும்பிப்பார்க்கும் முக்கிய காலத்தில் நாம் உள்ளோம என ஜனநாயக மக்கள் முன்னணியின் பேச்சாளரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி. பாஸ்கரா தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார், அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

தமிழ் இராச்சியமாக இருந்த எங்கள் பிரதேசத்தை ஆங்கில அரசுகள் ஒன்றாக்கிய தன் பின்னரான காலம் தொட்டு பெரும்பான்மை என்பதற்கு சிங்கள அரசுகள் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குவதிலேயே உன்னிப்பாக இருந்துள்ளன.

இவ் அரசுகள் எம்மை அடக்கி ஒடுக்கியமையினாலேயே அகிம்சை போராட்டங்களும் ஆயுத போராட்டங்களும் தோன்றி இன்று விரும்பியோ விரும்பாமலோ சகலமும் இழக்கப்பட்ட நிலையில் முள்ளிவாய்க்கால் இழப்புகளை சர்வதேசம் திரும்பிப்பார்க்கும் முக்கிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

இலங்கை அரசு தொடர்ந்தும் பேச்சுவார்த்தை என்று சொல்லிச்சொல்லி எம்மை ஏமாற்றுவதிலேயே காலத்தை கடத்துகின்றது. வட மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்பு 99 வீதத்தால் வெற்றி பெற்று நல்லிணக்கத்தை மேலும் காட்டுவதற்கு பல்வேறு விமர்சனங்களுக்கும் மத்தியில் ஜனாதிபதியின் முன்னால் முதலமைச்சரின் சத்தியப்பிரமாணத்தை செய்திருந்தனர்.

இவ்வாறு பல்வேறு விதத்திலும் தமிழர் தரப்பின் நல்லிக்கத்தை இந்த அரசுக்கு காட்டிய போதிலும் மகிந்த அரசு எவ்வாறு இவற்றையெல்லாம் எட்டி உதைக்கின்றது என்பதனை நாம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

ஜனாதிபதியின் முன்னால் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டு இவர்கள் வட மாகாணத்திற் வருவதற்கு முன்னதாகவே கிளிநொச்சியில் சுன்னக்கல் எடுத்தல் என்ற பெயரில் ஆயிரம் ஏக்கர் நிலத்தை அரசு சுவீகரித்துக் கொண்டது.

அதற்கும் மேலாக வலி .வடக்கில் உள்ள வீடுகளை இடித்து தள்ளுகின்றார்கள். இவற்றுக்கும் அப்பால் அமைச்சர் மேர்வின் கோமாளித்தனமான பேச்சுக்களைப் பேசிக் கொண் டிருக்கின்றார்.

இவ்வாறான நிலையில் மக்களின் உரிமைக்காக போராட்டம் நடத்துபவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்களை விடுக்கின்றார்கள். மாட்டுத்தலையையும் இருப்பிடங்களில் வைக்கின்றார்கள்.

இதுமட்டுமல்ல அவுஸ்திரேலிய பிரதமர் பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தந்த நிலையில் அந்த நாட்டினதும் நியூசிலாந்தினதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இங்குள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகளை சந்திப்பதற்காக நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான நிலையில் எவ்வாறு நல்லிணக்கத்தை இந்த அரசு ஏற்படுத்தி தரப்போகின்றது.

இவ்வாறான நிலையில் நாம் எல்லோரும் சேர்ந்து அரசுக்கு எதிராக அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். இவ்வாறான அழுத்தங்களே எமக்கான விடிவை பெற்றுத் தரும். இந்தியாவில் கூட பிரதமர் பொது நலவாய மாநாட்டுக்கு வருவோம்- வரவோம் என கூறி இறுதியில் வராதுவிட்டமைக்கும் கனேடிய பிரதமர் வராதுவிட்டமைக்கும் அங்குள்ள எமது உறவுகள் கொடுத்த அழுத்தங்களே காரணமாக உள்ளன.

அவ்வாறான அழுத்தங்கள் எமது ஒற்றுமையின் ஊடாக இங்கும் நடைபெற வேண்டும். அப்போதுதான் காணாமற்போன எமது உறவுகளின் நிலையை நாம் அறிந்து கொள்ள முடியும். அவர்களின் நிலையை நாம் சர்வதேச ரீதியில் வெளிப்படுத்த முடியும் என தெரிவித்தார். (ம-266-250)

# உரிமைப் போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் - மாவை எம்.பி

தமிழ் மக்களுடைய ஒரு முக்கியமான நாள் கார்த்திகைப் பெருநாள். மகிழ்ச்சியோடு அந்த நாளை கொண்டாட வேண்டிய எமது மக்கள் இன்று எண்ணெய் ஊற்றுவது போல் கண்ணீரைச் சிந்தி இந்த தீப்பந்த போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த போராட்டம் குறிப்பாக 2009 மே மாதத்தின் பின்னர் போரின் இறுதியில் இராணுவத்திடம் தங்களது பிள்ளைகளை, தலைவர்களை, தங்களின் உறவுகளை சரணடைய செய்த தாய்மார்கள், பெற்றோர்கள், சகோதரர்கள், மனைவியர் எல்லோரும் இன்று தங்களால் இராணுவத்திடமும் அரசிடமும் கையளிக்கப்பட்ட தங்களுடைய உறவுகள் யாவரும் எங்கே உள்ளனர் என்று கதறி அழுது கொண்டிருக்கின்றார்கள்.

அந்தக் கண்ணீர்தான் தீயாக இன்று எரிந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு அந்த தாய்மார்களுடைய கண்ணீரை நாம் சாதாரணமாக கருதிவிட முடியாது. எங்களிடம் பரம்பரை பரம்பரையாக ஒரு கருத்து நிலவி வருகிறது. அது, ஏழை அழுத கண்ணீர் சும்மா விடாது என்பதாகும்.

அந்த உணர்வோடும் உறுதிப்பாட்டோடும் ஜனநாயக வழிகளிலும் அற வழிகளிலும் மக்களது உரிமைப் போராட்டங்களை தொடர்ந்து கொண்டிருகின்றோம். இன்னமும் அவை தொடரும் என்பதை இந்த கண்ணீர் உறுதி செய்கின்றது.

மக்களுடைய இதயத்தை என்றுமே தோற்கடித்துவிட முடியாது, தமிழ் மக்களின் உணர்வுகளை அடக்கி விடமுடியாது, எங்கு பார்க்கினும் தாய்மார்களின் ஓலத்தை தான் எங்கள் காதுகளிலும் இதயங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஆதலால்தான் இறுதிக் கட்ட போரில் யார் கொல்லப்பட்டார்கள்? யார் அரசிடம் உள்ளார்கள, எங்கே வைக்கப்பட்டிருக்கிறார்கள்? போன்ற ஏக்க வினாக்களுக்கு ஒரு பதில் கிடைக்க வேண்டும்.

அது மிகவும் முக்கியம். இந்த அடிப்படையில் தான் இன்றைக்கு எம்மால் மட்டுமின்றி சர்வதேச நாடுகளில் இருந்தும் நேற்று வரையில் குரல்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இந்த போர் குற்றத்தை இழைத்திருக்கின்ற அரசாங்கம் ஜனநாயக அரசாங்கம் என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜனநாயக ரீதியாக மக்களுடைய உணர்வுகளை பிரதிபலிக்கின்ற அரசாங்கமாக இருக்க வேண்டுமானால் ஜனநாயக ரீதியாக இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு அளித்திருக்க வேண்டும்.

தமிழ் மக்கள் தங்களுடைய இறுதி சந்தர்ப்பத்தை இந்த ஆணைகளின் மூலம் மேலும் வெளிப்படுத்தியிருக்கின்றனர். அதனால் அவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

ஆனால் இந்த அரசாங்கம் மக்களது வாக்குகளுக்கும் கோரிக்கைகளுக்கும் மதிப்பளிப்பதில்லை.

எங்களுடைய நிலங்களை ஆக்கிரமித்த இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்ற தீர்மானத்தை நாங்கள் திரும்ப திரும்ப வலியுறுத்துகின்றோம். அதற்காக தொடர்ந்தும் போராடுகின்றோம். போராட வேண்டும். போராடாவிடின் நாங்கள் அழிக்கப்பட்டு விடுவோம்.

எனவே தீப்பந்த போராட்டம் போன்று தொடர்ச்சியாக பல போராட்டங்களை நாம் நடத்த வேண்டும். இதற்காக மலையக மக்களுடனும் ஒன்றித்து போராட வேண்டும. இந்தியாவும் புலம்பெயர் மக்களும் இன்னும் எமக்காக குரல் கொடுக்கும் ஏனைய நாடுகளும் எமது போராட்டத்திற்கு ஆத ரவு தரவேண்டும். அதன் மூலமே எமக்கான தீர்வை நாம் பெறமுடியும் என்றார். (ம-250)

# மனிதவுரிமை விடயங்களுக்கு தீர்வுகாண நடவடிக்கை

## பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவிப்பு

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காண்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் முன்னிலையிலேயே தீர்வுகள் பெற்றுத்தரப்படும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி கரைச்சி பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கிளி. மாவட்ட கிராமமட்ட சிறுவர் கண்காணிப்பு குழுக்களுக்கான மனித உரிமைகள் தொடர்பாக இடம்பெற்ற பயிற்சி செயலமர்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், சிறுவர் உரிமைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மூடப்படும் சந்தர்ப்பங்களில் சிறுவர் தொடர்பான பாதிப்புக்கு முன்னரான பாதுகாப்பு மற்றும் பாதிப்புக்குப் பின்னரான நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமமட்ட சிறுவர் கண்காணிப்பு குழுவினராகிய நீங்கள் சிறுவர் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் கொண்டுள்ள ஆர்வம் மிகவும் சிறப்பானது.

மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைப் பற்றி உடனடியாக தெரியப்படுத்தவேண்டிய சகலதுறை சார்ந்த அதிகாரிகளையும் ஒன்றிணைத்து மிகக்குறுகிய நாட்களில் அவர்களூடாகவே பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு அவர்களை உங்களுடன் இணைத்து கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சிறுவர் உரிமை பாதுகாப்பு விசாரணை அதிகாரி மற்றும் தேவைநாடும் மகளிர் அமைப்பின் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.(ம-263)

# 17 மில்லியன் ரூபா செலவில் இரு மீன்பிடி துறைமுகங்கள்

பூநகரி பள்ளிக்குடா மீன்பிடித்துறையில் கடற்றொழிலாளர்களின் நன்மைகருதி சோ ஆ நிறுவனத்தினால் 17 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மீன்பிடித்துறைகள் அமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது.

கடந்த 4 மாதங்களாக நடைபெற்று வருகின்ற இத்துறைமுகவேலைகள் டிசெம்பரில் பூர்த்தி செய்யப்படுமென தெரிவிக்கப் படுகிறது.

320 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் பள்ளிக்குடா கடலில் இத்துறைமுகம் அமைக்கப்படுவதால் சகல வசதிகள் கொண்டதாக கரையில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் வள்ளங்களை இலகுவாக அணைக்கக்கூடியதாக இருக்கும்.

இதுவரை காலமும் மீனவர்கள் 200 முதல் 600 மீற்றர் தூரத்திற்கு அப்பால் வள்ளங்களை நிறுத்திவிட்டு பிடித்த மீன்களை கடல்நீரூடாக கரைக்குச் சுமந்துள்ளார்கள்.

பள்ளிக்குடா கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் கோரிக்கைக்கு ஏற்ப இவ் இறங்குதுறை அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ம-84)




# கழிவுநீர் வாய்க்கால்கள் மூடப்பட்டமையால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் விவசாயிகள்

(குருமன்காடு)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புத்திரகண்டான் விவசாய கிராமத்தில் உள்ள மூன்று கழிவு நீர் வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளமையினால் அக்கிராமத்தைச் சேர்ந்த விவசாய மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அந்த மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புத்திரகண்டான் குளத்தின் கீழ் 90 ஏக்கர் காணிகள் உள்ளன. அவற்றுள் 60 ஏக்கர் காணிகளுக்கென மூன்று கழிவு நீர் வாய்க்கால்களே உள்ளன.

ஆனால் தற்பொழுது இம் மூன்று கழிவு நீர் வாய்க்கால்களும் மூடப்பட்டு விட்டன. தற்போது பெரும்போக விவசாயம் செய்யும் காலமிது. ஆனால் குறித்த வாய்க்கால்கள் இல்லாமையால் தற்போது விவசாயம் செய்வதில் அக்கிராம விவசாய மக்களாகிய நாங்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றோம்.

முதலாவது வாய்க்கால் புத்திரகண்டான் குளத்தில் இருந்து வந்து நானாட்டான் வீதியில் இருக்கும் குழாயினூடாக கார்மேல் மாதா கோயிலுக்கருகாமையில் உள்ள வாய்க்காலைச் சென்றடைகின்றது.

குறித்த வாய்க்காலை அதற்கு அருகாமையில் குடியிருக்கும் சிலர் மூடி விட்டனர். தற்போது குறித்த வாய்க்கால் திறக்கப்பட்டு புனரமைக்கப்படாது விடின் விவசாய செய்கைகள் மட்டுமல்ல அப்பகுதியில் குடியிருப்போரும் வெள்ளத்தில் மூழ்கவேண்டிய நிலை ஏற்படும்.

இவ் வாய்க்கால் அமைந்திருக்கும் காணியில் குடியிருப்பவர்கள் அத்துமீறி குடியிருப்பவர்களாவர்.

இந்த வாய்க்கால் பல வருடங்களாக இங்கு உள்ளது. இக்காணிக்கு உரிமையாளர் வெளிநாட்டில் உள்ள நிலையில் அத்துமீறியவர்கள் போலி உறுதிகளை எழுதி குறித்த வாய்க்காலை மூடி குடியமர்ந்துள்ளனர்.

இரண்டாவது கழிவு வாய்க்காலானது அளவக்கை, ஆத்திக்குழி சேமக்காலை வீதி அங்கே அமைத்ததால் மூடப்பட்டு விட்டது.

இவ் வீதி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் கலந்துரையாடலினூடாக அமைக்கப்பட்ட போதிலும் விவசாயிகளிடம் இது தொடர்பாக எந்த ஆலோசனைகளும் கேட்கப்படவில்லை.

இது தொடர்பாக கேட்கப்போனபொழுது எங்களை விரட்டி விட்டனர். நாங்கள் உடனடியாக இதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், உரிய அமைப்பிடமும் முறையிட்டோம். ஆனால் எந்தவித முடிவும் எடுக்கவில்லை. உரிய பொறியியலாளரிடமும் கூறியுள்ளோம். ஆனால் இந்த வாய்க்கால் இதுவரையில் திறக்கப்படவில்லை.

குறித்த வாய்க்கால் திறக்கப்படாது விடின் நாங்கள் பெரும்போகம் செய்ய முடியாது. இதனால் நாங்கள் உணவிற்காக துன்பப்படும் நிலை ஏற்படும். எனவே உரிய அதிகாரிகள் குறித்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடமாகாண விவசாய அமைச்சர் பி.ஐங்கரநேசன் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோநோதராதலிங்கம் ஆகியோரது கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-250)

# கடற்றொழிலாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன



(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 14 கடற்தொழிலாளர் குடும்பங்களுக்கு சோ ஆ நிறுவனத்தால் தலா 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.


இப்பகுதியில் கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பலவகையான உதவிகள் இந்த வறுமைக் கோட்டுக்கு கீழ்பட்ட 14 குடும்பத்தினருக்கும் வழங்கப்பட்டதாக கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் ஜோசப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

வலை வழங்கும் நிகழ்வில் சோ ஆ நிறுவன உத்தியோகத்தர்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத்தினர் கூட்டுறவு சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ம-84)

# இறைவரி திணைக்களத்திற்கு 2000 பேர் வருமானவரி செலுத்தி வருகின்றனர்

## பிரதி ஆணையாளர் பா.சிவாஜி







(யாழ்ப்பாணம்)

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் ஊடாக 2000 பேர் வருமான வரி செலுத்தும் அதே வேளை தேசத்தை கட்டியெழுப்பும் வரி யினை ஆயிரத்து 800 பேர் செலுத்துகின்றனர் எனத் தெரிவித்துள்ள பிரதி ஆணையாளர் பாலசுந்தரன் சிவாஜி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் பொன்விழா நிகழ்வு நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இதில் தலைமையுரையுடன் வரவேற்பு உரையினையும் நிகழ்த்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தின் பிரதி ஆணையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்,

1933 ஆம் ஆண்டில் வருமான வரித் திணைக்களம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட எமது திணைக்களம் தனது வரி நிர்வாகத்தைப் பன்முகப்படுத்தல் என்ற சிந்தனை எழுச்சி பெற்ற போது முதன் முதலாக வட மாகாணமே தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் பின்னணியில் 07.10.1963 இல் யாழ். பிராந்திய அலுவலகம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் முதலாவது பிராந்திய அலுவலகமாக ஸ்தாபிக்கப்பட்டமை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இச்சந்தர்ப்பத்தில் இவ் அலுவலகத்தின் வெற்றிக்காகத் தமது பங்களிப்பையும் உழைப்பையம் நல்கிய அனைத்துத் தரத்தின் ஊழியர்களையும் எமது திணைக்களத்தின் சார்பில் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

உள்நாட்டு யுத்த காலப் பகுதியில் எமது யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு உட்பட வரி நிர்வாகத்தில் ஒரு சீர்குலைவு ஏற்பட்டிருந்த போதும் 2010 ஆம் ஆண்டிலிருந்து எமது பிராந்திய வரி நிர்வாக நடவடிக்கைகள் படிப்படியாக வழமைக்குக் கொண்டு வரப்பட்டு தற்போது நாட்டிலுள்ள ஏனைய 16 பிராந்திய அலுவலகங்களைப் போல் வரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது பிராந்திய அலுவலகத்தின் வரி நிர்வாகம் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருப்பதற்கு ஓர் குறிகாட்டியாக 2012 இல் வரி செலுத்தியோர் 7 பேருக்கு சிறந்த வரி செலுத்தியோருக்கான சிறப்புரிமை அட்டை வழங்கப்பட்ட அதேவேளையில் 2013 இல் 18 ஆக உயர்ந்தமையைக் குறிப்பிடலாம்.

இதற்கு மேலதிகமாக எமது பிராந்திய அலுவலக ஊழியர்களினது கடும் உழைப்பையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த நிகழ்வில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் திருமதி மல்லிகா சமரசேகர முதன்மை விருந்தினராக கலந்து கொண்டிருந்ததோடு விருதுகளையும் வழங்கியிருந்தார். (அ-6)

## சுதேச மருத்துவ கலந்துரையாடல்

சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சரின் அறிவுறுத்தலுக்கமைவாக வடமாகாண சுகாதார அபிவிருத்தி திட்டம்(சுதேச மருத்துவம்) ஒன்று தயாரிக்கப்படவுள்ளதால் இத்திட்டம்சார் கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு பண்ணையில் உள்ள சுகாதாரக் கிராமத்தில் உள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆயுள்வேத வைத்தியர்கள், ஆயுள்வேத வைத்தியம் சார்ந்த தனியார்கள், பாரம்பரிய வைத்தியர்கள், சுதேச மருத்துவம் சார்ந்த ஏனைய திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், சுதேச மருத்துவ ஆர்வலர்கள் அனைவரும் பங்கு கொண்டு சுதேச மருத்துவம் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தேவைகள் ஆகியவற்றை இனங்காணுவதற்கு உதவுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் த.தே.கூட்டமைப்பு பங்கேற்காது

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதியும் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதியும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அக்கூட்டத்தில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும் அதனை பிற்போடுமாறும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழு துணைத் தலைவர் மாவை சேனாதிராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்க அதிபர்களான சு.அருமைநாயகம் மற்றும் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது ,

தங்களுடைய 4.11.2013 திகதியிட்ட கடிதத்தை 17.11.2013 அன்று பார்வையிடும் வாய்ப்பு ஏற்பட்டது. தங்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடியதற்கு அமைவாக இக்கடிதம் அனுப்பப்படுகின்றது.

தங்கள் கடிதத்தில் மாவட்ட குழக்கூட்டத்துக்கு தலைமை தாங்குபவர் யார் என்பது பற்றி தெரிவிக்கப்படவில்லை. ஏனெனில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்த பின் மாகாண சபை முதல் அமைச்சர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் முன்னதாக பேசப்பட்டிருந்தது. முதலமைச்சருடன் மேற்படி கூட்டம் பற்றியோ, பொருத்தமான திகதி பற்றியோ பேசப்பட்டிருக்கவில்லை.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டிருக்கவுமில்லை. மேற்படி கூட்டம் தொடர்பில் சென்ற கூட்டக் குறிப்புகள் எமக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. தாங்கள் அனுப்பிய கூட்ட அறிவித்தலில் கூட்ட நிகழ்ச்சி நிரல் இணைக்கப்படவில்லை.

எனவே, பாராளுமன்ற உறுப்பினராகிய என்னுடன் அல்லது வடக்கு மாகாண முதலமைச்சருடன் கலந்து பேசப்படாது மேற்படி கூட்டத்திற்கு அறிவித்தமையானது அறிவித்தல் கொடுத்தவர்களின் தன்னிச்சையான நடவடிக்கையைக் காட்டுகின்றது. எனவே, நாம் மேற்படி கூட்டத்தில் பங்கு பற்றமாட் டோம் என்பதைத் தெரியப்படுத்துவதுடன் இக்கூட்டத்தைப்பிற்போடுமாறும்கேட்டுக்கொள்கின்றேன் என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ)

## உரியவர்கள் பெற்றுக்கொள்க

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் உரிமை கோரப்படாத JVC இன தொலைக்காட்சிப்பெட்டி ஒன்று கோப்பாய் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொலைக்காட்சிப் பெட்டியை உரிமை கோருபவர்கள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் அலுவலக நேரங்களில் நீதிமன்றிற்கு சமுகமளித்து அடையாளம் காட்டி பொருளைப் பெற்றுக்கொள்ளுமாறும், ஆறு மாதகாலத்தினுள் குறித்த பொருளைப் பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அது அரசுடைமையாக்கப்படும் எனவும் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)

# பொதுமக்களும் குருமாரும் தாக்கப்பட்டமைக்கு மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழ கண்டனம்

குருமார் மீதும், மக்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. மிகவும் தந்திரமாக காணாமற்போனோரின் உறவுகளை பிரிட்டன் பிரதமரிடம் நெருங்கவிபாது தடுத்தமையையும் அரசசார்பு ஆதரவு குழுக்கள் மற்றும் அரச புலனாய்வாளர்கள் இதற்கென்று பிரத்தியேகமாக கொண்டு வந்து இறக்கப்பட்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அதன் தலைவர் எஸ்.வி.பி.மங்களராஜா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இறுதிப்போரின் போதும், அதனைத் தொடர்ந்தும் இலங்கையில் பொதுமக்கள் பலரும், குருமாரும் காணாமற்போயிருக்கின்றனர். இவர்களுள் பெண்கள், ஆண்கள், இளைஞர், இளம் பெண்கள், பாடசாலை மாணவர் ஆகியோர் அடங்குவர்.

சில குருமாரும் இவர்களுள் அடங்குவர். இவர்கள் விசாரணைக்கென்று அழைத்துச் செல்லப்பட்டவர்கள், கடத்தப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் . விசாரிக்கப்பட்ட பின் விடுவிக்கப்படுவார்கள் என்ற உத்தரவாதத்தில் இராணுவத்திடம் பெற்றோரால் கையளிக்கப்பட்டவர்களும் அடங்குவர். இவர்களில் பல்லாயிரக்கணக்கானவர் கள் இன்னமும் விடுவிக்கப்படவுமில்லை. இவர்கள் எங்கிருக்கின்றனர் என்று உறவினர்களுக்கு அறிவிக்கப்படவுமில்லை. இதனையிட்டு பல கவனயீர்ப்பு போராட்டங்கள் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டும் எதுவித பயனுமில்லை.

இந்நிலையில் கடந்த 15 ஆம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் யாழ். வந்திருந்த போது ஒரு கவனஈர்ப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் காணாமற்போனோரின் உறவுகளுடன் 20 இற்கு மேற்பட்ட குருமாரும் கலந்துகொண்டிருந்தனர். அமைதியான இந்த கவனஈர்ப்பு நிகழ்வுக்கு பொலிஸார் தெரிவித்த எதிர்ப்புக்கு நீதிமன்றம் தடை உத்தரவும் வழங்கியிருந்தது.

கவனஈர்ப்பு நிகழ்வில் கலந்து கொண்டோர் முதலமைச்சருக்கும் பிரிட்டிஷ் பிரதமருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்த யாழ்.நூலகத்திற்கருகில் வராது தடுக்கப்பட்டனர்.

இதேவேளையில் அங்கு கொண்டு வந்திறக்கப்பட்ட அரசசார்பினர் சிலர் ஆங்கில ஏகாதிபத்தியகால அத்துமீறல்களையும் விசாரிக்க வேண்டுமென்ற பதாகைகளுடன் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

பேச்சுவார்த்தை முடிந்து பிரதமர் வெளியேறும் பொழுதில் காணாமற் போனோரின் உறவுகள் அமைதியாக முன்னேறிச் சென்று தமது மகஜர்களைக் கையளிக்க முனைந்த வேளை அவர்கள் மீது வன்முறை பிரியோகிக்கப்பட்டு, சில பெண்கள் நிலத்திலும் விழுந்தனர். சிலருக்கு அடி உதையும் விழுந்தது. விழுந்த வயோதிப மாது ஒருவருக்கு உதவ முயன்ற போது ஒரு குருவானவரும் தள்ளி விழுத்தி உதைக்கப்பட்டார். இத்தகைய செயற்பாடுகளை நாம் கண்டிக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

உலக கழிப்பறை தினமா? நீங்கள் சிரிப்பது கேட்கிறது. இது சிரிக்கிற விஷயம் அல்ல. சீரியஸானது.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கழிப்பறை வசதிகள் இல்லாத குறைகள் தீர்க்க வேண்டாமோ!

இன்று உலகக் கழிப்பறைத்தினம். மனித குலம் தனது ஆறாவது அறிவின் அடையாளமாக நாகரிகம் என்பதை தோற்றுவித்தது. ஆறாவது அறிவின் கிடைப்பனவாகிய நாகரிகத்தின் அடித்தளமாக ஆடை அணிதலையும் கழிப்பறைகள் அமைத்தலையும் குறிப்பிட முடியும்.

மனித இனத்தின் வரலாற்றுத் தொடக்கத்தைக் கண்டறிதல் என்பதை விட, பிறந்த மேனியர்களாய் நடமாடிய மனித சமூகம் எப்போது ஆடை அணிதலுக்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டதோ! அன்று முதல் 'அது நாகரிகம் என்ற எல்லையைத் தாண்டி மானம் என்ற புதுப்பரிமாணத்தைத் தொட்டுக்காட்டியது.

இப்போது மானம் என்ற உன்னதத்தை ஆடை அணிதல் பெற்றிருப்பது போல கழிப்பறை அமைத்தலும் அதன் பயன்பாடும் பெற்றிருப்பது கண்கூடு. ஆக, மனித சமூகத்தின் அடிப்படை நாகரிகமாக இருக்கக்கூடிய கழிப்பறைகள் தொடர்பில் இன்றும் கவலை கொள்ளும் அளவில் எங்கள் நிலைமை உள்ளது.

ஆம்! உலகக் கழிப்பறைகள் தினமாகிய இன்றைய நாளில், இலங்கைத் திருநாட்டில் கழிப்பறைகளின் பற்றாக்குறையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் முதல் நிலைகளில் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

அபிவிருத்தி முயற்சிகளை முன்னெடுப்பதன் மூலம் இனப்பிரச்சினைகளை சுமுகமாக்க முடியும் என்று கருதப்படும் இந்த வேளையில், மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருக்கக்கூடிய கழிப்பறை வசதிகள் போதாமல் இருப்பது பெருந்துயரத்திற்குரியது.

அதிலும் குறிப்பாக வடமாகாணத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால், வீடுகள் மற்றும் பாடசாலை போன்ற இடங்களில் கழிப்பறைகள் சேதமுற்றுப் போயின. இவ்வாறு சேதமடைந்த கழிப்பறைகள் மீளமைக்கப்பட வேண்டியமை மிகவும் அவசியமானதாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் கருத்தியலில் கூறுவதாயின், "அபிவிருத்தியின் முதற்படியாக இருக்கக்கூடிய கழிப்பறை வசதிகள் சகல மக்களுக்கும் பாடசாலைகள் உள்ளிட்ட சகல பொது அமைப்புகளுக்கும் கட்டாயமாக கிடைக்க வேண்டும். அபிவிருத்தியின் அடித்தளமாக இருக்கக்கூடிய ஒரு முக்கிய விடயத்தை மறந்து பொது அபிவிருத்தி பற்றி எவரும் சிந்திக்க முடியாது.'' இங்கு பேராசிரியரின் கருத்து ஆழ்ந்து நோக்குதற்குரியது.

மனித சமூகத்தின் முன்னேற்றகரமான பயணிப்புகள் பற்றி உலகம் சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில் நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கழிப்பறைகளுக்கு பற்றாக்குறை என்ற மிகப் பெரும் குறைபாட்டை நிவர்த்தி செய்வது மாகாண சபை அரசுகளின் கட்டாயப் பணியாகும்.

எனவே உலக கழிப்பறைகள் தினமாகிய இன்றைய நாளில் வடக்கு கிழக்கில் இருக்கக்கூடிய கழிப்பறைகளின் பற்றாக்குறையை முழுமையாக நிவர்த்தி செய்வது என்ற திட்டத்தை உருவாக்கி அதனை மாகாண அரசுகள் செயற்படுத்த வேண்டும்.

# இலங்கைக்கு இரண்டு ரோந்துக் கப்பல்; அவுஸ்.முடிவால் அந்நாட்டில் சர்ச்சை

அவுஸ்திரேலியக் கடற்படைக்கு சொந்தமான இரண்டு ரோந்துக் கப்பல்களை இலங்கை கடற்படைக்கு வழங்க பிரதமர் ரொனி அபோட் எடுத்துள்ள முடிவு அந்நாட்டில் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்த அவுஸ்திரேலியப் பிரதமர் ரொனி அபோட் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

கொழும்புத் துறைமுகத்தில் தரித்து நின்ற இலங்கை கடற்படைக்குச் சொந்தமான சயுர என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலில் இடம்பெற்ற இச் சந்திப்பின் போது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் முப்படைகளினதும் தளபதிகளும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது 2 மில்லியன் டொலர் பெறுமதியான இரண்டு ரோந்துக் கப்பல்கள்ள கடற்படைக்கு வழங்க அவுஸ்திரேலியப் பிரதமர் ரொனி அபோட் இணக்கம் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல்களை தடுக்கும் இலங்கை கடற்படைக்கு உதவும் வகையிலேயே இவ்விரண்டு ரோந்துக் கப்பல்களையும் வழங்குவதாக அவுஸ்திரேலியப் பிரதமர் கூறியிருந்தார்.

அதேவேளை இலங்கையின் மனித வுரிமை நிலைமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இந்த ரோந்துக் கப்பல்களை இலங்கை கடற்படைக்கு வழங்க அவுஸ்திரேலியப் பிரதமர் எடுத்த முடிவுக்கு அங்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவுஸ்திரேலிய கீறின் கட்சியின் தலைவர் கிறிஸ்ரின் மல்னே, அவுஸ்திரேலியப் பிரதமரின் முடிவானது ஒரு வெறுப்பூட்டும் நடவடிக்கை என்று விமர்சனம் செய்துள்ளார். (எ-11)

## அருட்தந்தையர் மீது தாக்குதல்; பொதுநிலையினர் கழகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

அருட்தந்தையர்கள் மீதான தாக்குதலுக்கு யாழ்.மறைமாவட்ட பொது நிலையினர் கழகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த 15 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நடத்திய உறவுகள் மீதும் அருட்தந்தையர்கள் மீதும் நடத்தப்பட்ட மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம் வன்மையாகக் கண்டிப்பதோடு இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.நகருக்கு விஜயம் மேற்கொண்ட பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனைச் சந்தித்து தங்களுடைய மனவேதனைகளை உள்ளடக்கிய மனுவைக் கையளிப்பதற்காக காணாமற்போனோரின் உறவுகள் அமைதி வழியில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை இதனைக் குழப்புவதற்காகவும் டேவிட் கமரூனைச் சந்திப்பதைத் தடுப்பதற்காகவும் பொலிஸார் மிகவும் கீழ்த்தரமான செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள், பிள்ளைகளை இழந்து தவித்த பெற்றோர், அவர்களுக்கு பக்கபலமாக நின்ற மதத் தலைவர்கள் போன்றோர் மீது மக்களின் பாதுகாவலர் என்றும் நண்பர்கள் என்றும் சொல்லிக் கொள்கின்ற பொலிஸார் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமை வாழ்வுக்காக குரல் கொடுக்கின்ற சர்வதேச சமூகம் இந்த மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான தாக்குதலை ஒரு சாதாரண சம்பவமாக எடுத்துக் கொள்ளாது நீதியோடு கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பொதுநிலையினர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஏ)

## நிந்தவூரில் ஹர்த்தாலால் இயல்புநிலை பாதிப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு காரணமாக அப்பிரதேசத்தில் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு பொதுமக்களுக்கும் சிறப்பு அதிரடிப் படையினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையைத் தொடர்ந்து பொது மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைக் கண்டித்தே இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக் காலமாக இரவு நேரங்களில் வீடுகளுக்கு கல்வீச்சு மற்றும் வீட்டுக் கதவுகளை தட்டுதல் போன்ற அச்சுறுத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றது. இதனால் அப்பகுதி மக்களிடையே ஒருவித அச்சநிலை காணப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவுநிந்தவூர்கடற்கரைப்பகுதியில் இலங்கையின் சிறப்பு அதிரடிப் படையை சேர்ந்த ஐந்து பேர் பிரதேச மக்களால் சுற்றி வளைத்து பிடிக்கப்பட்டனர்.

இதனையடுத்து அவர்களை மீட்க சம்பவ இடத்துக்குச் சென்ற மேலதிக சிறப்பு அதிரடிப் படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இதன்போது சிறப்பு அதிரடிப் படையினர் ஆகாயத்தை நோக்கியும் தரையை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதனையடுத்து நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு நடவடிக்கைகளால் நிந்தவூர் பிரதேசத்தின் இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து சேவைகள் அனைத்தும் தடைப்பட்டதுடன் அரசாங்க தனியார் அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில் நிந்தவூர் பிரதேசத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்துவது தொடர்பாக பிரதேச செயலகத்தில் நேற்று மாலை விஷேட கூட்டம் ஒன்று கூட்டப்பட்டுள்ளது. (எ-11)

## மாணவர்களுக்கான சீருடைத்துணி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்களுக்கான 2014 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத் துணிகள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளும் நாளை புதன்கிழமை கோப்பாய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளும் யாழ். கல்வி வலய அலவலகத்திற்கு வருகை தந்து இவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் அறிவித்துள்ளார். (அ-5)

## மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பிரதான மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் செ.செல்வரதன் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில் யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பணிப்பாளர் எஸ்.ஜே.எம்.சகாயன், மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழக முகாமையாளர் ஏ.சத்தியமூர்த்தி மற்றும் முன்னாள் பணிப்பாளர்கள் விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (ஏ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### உனது ஆசிரியர் யார்?



❖ மனித உடல்தான் உலகத்திலேயே மிகச்சிறந்த உடலா கும். மனிதனே மேலான ஜீவன். எல்லா மிருகங்களையும் தேவர்களையும் காட்டிலும் உயர்ந்தவன். இந்தப் பிறவியை நாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

❖ உனக்குள் இருக்கும் ஆற்றல் மக்களுக்கு பயன்படும் வகையில் அமைய வேண்டும். வேறு எவரும் உனக்கு கற்பிக்கவும் முடியாது. ஆன்மிகவாதி ஆகிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத்தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

❖ எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே நல்லதையே விதைக்க கற்றுக்கொள்வோம்.

❖ காற்றை பயன்படுத்தி செல்லும் பாய்மரப் படகு போல, தகுந்த சந்தர்ப்பம் வரும்போது அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# ரஷ்ய விமானம் தீப்பிடித்தது; பயணித்த 50 பேர் உயிரிழப்பு

(மொஸ்கோ)

**ரஷ்யாவில் போயிங் ரக விமானம் ஒன்று சாசன் விமான நிலையத்தில் தரையிறங்கியபோது தீப் பிடித்து எரிந்ததில், அதில் பயணித்த 50 பேர் உயிரிழந்தனர்.**





ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருந்து நேற்றுமுன் தினமிரவு குறித்த விமானம் சாசன் நோக்கி புறப்பட்டது.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருந்து போயிங் 737 ரக விமானம் விமானி, ஊழியர்கள் 6 பேர் மற்றும் பயணிகள் 44 பேருடன் மேற்கு ரஷ்யாவின் டாடர்ஸ்டன் மாகாண தலைநகர் சாசன் நகருக்குப் புறப்பட்டுச் சென்றது.

அங்கு விமானத்தை தரை இறங்க விமானி முயற்சி மேற்கொண்டுள்ளார்.

ஆயினும் உடனடியாக அதனைத் தரை இறக்க முடியவில்லை.

தொடர்ச்சியாக 3 முறை முயற்சிததும் தரை இறங்க முடியாமற் போயிற்று.


நான்காவது முறையாகவும் விமானத்தை சாசன் விமானநிலைய ஓடு பாதையில் தரை இறக்க முயன்றபோது, அது தரையில் பயங்கரமாக மோதி தீப்பிடித்து எரியத் தொடங்கியுள்ளது.

விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் தங்கள உயிரைக் காப்பாற்றும் படி அலறியுள்ளனர்.

எனினும், விபத்து நடந்த சிறிது நேரத்துக்குள்ளேயே விமானத்தில் இருந்த 50 பேரும் உயிரிழந்து போயினர்.

பலியானவர்களின் உடல்களை மீட்கும் பணியில் விமான நிலைய அதிகாரிகள், மீட்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

அதிகாரிகள், விபத்து குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (2)



திருவண்ணாமலையில் மகாதீபத்திருவிழா நேற்றுமுன்தினம் ஏற்றிவைக்கப்பட்ட போது...

# முஷாரப் மீது பாகிஸ்தான் தேசத்துரோக வழக்குப் பதிவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த 2007 ஆம் ஆண்டு அவசர நிலையைப் பிரகடனம் செய்தமைக்காக முஷாரப் மீது அந்நாட்டின் உயரிய விசாரணை அமைப்பான எப்.ஐ.ஏ. தேச துரோக வழக்கைப் பதிவு செய்துள்ளது.

இவர் மீது கடந்த 2007ஆம் ஆண்டு 'முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை, 2006இல் பலுசிஸ்தான் தேசியவாத தலைவர் அக்பர் பக்திகொலைமற்றும்2007 ஆம்ஆண்டு அவசர நிலை பிரகடனம் உள்ளிட்ட வழக்குகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட முஷாரப் அண்மைக்காலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

அனைத்து வழக்குகளிலும் பிணை பெற்ற முஷாரப், சமீபத்தில் வீட்டு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.

ஆனால் நீதிமன்றம் அனுமதியில்லாமல் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளக்கூடாது என்று நிபந்தனை விதித்தது.



இந்நிலையில், பர்வேஷ் முஷாரப் வெளிநாடு செல்ல அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று அவரது வழக்கறிஞர் ஏ.கியூ.ஹேல் பொடோ, சிந்து உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.

அந்த மனுவில், டுபாயில் நோய் வாய்ப்பட்டிருக்கும் தனது 95 வயதான தாயாரின் உடல்நிலை குறித்து அறிய முஷாரப் அங்கு செல்ல வேண்டும் என்றும், இதற்காக பாகிஸ்தானை விட்டு செல்லக் கூடாது என்று விதிக்கப்பட்ட அரசின் கெடுபிடியை தளர்த்தி உத்தரவிடுமாறும் கூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்த நீதிபதிகள், இது தொடர்பில் 18ஆம் திகதிக்குள் பதிலளிக்க வேண்டும் என்று பாகிஸ்தான் அரசு துணை தலைமை வழக்கறிஞர், சிந்து மாகாண தலைமை வழக்கறிஞர் மற்றும் அரசுத்தரப்பு வழக்கறிஞர் ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

இந்நிலையில், பாகிஸ்தானில் அரசியலமைப்பு சட்டத்தை மீறிய வகையில் 2 முறை அவசர நிலையை பிரகடனப்படுத்திய குற்றத்துக்காக முஷாரப் மீது நேற்று புதிய வழக்கு ஒன்று தொடரப்படும் என உள்துறை அமைச்சர் சவுத்ரி நிசார் அறிவித்துள்ளார்.

இந்த வழக்கில் குற்றம் நிரூபிக்கப்படுமாயின் குறைந்தபட்சமாக ஆயுள் தண்டனையோ, அதிகபட்சமாக மரண தண்டனையோ விதிக்கப்படலாம் என சட்ட வல்லுநர்கள் கூறுகின்றனர். (2)

# பாகிஸ்தானை குறிவைத்து தாக்குதல் நடத்த தயார் தலிபான்கள் மிரட்டல்

(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தானில் முக்கிய இடங்களில் பேரழிவு தாக்குதல் நடத்துவோம் என தலிபான் தீவிரவாத அமைப்பு மிரட்டியுள்ளது.

பாகிஸ்தானில் செயற்படும் தெஹ்ரீக்-இ-தலிபான் இயக்க தலைவர் ஹகிமுல்லா மசூத் கடந்த முதலாம் திகதி அமெரிக்க உளவு விமானக் குண்டு வீச்சில் பலியானார். இதனால் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக தாக்குதல் நடத்துவோம் என தலிபான் தீவிரவாத அமைப்பு மிரட்டி வருகிறது.

இதற்கிடையில் அந்த அமைப்பின் செய்தித்தொடர்பாளர் புதிதாக வெளியிட்ட ஒரு அறிக்கையில், கூறியிருப்பதாவது,

அடுத்து இன்னும் சில நாட்களில் மற்றும் வாரங்களில் முக்கிய இடங்களில் மிகப்பெரிய பேரழிவு ஏற்படும் வகையில் தாக்குதல் நடத்தியிருக்கிறோம். இதற்காக தற்கொலைப்படையை அனுப்பி வைத்து விட்டோம் இவர்கள் அரசு, இராணுவ அலுவலகங்கள், ஆளுங்கட்சி மற்றும் அதன தோழமைக்கட்சி தலைவர்களை குறிவைத்து தாக்குவார்கள்' என தெரிவித்துள்ளார். (2)

# கறுப்புப்பண பட்டியலை வெளியிடுவோம்; மிரட்டுகின்றது உளவுத்துறை ஐ.எஸ்.ஐ.

(புவனேஸ்வர்)

பாகிஸ்தான் மீது நடவடிக்கை எடுப்பார்களாயின் இந்திய அமைச்சர்களின் கறுப்புப் பணபட்டியல் கணக்கை வெளியிடப்போவதாக பாக். உளவுத்துறை அமைப்பான ஐ.எஸ்.ஐ., மிரட்டுவதாக சுப்பிரமணியசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சுப்பிரமணியசாமி கூறியதாவது,

சமீபத்தில் பா.ஜ.க.,வில் இணைந்த சுப்பிரமணியசாமி, நேற்றுமுன் தினம் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார்.

அப்போது அவர் கூறுகையில்,

பாகிஸ்தான் மீது நம்நாடு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாயின் மத்திய அமைச்சர்கள், வெளிநாட்டில் சேர்த்து வைத்துள்ள கறுப்புப் பணம் பற்றிய விபரங்கள் முழுவதையும் வெளியிட்டு விடுவோம் என பாகிஸ்தானின் உளவுத்துறை அமைப்பான ஐ.எஸ்.ஐ., மிரட்டுகிறது.

**கறுப்புப்பணம் பரிமாற்றம்**

அமைச்சர்களின் கறுப்பு பணம் அனைத்தும் டுபாயில் இருக்கும் ஹவாலா கும்பலால்தான் அனுப்பப்படுகிறது.

ஆகவே ஐ.எஸ்.ஐ., மற்றும் தாவூத்



இப்ராகிமிற்கு தெரியாமல் எதுவும் நடக்கவே நடக்காது என்றார்.

**கறுப்புப் பணம் 120இலட்சம் கோடி ரூபா**

நம் நாட்டில் உள்ளவர்கள் , 70 வெளிநாட்டு வங்கிகளில் குவித்துள்ள கறுப்புப் பணம் மொத்தம் 120 இலட்சம் கோடி ரூபாவாகும்.

இதனை உடனடியாக இந்தியாவிற்கு கொண்டுவர ஒரே ஒரு வழி. அவசரகால சட்டம் தான். இதன் மூலம் அத்தனை பணத்தையும் இங்கு கொண்டு வந்துவிடமுடியும்.

இது நடக்க வேண்டும் என்றால் கொள்கை பக்கவாத நோய்பிடித்துள்ள ஐ.மு.,கூட்டணி அரசை மாற்றிவிட வேண்டும்.

அவ்வாறு செய்தால்தான் இந்தியா முன்னேறும். தீவிரவாதம் நாட்டிற்கு பெரும் சவாலாக இருக்கிறது. அதனை சமாளிக்க உறுதியான கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்றார். (2)

# நேபாள நாடாளுமன்ற தேர்தல் இன்று

(காத்மண்டு)

நேபாள நாடாளுமன்றத் தேர்தல் இன்று நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் அச்சமெதுவுமின்றி வாக்களிக்கும்படி, நேபாள மக்களை அந்நாட்டு இடைக்கால அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

நேபாள நாடாளுமன்றத்தில் உள்ள 601 இடங்களுக்கு இத் தேர்தல் நடைபெறுகிறது.

இதில் நேபாளத்தை சேர்ந்த 122 கட்சிகள் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. இதில் சுமார் ஒன்றரை கோடி பேர் வாக்களிக்கவுள்ளனர்.

இந்த தேர்தலை சீர்குலைக்கப் போவதாக மாவோயிஸ்ட் அமைப்பில் இருந்து பிரிந்து செயற்படும் சி.பி.என். அமைப்பு தெரிவித்துள்ளது. இதனால் முன் னெச்சரிக்கை நடவடிக்கையாக தேர்தல் பாதுகாப்பு பணியில் 2 இலட்சம் பாதுகாப்பு படையினரை அந்நாட்டு இடைக்கால அரசு ஈடுபடுத்தியுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு மாவோயிஸ்டு மற்றும் நேபாள இராணுவம் இடையே நடைபெற்ற சண்டை முடிவுக்கு வந்ததையடுத்து, நாடாளுமன்றத்திற்கு முதன் முறையாக தேர்தல் நடைபெற்றது.

அப்போது அரசியல் கட்சிகள் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை அடுத்து, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

அதனையடுத்து நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது தான் தேர்தல் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# ‘நான் சுவாசிக்கும் காற்று கிரிக்கெட்’ சரியான நேரத்தில் ஓய்வு பெற்றேன்

## சச்சின் டெண்டுல்கர்



கரிக்கெட் போட்டிகளில் இருந்து சரியான நேரத்தில் ஓய்வு பெற்றேன் என இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் மகத்தான சாதனை படைத்த சச்சின், தனது 200-வது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற்றார்.

நேற்று முன்தினம் மும்பையில் • பத்திரிகையாளர்களை சந்தித்த சச்சின் அளித்த பேட்டியில், மீண்டும் கிரிக்கெட் விளையாட முடியாதது, எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை, இது எனது கனவுப் பயணம்.

கிரிக்கெட்டை விட்டு விலகுவதில் வருத்தம் இல்லை, மிகச் சரியான நேரத்தில் ஓய்வை அறிவித்துள்ளேன்.

கிரிக்கெட் எனது வாழ்க்கை. நான் சுவாசிக்கும் ஆக்சிஜன். கடந்த 40 ஆண்டுகளில், 30 ஆண்டுகள் கிரிக்கெட்டுக்காக செலவழித்துள்ளேன்.

அதாவது என் வாழ்வின் 75 சதவீதம் கிரிக்கெட்தான் விளையாடி உள்ளேன். எனவே உடனடியாக எதிர்காலத்தில் என்ன செய்யப் போகிறேன் என்பதை கணிக்க முடியாது.

மைதானத்தில் உள்ள ஆடுகளம (பிட்ச்) கோயிலுக்கு சமம். ஏனெனில் என்னை ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராக மாற்றியது இந்த ஆடுகளம்தான்.

இது, என் வாழ்வில் தேவையான அனைத்தையும் அள்ளிக் கொடுத்தது. தேவைகளை பூர்த்தி செய்ய உதவிய ஆடுகளத்துக்கு நன்றி தெரிவிப்பதற்காகத்தான், கடைசி நாள் பிட்சை வணங்கி வட்டு வெளியேறினேன். இதுபோன்ற ஒரு சிறந்த தருணம் என் வாழ்வில் என்றும் கிடைக்காது.

தற்போதும் கிரிக்கெட்டை அதிகமாக நேசிக்கிறேன். கிரிக்கெட் வாழ்க்கையில், நிறைய காயங்களை சந்தித்த எனது உடலுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. இதனால் கிரிக்கெட்டில் இருந்து விலக முடிவு செய்தேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன், இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றது. இந்திய அணிக்காக உலகக் கிண்ணத்தை வென்று தர வேண்டும் என்ற எனது நீண்ட நாள் கனவு, 22 ஆண்டுகளுக்கு பின்தான் நிறைவேறியது.

இதனை என் வாழ்வின் சிறந்த தருணமாக கருதுகிறேன். இதே போல, கடைசி டெஸ்ட் போட்டிக்கு பின், ரசிகர்கள் கொடுத்த பிரியாவிடை என்றும் மறக்க முடியாதது.

சரியான நேரத்தில் நல்ல முடிவு எடுத்துள்ளேன் என்பதால், ஓய்வு குறித்த முடிவை அறிவித்த போது உணர்ச்சிவசப்படவில்லை. ஆனால், கடைசி நாளில் இந்த அளவு உணர்ச்சி வசப்படுவேன் என எதிர்பார்க்கவில்லை.

சகவீரர்கள் கொடுத்த பிரிவு உபசரிப்பு என்னை மனம் நெகிழச் செய்துவிட்டது. இந்தியாவுக்காக இனிமேல் விளையாட முடியாது என நினைத்த போதுதான் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டேன்.

அதிகளவு ரசிகர்கள் கூடியிருக்கும் மைதானத்தில், இந்திய அணிக்காக இருப்பது இதுவே கடைசி முறை. இந்தியாவுக்காக மீண்டும் ஆட முடியாது என்பதை நினைத்த போதுதான் கண்கள் குளமாகின.

இதேபோல டிரஸிங் ரூமில் மேற்கிந்திய தீவுகளின் அணி வீரர்களுக்கு கைகொடுத்த போது, இரண்டு கண்ணிலும் கண்ணீர் வழிந்ததால் தலை நிமிரவில்லை.

கிரிக்கெட்டில் சாதிக்க எனது தந்தை மற்றும் தாயார் கொடுத்த ஆதரவு முக்கிய பங்கு வகித்தது. குறிப்பாக எனது தந்தையின் ஆலோசனைகள் சிறப்பாக செயல்பட உதவியது.

எனது தாயார், கடவுளின் முன் இனிப்புகளை வைத்து பிரார்த்தனை செய்வார். போட்டியில் 15 ஓட்டங்கள் எடுத்தாலும், 100 ஓட்டங்கள் எடுத்தாலும் எனது குடும்பத்தினர் ஊக்கப்படுத்துவார்கள்.

குறிப்பாக எனது மூத்த சகோதரர் அஜித், இந்திய அணிக்காக விளையாடுவதற்காக நிறைய உதவிகள் செய்தார்.

ஒரு தந்தையாக செய்தியாளரகளிடம் கேட்கிறேன், எனது மகன் அர்ஜுனை அவன் வழியில் விட்டுவிடுங்கள்.

அவனுக்கு கிரிக்கெட் மீது அதிக ஈடுபாடு உள்ளது. தற்போது 14 வயதாகும் அர்ஜுனிடம், அவரது தந்தை போன்ற சிறப்பான செயல்பாட்டை எதிர்பார்ப்பது தவறு. இது மனதளவில் அதிக நெருக்கடி கொடுக்கும் என்று தெரிவித்துள்ளார்.

# புட்சல் கால்பந்தாட்ட போட்டி சென். பற்றிக்ஸ் சம்பியன்

புட்சல் கால்பந்தாட்ட போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி இரண்டாவது தடவையாகவும் சம்பியனாகியுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டுப் பிரிவு, யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கல்லூரியின் முன்னாள் அதிபர் கே.ஏ.செல்லையா ஞாபகார்த்த “புட்சல்” கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை நடத்தியது.

மேற்படி சுற்றுப்போட்டி 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், இவ்வருடம் ஆறாவது தடவையாக நடைபெற்றது.

புட்சல் கால்பந்தாட்டப் போட்டிகள் அணிக்கு 5 பேர் கொண்டதாகவும், வழமையான கால்பந்தாட்ட மைதானத்தினை விட சிறியதாகவும் இருப்பதுடன் போட்டி நிமிடங்கள் முழுமையாக 40 நிமிடங்களைக் கொண்டதாக இருக்கும்.

புட்சல்கால்பந்தாட்டச்சுற்றுப்போட்டிகள் இலங்கையில் பாடசாலை ரீதியில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டமை கே.ஏ.செல்லையா ஞாபகார்த்த சுற்றுப்போட்டியில் (2008) என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் பிக்னெல் மைதானத்தில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் 10 அணிகள் பங்கு பற்றியிருந்தன.

நொக்கவுட் முறையில் நடைபெற்ற ஆட்டங்களின் அடிப்படையில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் இளவாலை சென்.ஹென்றிஸ் அணியும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகின.

போட்டியின் ஆரம்பம் முதலே சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் ஆதிக்கம் மேலோங்கியிருக்க அவ்வணி அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டது.

முதல் பாதியாட்டம் 2:0 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வசமிருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் ஹென்றிஸ் அணி தாக்குதல் ஆட்டத்தில் ஈடுபடவே, ஆட்டம் விறுவிறுப்பாக சென்றது. எனினும் அந்த தாக்குதல் ஆட்டம் சென்.பற்றிக்ஸ் அணியின் பின்கள வீரர்களின் சாதுரியத்தால் தடுக்கப்பட்டது.

இரண்டாவது பாதியின் இறுதி நேரத்தில் சென்.பற்றிக்ஸ் அணி மேலும் ஒரு கோல் போட்டு தமது வெற்றியினை உறுதி செய்தது.

இறுதியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது தடவையாகச் சம்பியனாகியது.

கடந்த 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியிலும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுப்போட்டியின் தொடர் நாயகனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் எம்.தர்சனும், இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக அதே கல்லூரியின் ஏ.ஜெனட்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணிகள் மற்றும் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் வழங்கினார்.

# இருபது - 20 போட்டி இலங்கை – நியூசிலாந்து இன்று மோதல்

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் இருபது - 20 தொடரின முதல் போட்டி இன்று நடைபெறவுள்ளது. நியூசிலாந்து கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையேயான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள்தொடர் 1:1 எனற கணக்கில் சமநிலையானது.

இந்நிலையில் இருஅணிகளுக்கும் இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட 20 ஓவர் போட்டித் தொடரின் முதல் ஆட்டம் பல்லேகலேயில் இன்று நடைபெறவுள்ளது. இரு அணிகளும் சமபலம் பொருந்தியவை என்பதால் ஆட்டம் விறுவிறுப்பாக இருக்கும்.


# கிராண்ட் பிரி கார் பந்தயம் செபாஸ்டியன் உலக சாதனை

அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் நேற்று முன்தினம் யூ.எஸ். கிராண்ட் பிரி கார் பந்தயம் நடைபெற்றது.

பார்முலா 1 பந்தயத்தின் 18-வது சுற்றான இப்போட்டியில் நடப்பு சம்பியனும் ரெட் புல் அணி வீரருமான செபாஸ்டியன்வெட்டல்பந்தய தூரத்தை 1 மணி நேரம் 39 நிமிடம் 17 வினாடிகளில் கடந்து முதலாவதாக வந்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து சம்பியனாக இருந்து வரும் செபாஸ்டியன் வெட்டல் இந்த வெற்றியின் மூலம் தொடர்ந்து 8 முறை சம்பியன் பட்டம் வென்று உலக சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் 2004-ம் ஆண்டில் தொடர்ந்து 7 முறை வெற்றிபெற்ற ஜேர்மனியின் மைக்கேல சூமேக்கரின் சாதனையை செபாஸ்டியன் வெட்டல் முறியடித்துள்ளார். பார்முலா 1 கடைசி சுற்று வரும் 24-ம் தேதி பிரேசிலில் நடைபெறுகிறது. இதிலும



வெட்டல் வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் இப்போது நடைபெற்ற போட்டியில், லோட்டஸ் அணி சார்பாக விளையாடிய பிரான்சின் ரோமைன் குரோஜீன் இரண்டாவதாக வந்தார். செபாஸ்டியன் வெட்டலின் ரெட் புல் அணியை சேர்ந்த ஆஸ்திரேலியாவின் மார்க் வெப்பர் மூன்றாவதாக வந்தார்.

# சிறிசாந்துக்கு டும் டும் டும்



சூதாட்டத்தில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட இந்திய வீரர் சிறிசாந்துக்கு இந்திய கிரிக்கெட் சபை ஆயுள் தடை விதித்தது. இந்நிலையில் இவருக்கும், ஜெய்ப்பூரின் அரச குடும்பத்தை சேர்ந்த பெண்ணுக்கும் டிசம்பர் 12-ம திகதி குருவாயூர் கோவிலில் திருமணம் நடைபெறுகிறது. சிறிசாந்தை மணக்கப்போகும்பெண்ணின்பெயரை இதுவரைவெளியிடாமல்வைத்துள்ளனர்.

இதற்கிடையே இது காதல் திருமணம் என்ற தகவல் வெளியாகியுளளது. கடந்த 2006ம் ஆண்டு ஜெய்ப்பூரில் நடந்த கிரிக்கெட் போட்டியின் போது அந்தப் பெண்ணும், சிறிசாந்தும் சந்தித்து காதலில் விழுந்ததாக கூறப்படுகிறது. சிறிசாந்த் சூதாட்ட விவகாரத்தில்சிக்கிய போது, அவருக்கு ஆதரவாக இருந்ததுடன், தேவையான சட்ட உதவிகளையும் செய்து வந்தார் என கூறப்படுகிறது.

அந்தப்பெண்மட்டுமல்லாது, அவரது குடும்பமும் சிறிசாந்த்துக்கு ஆதரவாக இருந்ததாம், இதனை தொடர்ந்து இருவருக்கும் திருமணம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

# பிரித்தானியா இலங்கையிடம் தோல்வியடையக் கூடாது

## சீக்கியத் தலைவர் கோரிக்கை

போர்க் குற்றங்கள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் வெளிப்படையானதும் சுதந்திரமானதுமான விசாரணைகளை நடத்துமாறு இலங்கையிடம், பிரித்தானியா கோரியிருந்தாகவும் இந்த கோரிக்கை இந்தியாவுக்கும் பொருந்தும் என சீக்கிய அமைப்பான தல் கல்சா தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவரான பாய் ஹரிசரண்ஜித் சிங் தானி இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட கமரூன், உரிமை மீறல்கள் விசாரணை நடத்துமாறு முறைசார விதத்தில் இலங்கை ஜனாதிபதியிடம் கூறியதாக நம்பப்படுகிறது. எனினும் கமரூன் தெரிவித்த விடயம் தொடர்பில் எப்படியான நடவடிக்கை எடுக்க போகிறார் என்பது குறித்து சீக்கியர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதியிடம் முன்வைத்த கோரிக்கையை போன்று 1984 ஆம் ஆண்டு இந்தியாவில் சீக்கியர்கள் மீது மேற்கொண்ட படுகொலைகள் தொடர்பில் வெளிப்படையான சுதந்திரமான விசாரணைகளை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் அது தோல்வியடைந்தது.

ஜனநாயகத்தின் தொட்டிலான பிரித்தானியா இந்தியாவிடம் தோல்வியடைந்து போல் இந்த விடயத்தில் இலங்கையிடம் தோல்வியடைந்து விடக் கூடாது.

விடுதலைப்புலிகளுடனான இரத்தம் தோய்ந்த மோதலில் அப்பாவி தமிழர்கள் கொலை செய்யப்பட்டமை குறித்து விசாரணை நடத்துமாறு பிரிட்டன் விடுத்த கோரிக்கையை இலங்கை ஜனாதிபதி குப்பைக் கூடையில் எறிந்து விடக் கூடும். (எ-11)

# பொதுநலவாய நகலை எரித்தவர்கள் கைது

(கொழும்பு)

தமிழ்நாடு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொதுநலவாய மாநாட்டு விதிமுறை நகலை தீயிட்டு கொளுத்தி சவப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்ய முயன்ற 33 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கையில் "பொதுநலவாய" மாநாடு நடத்தியதற்கு கண்டனம் தெரிவித்தும், இலங்கையில் மாநாடு நடத்தியதால் "பொதுநலவாய" விதிமுறைகள் இறந்து விட்டதாக கூறியும், மாநாட்டு விதிமுறை நகலை தீயிட்டு கொளுத்தி சவப் பெட்டியில் அடக்கம் செய்யும் நூதனப் போராட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத்தினர் மற்றும் தமிழ் ஈழ விடுதலை மாணவர் கூட்டமைப்பினரும் பொள்ளாச்சியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதற்கு, பெரியார் திராவிடர் கழக பொள்ளாச்சி நகரச் செயலாளர் வெள்ளியங்கிரி, மண்டலச் செயலாளர் கா.சு.நாகராசன், ஆனைமலை நகரச் செயலாளர் ஹரிதாஸ், தமிழ் ஈழ விடுதலை மாணவர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் உள்ளிட்டோர் போராட்டத்திற்கு முன்னிலை வகித்தனர்.

இதையறிந்த பொலிஸார் நகலை தீயிட்டு கொளுத்தி சவப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்ய முயன்றதை தடுத்ததுடன், போராட்டத்தில் ஈடுபட்ட 33 பேரை கைது செய்தனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-11)

## சர்வதேச குற்றச்...

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளில் 289 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரிந்துரைகளை அமுல்படுத்துவதன் மூலம் சர்வதேச சமூகத்தின் பல குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட குறுங்கால யோசனைகள் அனைத்தும் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய கால அடிப்படையில் பரிந்துரை செய்யப்பட்ட யோசனைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

எவ்வாறெனினும், சில பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது.

இலங்கையின் சுயாதீனத்தன்மைக்கு உலக நாடுகள் மதிப்பளிக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தத்தில் தோல்வியைத் தழுவிய காரணத்தினால் மேற்குலக நாடுகள் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றன.

புலிகள் யுத்தத்தில் வெற்றியீட்டுவார்கள் என மேற்குலக நாடுகள் எதிர்பார்த்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் புலம்பெயர் மக்களின் அழுத்தம் காரணமாக இலங்கை மீது மேற்குலக நாடுகள் அழுத் தங்களை பிரயோகித்து வருவதாக ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (எ-11)

## புலிகள்...

விடிவு நிச்சயம் என பா.ஜ.க அகில இந்திய தேசியச் செயலாளர் டாக்டர் தமிழிசை சவுந்தர்ராஜன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் முழு உரிமையுடனும் கூடிய அதிகாரத்தை அனுபவித்து சுதந்திரமாக வாழ வேண்டும். அவ்வாறான சூழ்நிலை தாமதமானால் எமது ஆட்சியில் நிச்சயம் என பாரதிய ஜனதாக் கட்சியின் அகில இந்திய தேசியச் செயலாளர் டாக்டர் திருமதி தமிழிசை சவுந்தர்ராஜனிடம் லங்காசிறி வானொலியின் வட்டமேசை அரசியல் களம் நிகழ்வில் தெரிவித்தார். (எ-11)

## இலங்கை...

மனித உரிமை விவகாரங்களில் அனைத்து நாடுகளுடனும் பேச்சு மற்றும் தொடர்பாடல் மூலம் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் கொள்கையை நாம் எப்போதும் பேணி வருகிறோம்.

அனைத்துலக மனித உரிமைகளை ஊக்குவிக்க ஆக்கபூர்வமாக செயற்படுகிறோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள சீனா முதல் முறையாக இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் குறித்து, ஆச்சரியமளிக்கும் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை தோற்கடிப்பதற்கு சீனா தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஒருங்கிணைப்பு...

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் வடக்கு மாகாணசபை புதிதாக அமைக்கப்பட்ட பின்பு இன்று முதலாவதாக இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கூட்டத்தில் வடக்கு முதலமைச்சரின் இணைத்தலைமை பற்றி எமக்கு விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

வடக்கு மாகாண ஆளுநரா அல்லது முதலமைச்சரா இந்தக் கூட்டத்திற்கு இணைத்தலைவர் என்பது தொடர்பாக அறிவிக்கப்படாத காரணத்தால் இந்தக் கூட்டத்தை புறக்கணிக்க தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் இந்த வருடத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த பல மாதங்களாக நடைபெறாமல் இழுபறிநிலையிலிருந்தது. இந் நிலையில் இன்று காலை மாவட்ட செயலகத்தில் இடம்பெறும் என அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## தமிழ்க் கூட்டமை...

பின் பிரதிநிதிகள் இந்தியப் பிரதமரை சந்திக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவிற்கு செல்லும் குழுவில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், இரா.சம்பந்தன் உள்ளிட்டோர் அங்கம் வகிப்பர் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் இந்திய பிரதமரை சந்திக்கும் முன்னர் தமிழக அரசியல் தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த தயாராகி வருவதாக அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன. (எ-11)

## படையினர் மூலம்...

அறிமுகப்படுத்தி கொண்டனர்.

ஊடகவியலாளர்கள் விசா விதிமுறைகளை மீறி ஜனாதிபதி மாளிகைக்குள் செல்ல முயற்சித்துள்ளனர் என்று அவர்கள் குற்றம் சுமத்தினர்.

இது ஒரு அச்சுறுத்தும் அனுபவமாக இருந்தது. அச்சுறுத்தலான பிரசாரங்களால் எமது பணிகளை தடுக்க முடியாது. இலங்கைக்கு செல்வோர் எப்போதும் காணமுடியாத வெள்ளை வான்களை அங்கு காணலாம் என்றார்.

விருது பெற்ற ஆவணப்படங்களான போர் தவிர்ப்பு வலயம் மற்றும் இலங்கையின் கொலைக்களம் ஆகியவற்றை உருவாக்கியதன் காரணமாக இந்த ஊடக குழுவினரை இலக்கு வைத்து இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. (எ-11)

## வெளிநாட்டு...

னர். இதனடிப்படையில் பார்த்தால் ஒரு தலைவருக்கு தலா 70 கோடி ரூபாவுக்கும் மேலான பணத்தை அரசாங்கம் செலவிட்டுள்ளது.

பிரித்தானிய இளவரசர் சாள்ஸின் பிறந்த தினத்தை முன்னிட்டு வெட்டப்பட்ட கேக்கின் விலை என்ன என்பதை அறிந்து கொள்ளும் தேவை மக்களுக்கு உள்ளது.

நான் முன்வைத்த இந்த புள்ளி விபரங்கள் தவறாக இருந்தால் சரியான புள்ளி விபரங்களை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றேன் என்றார்.

நாட்டை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் வழியை மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் திறந்து விட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தினார்.

இலங்கையின் பிரதமராக இருந்த் ரணில் விக்ரமசிங்க ரோம் உடன்பாட்டில் கைச்சாத்திடவில்லை என்பதால் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லும் சந்தர்ப்பம் தடுக்கப்பட்டது என்றார். (செ-11)


ஆண்டு 6-இல் நெஞ்சம் நெகிழும் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1923 - 06 - 22

ஆண்டவன் அடியில் 2007 - 11 - 12



அமரர் திருமதி

செல்லத்துரை தங்கம்மா

திதி : துதியை

ஆண்டு ஆறு வந்தது அம்மா
வெள்ளை உள்ளமும் வேக நடையும் கொண்ட
என் ஆருயிர் அன்னையே!
கண்ணீர் தோன்றி மறைகிறாயே - அம்மா
பிறப்பு உண்டேல் மீண்டும் ஒருமுறை
வாரும் அம்மா:

நிதம் உன் பிரிவால் வாடும் நின் சேய்
- செல்லத்துரை பவானி -
(instrouctor)

(4525)



## பதவி வெற்றிடங்கள்

- SUPERVISOR (மேற்பார்வையாளர்)
- ASS. MANAGER (துணை முகாமையாளர்)
- MANAGER (முகாமையாளர்)
- STORE KEEPERS (களஞ்சியப்படுத்துனர்)
- ACCOUNTS

இதோ எமது Canadian Companyயில் அடிப்படைத் தகைமையான O/L உடன் எம்முடன் இணைந்து நிரந்தரமாகப் பணிபுரிய ஓர் அரிய சந்தர்ப்பம்.

பல்வேறுபட்ட பதவிகளுக்கு துடிப்பும் ஆர்வமும், வேலை தேடுபவராகவும் நீங்கள் இருந்தால் இன்றே எம்முடன் இணையுங்கள்.

அடிப்படைச் சம்பளம் 12,000/= - 15,000/= பின் 50,000/=

தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்

0776219536, 0771906728

(4524) வெளிநாட்டில் பணிபுரியும் வாய்ப்புக்களும் வழங்கப்படும்



## காணி விற்பனைக்கு உண்டு

யாழ். பல்கலைக்கழகத்தின் முன் வீதியில் ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள முக்காற்பரப்பு (3/4 பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

T.P: 0777502915, 0773567641 (4518)



## ஆரம்பமாகின்றது...

கமநல சேவை உத்தியோகத்தர்களுக்கான போட்டிப்பரீட்சை வகுப்புக்கள் Online இல் வீடியோ ஊடாக 40 மணி நேரம் நடைபெறும்.

ஆரம்பம் : 24.11.2013

Note : ஒரு பிரிவில் 50 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவர், 8 பிரிவுகளாக வகுப்புக்கள் நடைபெறும். மேலதிக விபரங்களுக்கு:

http:/www.grade4-5scholarship.com

077-8999940, 07516575556 (4522)



## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.



## வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்

வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிப்ளோமா-1yr டிகிறி-2Yrs

G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும்.முடிவுதிகதி24Nov

பல்கலைக்கழக மாணவர்கள் உத்தியோகத்தர்களும் பயிலலாம்.

மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

புலமைப்பரிசிலிற்கு:Type <BIT><your name> & send to 772 395 895

BatchI:sunday only 8am,Batch II:sat&sun2PM,BatchIII:Mon-Thu 4.30pm

(C-5510)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.